நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR
சரிநிகர்

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் - 222 பெப். 18 - 24, 2001 விலை - 12/-

போர் நிறுத்தம் வேண்டாம்?
உண்ண வழியில்லை: உடுத்திடவோர் துண்டில்லை
விண்ணை இடிக்கிறது விலையெனினும்' - அன்னாய் கேள்
கண்ணீர் குருதியுடன் காணாத் துயர் மலிவாய்
உண்டெமக்கேன் இப்பவொரு ஓய்வு?
ஈழமோகம்





## ஆப்பிழுத்த குரங்குகளாய் மலையகக் கட்சிகள்





## சுயநிர்ணய உரிமை - ஒரு சர்ச்சை







## தெனாலி - ஆளவந்தான் - குறையும் குண்டு மழையும்





# போர்... கொடுக்கின்ற விலை!



## இது போராடும் காலம்

நன்றி - நூலகத்திட்டம்



# விளம்பரங்களில் சாதிப்பெயரைத் தடுக்குக!

## பிரான்ஸில் சனதருமபோதினி வெளியீட்டு விழாவில் தீர்மானம்

இலங்கையிலிருந்த வெளியாகும் தமிழ்ப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களில் சாதிப்பெயர்கள், சாதிக்குறிகள் வெளியிடப்படுவதை குறித்த வெளியீட்டு நிறுவனங்கள் தவிரிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தோழர் யோவல் போல் அவர்களின் நூற்றாண்டு நினைவாக பெப். 04ம் திகதி பிரான்ஸில் நடைபெற்ற சனாதரும போதினி வெளியீட்டு விழாவிவேயே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எல்லாவற்றையும் சந்தேகியுங்கள்: விசேடமாக வெள்ளாளனைச் சந்தேகியுங்கள்.

தன்னை திரும்பவும் திரும்பவும் சாதியத்துக்கு எதிரானவன் என்று நிரூபிக்காதவரை ஒவ்வொரு வெள்ளாளனும் சாதி வெறியனே! என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அத்தீர்மானத்தில் இருபதுக்கு மேற்பட்டோர் கையொப்பம் இட்டுள்ளனர். அத்தீர்மானத்தை அப்படியே கீழே தருகிறோம்.

இலங்கையிலிருந்து வெளிவரும் தேசிய நாளிதழ்களான வீரகேசரி, தினக்குரல், தினகரன் போன்ற பத்திரிகைகளில் நீண்ட நெடுங்காலமாக விளம்பரப் பகுதிகளில், சமூகத்தின் ஆண்டாண்டு காலக் கசடாகிய சாதீயப் படிநிலைகளை முன்னிறுத்தி திருமண விளம்பரங்களைப் பிரசுரித்து வருகிறார்கள். வருணாச்சிரமச் சூதால் திணிக்கப்பட்ட சாதீய முரண்களை, சாதீயக் கொடுமைகளை, மானுட விரோதத்தை கட்டிக் காப்பாற்றுபவர்களாகவே இவ் விளம்பரங்களைப் பிரசுரிக்கும் பத்திரிகையாளர்களை நாங்கள் கருதுகிறோம்.
எனவே சாதீயம் சொல்லி வெளியிடும் விளம்பரங்களை வீரகேசரி, தினக்குரல், தினகரன் போன்ற பத்திரிகைகள் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டுமென நாங்கள் வலியுறுத்துகிறோம். நிர்ப்பந்திக்கிறோம்.
எழுந்தமானமாக நாங்கள் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றவில்லை. வேறெந்த அமைப்புக்களினதோ, இயக்கங்களினதோ, நிறுவனங்களினதோ பின்னணியுடனும் நாங்கள் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றவில்லை.
நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்ட சாதீயக் கொடூரங்களுக்கு எதிராக களங்களிலும், நுண்தளங்களிலும் நடைபெறும் கலகங்களின்/போராட்டங்களின் தொடர்ச்சியாகவே நாங்கள் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகிறோம். சாதீயம் காப்பாற்றும் விளம்பரங்களை இப்பத்திரிகைகள் நிறுத்தும் வரை இப்பிற்போக்கு பத்திரிகைகளை நிராகரிக்குமாறு ஒவ்வொருவரையும் நாம் கோருகிறோம்.

குறிப்பாக இப்பத்திரிகைகளில் இலக்கியப்புனைவுகள், அரசியல் விவாதங்கள் எழுதியும், பேட்டிகள் வழங்கியும் வரும் ஊடகச் செல்வாக்கு மிகுந்தவர்களான கா.சிவத்தம்பி, சி.சிவசேகரம், எம்.ஏ.நுஃமான், சித்திரலேகா, செல்வி திருச்சந்திரன், கே.எஸ்.சிவகுமாரன், லெனின் மதிவாணம், மு.பொன்னம்பலம், வ.ஐ.ச.ஜெயபாலன், சு.வில்வரத்தினம், தெ.மதுசூதனன், ந.ரவீந்திரன்... போன்றவர்கள் இச்சாதீய விளம்பர ஒழிப்பு விசயத்தில் முன்கை எடுக்க வேண்டுமென்று நாங்கள் தோழமையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

மாற்றுப்பத் [illegible]கைகளான சரிநிகர், ஆதவ[illegible], மூன்றாவது மனிதன், பெண், யாத்ரா போன்ற பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் சாதீயம் காப்பாற்றும் பத்திரிகைகளுக்கு மேல் அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமென உரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

புலம்பெயர் சிறுபத்திரிகைகள், மாற்றுக்கலாசார அமைப்புக்கள் போன்றவை இத்தேசிய பத்திரிகைகள் 'சாதீய விளம்பரங்களை' நிறுத்தும் வரை இப்பத்திரிகைகளை நிராகரிக்க வேண்டுமென்றும், உரிமையுடனும், தோழமையுடனும் கேட்டுக் கொள்கிறோம்.

ஒப்பங்கள்:

தேவா ஹெரால்ட், சி.புஸ்பராசா, அ.தேவதாசன், இ.அந்தோனிப்பிள்ளை, கைலைநாதன், செ.சுந்தரலிங்கம், கு.வனஜா, விஜி, ஜெபா, கோவை நந்தன், அர்விந் அப்பாத்துரை, சி.பிரியதர்சினி தி.உமாகாந்தன், எம்.ஆர்.ஸ்ராலின், சி.மனோகரன், உதயகுமார், ச.தில்லை நடேசன், சு.கருணாநிதி, இயல்வாணன், இ.குணரத்தினராசா, அருந்தவம், ஷோபாசக்தி, சுகன் (இலக்கிய் சந்திப்பு சார்பில்) கற்சுறா

எக்ஸில், அம்மா, சுட்டுவிரல் போன்ற பத்திரிகைக் குழுக்களும் இதை வலியுறுத்துகின்றன. மேலும் இத்தீர்மானத்தை பரந்த மட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்காகவும், மாற்றுக் கருத்துக்கள், அபிப்பிராயங்களுக்காகவும் இச்சாதீய விளம்பர ஒழிப்புப் போராட்டத்தில் தங்களையும் ஈடுபடுத்துவோர் தங்கள் பெயர், முகவரி போன்றவற்றை தொடர்ந்து இவ் இணையத்தில் பதிந்து கொண்டு உங்கள் நண்பர்களுக்கும் அனுப்பி இறுதியாக குறித்த மின்னஞ்சலுக்கே திருப்பி அனுப்பவும்.

நன்றி.

இணையம், மின்னஞ்சல் ஆகியவற்றின் முகவரி அடுத்த இதழில் தரப்படும்.

# உங்களுக்கு அனுமதி இல்லை!

கடந்த மாதம் மட்டக்களப்பில் தைப்பொங்கலை முன்னிட்டு இராணுவத்தினரால் களியாட்ட நிகழ்வொன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்வுக்கு நகர்ப் பகுதியிலுள்ள பாடசாலைகளிலிருந்து மேலைத்தேய இன்னிய அணிநடையில் மாணவர்களைப் பங்குபற்றுமாறு படையதிகாரிகள் கேட்டிருந்தனர்.

வின்சன்ட் மகளிர் தேசிய பாடசாலை தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் அந்நிகழ்வில் பங்கு பற்ற மாணவர்களை அனுப்பி வைக்கவில்லை.
இதனால்
வின்சன்ட் மகளிர் கல்லூரி தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் தமது பாடசாலைகளின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிக்கான பயிற்சிகளில் வெபர் மைதானத்தில் ஈடுபடுவதற்கு படையினர் அனுமதி வழங்குகிறார்களில்லை.

வெபர் மைதானம் நகர் பகுதியிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்குமான பொதுவான விளையாட்டு மைதானமாகும். இம்மைதானம் இராணுவத்தின் பிடியிலே தற்போதுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இப்படியும் ஒரு கதை!

ஜானக பெரேரா ஓய்வு பெறும் நேரத்தில் பாதுகாப்புப் படையினர்
மட்டக்களப்பில் நடைபெற்ற படுகொலைகள் யாவற்றுக்கும் தாங்களே பொறுப்பு எனப் பகிரங்கமாக ஒத்துக் கொண்டுள்ளது, ஏற்கனவே கிழக்கில் நடைபெற்ற படுகொலைகள் தொடர்பாக ஜானக பெரேரா மீதுள்ள மனித உரிமைகள் தொடர்பான வழக்குகளுக்கு வலுவூட்டுவதாக உள்ளதாக படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

படுகொலைகள் நடந்ததாகக் கூறப்படும் அந்தக் காலகட்டத்தில் ஜானகவே இப்பகுதிகளுக்குப் பொறுப்பானவராக இருந்தவர்.

ஜானக பெரேராவுக்கு சட்ட ரீதியான இறுக்கம் இதனால் ஏற்படலாம் என கொழும்பிலுள்ள இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஜானக பெரேராவை இப்படி நெருக்கடிக்குள் தள்ளுவதற்கு இன்னமொரு காரணமிருக்கின்றது. ஜானக பெரேரா ஒரு ஐ.தே.கவின் ஆதரவாளர். இதனால் இவருக்கான பதவி உயர்வு கூட வழங்கப்படவில்லையாம்.

# ஷக்கியின் பதவிக்கு வேட்டு!

கடந்த சரிநிகரில் 'அனோஜாவின் பெயரைச் சொல்லி அடித்த பணம் எங்கே' என்ற தலைப்பிலான கட்டுரை தொடர்பாக இராணுவ மட்டத்தில் பலத்த சலசலப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கெல்லாம் முன்னாள் பிரிகேடியர் ஷக்கி தான் காரணம் என்று படைத்தரப்பு உயர்மட்டத்தில் கருதப்படுகின்றது.

ஷக்கி தற்போது இராணுவத் தலைமையகத்தில் மாஸ்டர் ஜெனரல் பகுதியில் கடமையாற்றுகின்றார். தற்போது இராணுவப் புலானாய்வுப் பணிப்பாளராக இருக்கும் கென்றி விதாரண ஓய்வுபெறப் போகின்றார்.

இந்த இடத்துக்கு ஷக்கி நியமிக்கப்படவிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் தற்போது ஷக்கி மீது எழுந்துள்ள இந்த சந்தேகம் ஷக்கியின் பதவிக்கு வேட்டுவைக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

---

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் நடாத்தும்

## அறிமுக நிகழ்வு

பெண்களின் குரல் (ஒலிநாடா)
உயிர்வெளி (கவிதைத் தொகுப்பு)
இடம்:
மட்டு.சார்ஸ் மண்டபம்
காலம்
17.02.2001 (சனி மு.ப - 10மணி)
தலைமை
மா.மங்களேஸ்வரி (சட்டத்தரணி)
உரை:
ஜெ.தில்லையம்மா (சூர்யா பெ.அ.நி)
சி.ஜெய்சங்கர் (கிழக்குப் பல்கலைக்கழகம்)
ரூபி வலண்டினா பிரான்சிஸ் (விரிவுரையாளர் கி.ப.க)

---

## ஓவிய கண்காட்சி

மட், மகாஜன கல்லூரி மண்டபம்
17,18 பெப்ரவரி 2001
காலம்:9.30 முதல் 5.00 வரை

மட், ஓவிய ஆசிரியர் சங்கம், மட், ஓவியர்கள்
இணைந்து நடாத்தும்
ஓவியக் கண்காட்சி

தலைமை
செல்வி இராஜினி நடராஜா
உதவி கல்விப் பணிப்பாளர்(அழகியல் கலை)
பிரதம விருந்தினர்
பேராசிரியர் சி.மௌனகுரு
தலைவர் நுண்கலைத்துறை கிழக்குப் பல்கலைக்கழகம்.
சிறப்பு விருந்தினர்
திரு.கே.பாஸ்கரன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்(கல்வி அபிவிருத்தி)
கலந்துரையாடல்
18 பெப்ரவரி 2001, காலை 10.00மணி

---

மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையத்தின் ஏற்பாட்டில்

## சண்முகதாசன் நினைவுப் பேருரை

காலம்:
18 பெப்ரவரி 2001
இடம்:
பெண்கள் கல்வி ஆய்வு நிலையம்
இல:58, தர்மராம மாவத்தை,
வெள்ளவத்தை
தலைமை
பேராசிரியர் சி.சிவசேகரம்
பிரதம உரை
இலங்கை இனநெருக்கடியும் இடதுசாரி இயக்கமும்
கலாநிதி சுமணசிறி லியனகே
* சண்முகதாசன் எழுதிய
அரசு பற்றிய மாக்ஸிச கோட்பாடு
(மீள்பிரசுரம்) நூல் வெளியிட்டு வைக்கப்படும்

நன்றி - நூலகத்திட்டம்



# சந்திரிகா — பிரதமர் இருவருமே ஒருவர் தான்!

— நாசமறுப்பான்

"பி ந்துனுவெவ நிகழ்ச்சி தொடர்பாக அரச மட்டத்தில் இரண்டு விதமான போக்குகள் நிலவுகின்றன. இந்த நிகழ்ச்சி மட்டுமல்ல, இதுபோன்ற எல்லா இனவாத நிகழ்ச்சி குறித்தும் இப்போக்கு நிலவுவதை நாம் அங்கு காணலாம். ஒரு புறத்தில் பிந்துனுவெவ முகாமில் இருந்தவர்கள் புலிகளே... அவர்களைக் கொல்வதில் தவறில்லை. அவர்கள் எப்படியும் கொல்லப்பட்டிருக்க வேண்டியவர்களே என்ற கருத்தும், மறுபுறத்தில் இக் கொலையைச் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். இக் கொலைக்கும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் நிச்சயம் சம்பந்தம் இருந்திருக்கிறது என்று கருதும் ஒரு போக்கும் அங்கு நிலவுகிறது. முதலாவது கருத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் பிரதமர் உள்ளிட்ட தீவிர இனவாதப் போக்குள்ள அரசியல்வாதிகள். இவர்கள் சம்பிக்க ரணவக்க போன்ற தீவிர இன வெறியர்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ளார்கள். இரண்டாவது தரப்பினர் ஜனாதிபதி, மங்கள சமரவீர மற்றும் "ஜனநாயக சக்திகளின் கூட்டினர் ஆவர்... இந்த இரண்டாவது தரப்பினர் நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதான நிலைதோன்ற வேண்டும் என்று கருதுபவர்கள்...."

-இவ்வாறு சொல்லிக்கொண்டு போனார் எனது நண்பரான சிங்களப் பத்திரிகை ஒன்றின் முன்னாள் ஆசிரியர் ஒருவர். ஜனாதிபதி உண்மையில் சமாதானத்தை விரும்புகிறார். ஆகவே



அவரது கரத்தை நாம் வலுப்படுத்த வேண்டும் என்று கருதுபவர் இவர். சமாதானம், ஜனநாயகம், அரசியல் தீர்வு போன்ற வார்த்தைகளை அவற்றை எந்த அரசியல்வாதிகள் உச்சரிக்கிறார்கள் என்று பார்க்காது அவற்றினை அகராதி அர்த்தப்படி நம்பிவிடுகிற அப்பாவித்தனமான ஒரு மனிதர் அவர். இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த போது நாட்டிலே தமிழர்களும், சிங்களவர்களும் இனி ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல இணைந்து விடுவார்கள் என்று நம்பி அந்த நம்பிக்கை ஏற்படுத்திய ஆர்வத்துடன் எழுதி வந்தவர்.

ஒரொரு சமயம், இவரிடம் இருப்பது வெறும் அப்பாவித்தனம் தானா அல்லது ஏறக்குறைய எல்லாச் சமாதானவாதிகளும், ஜனநாயகவாதிகளும் அன்று செய்தது போன்ற காரியார்த்தமான - செயற்பாடா என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டதுண்டு. ஆனால், எனது அந்த ஐயத்தை நிவர்த்தி செய்து கொள்ளும் சந்தர்ப்பம் அவருக்குக் கிட்டவில்லை. சமாதானமும் ஜனநாயகமும் பேசிய பலரும் விரைவிலேயே அரசாங்க அமைச்சர்களின் நண்பர்கள் ஆனார்கள். அரசாங்கப் பதவிகளில் ஆலோசகர்களாகவும், அமைப்பாளர்களாகவும், அதிகாரிகளாகவும் முட்டிக் கொண்டார்கள். சமாதானம், ஜனநாயகம் குறித்த அவர்களது பேச்சுக்கள் விரைவிலேயே காற்றோடு கரைந்து போயின. அரசாங்கம் பேச்சுவார்த்தை நடாத்திய காலமெல்லாம், புலிகளிடம் மாட்டுப்பட்டுவிட வேண்டாம் என்று அதற்கு ஆலோசனை வழங்கிக் கொண்டிருந்தார்கள். சமாதானப் பேச்சு முறிந்து யுத்தமும் வெடித்த போது, 'புலிகள் சமாதானத்துக்கு எதிரானவர்கள் என்று அப்போதே சொன்னோமே பார்த்தீர்களா' பாணியில் தமது விமர்சனத்தை வெளிப்படுத்தினார்கள்.

இவற்றைச் சொன்னதன் மூலமாக அவர்கள் மேலும் மேலும் அரச உயர் ஸ்தானங்களை நோக்கிச் சென்றார்கள். ஆனால், நண்பர் அதே இடத்திலேயே இருந்தார். வெறும் பத்திரிகையாளராக நடந்த நிகழ்வுகளை அவதானித்தபடி.

(ஆயினும், அவரால் இந்த நம்பிக்கைகளிலிருந்து முழுதாக விடுபட முடியவில்லை. இப்போது இதைச் சொல்கிறார்.)

ஆனால், இந்த இரட்டை நிலை அல்லது இரண்டு போக்கு நிலவும் நிலை எல்லாக் காலங்களிலும் இருந்து வந்திருக்கிறது. ஏன் ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் கூட இத்தகைய போக்கு நிலவியதை நாம் காணக் கூடியதாக இருந்தது. உண்மையில் இந்த இரண்டுபட்ட போக்குகள் ஒரு அரசாங்கத்தில் எல்லாக் காலங்களிலும் நிலவுதல் சாத்தியமே. ஆனால், எது அரசாங்கத்தின் சிந்தனையையும், செயலையும் தீர்மானிக்கிற போக்காக இருக்கிறது என்பது தான் உண்மையில் முக்கியமானது. சில தமிழ்ப் பத்திரிகையாளர்களிடமும், கூட இத்தகைய மயக்கம் இருக்கவே செய்கிறது. தனிப்பட்ட முறையில் சந்திரிகா பண்டாரநாயக்கா இப் பிரச்சினைக்கான தீர்வுக்குரிய மார்க்கமாக எதைக் கருதுகிறார் என்பது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் முக்கியமற்ற ஒன்றாகி விடுகிறது. அவர் ஜனாதிபதி என்ற முறையில் என்ன சொல்கிறார் என்பது கூட சந்தர்ப்பங்களில் முக்கியமற்ற ஒன்றாகி விடுகிறது. ஏனென்றால், சொல்பவற்றைச் செய்ய வேண்டும் என்பதுவும், செய்பவற்றையே சொல்ல வேண்டும் என்பதும் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு தேவையற்ற கருத்து என்று எப்போதோ ஒதுக்கப்பட்டு விட்டது. ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் சமாதானம், ஜனநாயகம், பேச்சுவார்த்தை என்பன பற்றிப் பேசினார். பேசுகிறார். யுத்தத்தில் அழிந்து கொண்டிருப்பது பற்றி அவரை விட அழகாக அவரது கட்சியில் வேறு யாராலும் பேசமுடியும் என்று தோன்றவில்லை. அவ்வளவுக்கு உணர்வு பொங்கப் பேசுவார். ஆனால், அவரது செயற்பாடுகள் என்ன சொல்கின்றன?

அவர் சமாதானத்தை நடைமுறைப் படுத்துவதற்காக ஏதாவது ஒரு சிறிய கல்லைத் தானும் தூக்கிப் போட்டிருக்கிறாரா?

பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்த காலத்திலேயே, பேசிக் கொண்டிருந்த தரப்பினர் தொடர்பாக தீவிரமான விமர்சனத்தை முன்வைத்தார். பேச்சுவார்த்தை உடைந்து போவதுக்குரிய தீவிரமான சகல செயற்பாடுகளும் அரசு தரப்பில் நடந்து கொண்டிருக்க அதைப் பார்த்தபடி - அதைத் தட்டிக் கொடுப்பதாக காட்டிக் கொள்ளாவிட்டாலும் - மௌனமாக இருந்தார். அரசியல் தீர்வை நடைமுறைக்கு கொண்டுவரப் போவதாகச் சொன்னார். பாராளுமன்றத்தில் அதற்காக அவர் தயாரித்த புதிய அரசியல் யாப்பை விவாதத்துக்கு விடப்போவதாகவும் சொன்னார். ஆனால், வாக்கெடுப்பில் அது வெற்றி பெறுவதற்கு மிக அடிப்படையான ஐ.தே.கவுடன் ஒரு உடன்பாட்டுக்கு வருவதற்குப் பதில், எதிர்க்கட்சியாக ஆக்குமளவுக்கு தீவிரமாக அதைத் தாக்கினார்.

அந்த விவாதமும் பிறகு நடக்காமலேயே மசோதா வாபஸ் பெறப்பட்டது. அது மட்டுமல்ல, ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்காகவே தான் அந்தப் பதவிக்கு வந்ததாக, வந்த புதிதில் அறிவித்தார். அறிவித்தது மட்டுமல்லாமல், அதற்கு நாட்குறிக்கவும் செய்தார். ஆனால், நாளது வரை அதை இல்லாமற் செய்தவதற்காக ஒரு மயிரளவு முயற்சியிலும் அவர் ஈடுபட்டதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் ஜனாதிபதியின் கையைப் பலப்படுத்துவது என்ற சொல்லின் அர்த்தம் என்ன? காலம் காலமாக இடதுசாரிக் கட்சிகள் கூறிவந்த 'பலப்படுத்தும்' கருத்தின் அடியாக வருகிற வெறும் அர்த்தமிழந்த வார்த்தை தான் அது. ஜனாதிபதியின் கையைப் பலப்படுத்துவதன் மூலமாக அவரது ஜனநாயகக் கருத்துக்களை நாம் பலப்படுத்தவில்லை. சமாதானம் பற்றி அவர் கூறுபவற்றை நாம் பலப்படுத்தவில்லை, பேச்சுவார்த்தையை நோக்கிச் செல்வதற்கான அவரது முடிவை நாம் பலப்படுத்தவில்லை. மாறாக, அவரது அரசாங்கத்தின் பிரதான போக்கை நாம் பலப்படுத்துகிறோம். யுத்தத்தை நாம் பலப்படுத்துகிறோம். சமாதானத்துக்கு உள்ள சகல வாய்ப்புக்களையும் அடைப்பதற்கான நடவடிக்கைகளை நாம் பலப்படுத்துகிறோம்.

இந்தக் கருத்துக்களை எனது நண்பர் மட்டுமல்ல, சில தமிழ்ப் பத்திரிகையாளர்கள், புத்திஜீவிகள் கூட ஏற்க மறுக்கிறார்கள்.

உண்மையில், இந்த அரசாங்கத்தின் தலைவராக ஜனாதிபதி சந்திரிகா இருந்த போதும், அவர் சமாதானம், ஜனநாயகம் பற்றிப் பேசிய போதும், அதனுள் ஆதிக்கம் செலுத்தும் கருத்தாக இருப்பது சிங்கள இனவாதம் தான். அரசாங்கத்தின் இருப்பும், ஸ்திரப்படுத்தும் அந்த அடித்தளத்தில் தான் தங்கியுள்ளது என்பதை ஜனாதிபதி நன்கே அறிவார். ஆகவே அந்த அடித் தளத்தில் 'வெடிப்பினை' ஏற்படுத்தக் கூடிய எந்தவொரு செயலையும் அவர் செய்யப் போவதில்லை. செய்ததும் இல்லை.

அவரது 53வது சுதந்திரதினவிழாப் பேச்சின் போது கூட மிகவும் அவதானமாக அவர் இந்த அடித்தளத்தைப் பாதுகாக்கும் விதத்தில் தான் தனது உரையை நிகழ்த்தியுள்ளார். அவரது பேச்சில் தெரிந்த யுத்தத்தின் மீதான வெறுப்பும், அமைதியும், சமாதானமும், சுபீட்சமும் கொண்ட நாட்டின் மீதான காதலும் பலரையும் மயக்கிவிடக் கூடியவை. அவர் கொணரவிருக்கும் சமாதானத்திற்கு புலிகள் தான் குந்தகமாக இருக்கிறார்கள் என்பதை முழுதாக நம்பவைக்கக் கூடியவை. ஆனால், அவரது இந்தப்பேச்சு சமாதானத்தை விரும்புகிற, ஜனநாயகத்தை நேசிக்கிற மக்களுக்கு இனிப்பூட்டுகிற அதேவேளை, தமது யுத்தத்தின் வெற்றியையும், புலிகளின் தோல்வியையும், படைவீரர்களின் வீரத்தையும் பற்றிப் பேசி இனவாதிகளை மகிழ்வூட்டவும் மறக்கவில்லை.

அவர்கள் எதிர்பாக்கிற புலிகள் முழுமையாகப் பலவீனமடைந்து செயலற்றவர்களாகிவிட வேண்டும் என்ற நிலையையே தானும் எதிர்பார்க்கிறார் என்பதை அவரது பேச்சுத் தெளிவுபடுத்தியது. பலமான புலிகளைவிட பலவீனமான புலிகளுடன் பேசுவதன் மூலமே இனவாதத்தின் விருப்புக்கேற்ற விதத்திலான ஒரு உடன்பாட்டுக்கு வரமுடியும் என்பதை அவர் அறிவார். அப்படிச் செய்வது தான் தனது தனிப்பட்ட அதிகாரப் பலத்தினையும், செல்வாக்கையும், கொண்டிருக்க உதவும் என்று அவர் கருதுகிறார்.

இந்த நிலைப்பாடு எந்தவிதத்திலும் உண்மையான சமாதானத்திற்கான ஒரு நிலைப்பாடு அல்ல. பலவீனமான புலிகள் ஒப்புக் கொள்ளும் விதத்திலான ஒரு தீர்வு நிச்சயமாக நிரந்தரமான ஒரு தீர்வாக இருக்க முடியாது. அது மீண்டும் வெடித்து, பழையபடி யுத்தத்தையும் அவலத்தையும் திரும்பவும் கொண்டு வரும்.

ஆனால், இதுவும் ஜனாதிபதிக்குத் தெரியாதல்ல. அவருக்கு மிகவும் தெளிவாகவே இது தெரியும். ஒரு சம்பிக்க ரணவக்கவுக்கும், ரட்ணசிறி விக்கிரமநாயக்காவுக்கும் ஒருவேளை இது தெரியாமல் இருக்கலாம். ஆதிக்க வெறியும் அதிகார மனோபாவமும் கொண்ட பல்லின பல்கலாசார உறவுகள் பற்றிய புரிதல் எதுவும் அற்ற இவர்கள் ஒருபோதும் அப்படிச் சிந்திக்கப் போவதில்லை. அடக்கி ஒடுக்குவதன் மூலமாகவும், ஆதிக்கம் செய்வதன் மூலமாகவும் தம்மால் நிலையான அதிகாரத்தில் இருக்க முடியும் என்ற கோட்பாட்டில் தீவிர நம்பிக்கை கொண்டவர்கள் அவர்கள். ஆனால், ஜனாதிபதி அவ்வளவு முட்டாள் அல்ல. தந்தையாரைப் போலவே அவரிடமும் கூர்மையான பார்வையும் புரிதலும் இருக்கவே செய்கின்றன.

ஆனால், துரதிருஷ்டம் என்னவென்றால், தந்தையரதும் மகளதும் கூரிய பார்வையும் புரிதலும் வெறும் 'புலமைத்துவப் புரிதலுக்கு' அப்பால் செல்லவில்லை. அதிகாரத்தினதும் பதவியினதும் மீதான வெறி அவர்களை இந்தப் புரிதலை புறமொதுக்க வைத்து விட்டது.

கடந்த காலத் தவறுகளை சரியாக இனங்காணும் சந்திரிகா அவர்களுக்கு நிகழ்கால நிகழ்வுகளை திட்டமிட முடியாமல் இருப்பது இந்தப்பதவிவெறி காரணமாகத் தான்.

ஆக, இதை ஆழமாக யோசித்தால், எனது நண்பர் சொன்ன இந்த இரண்டு அணிக்கும் உள்ள உறவுக்கும், வேறுபாட்-



டுக்கும் என்ன காரணம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். சிங்கள பௌத்த மேலாதிக்கக் கருத்தியலின் இரு வேறு கூறுகள் இவை. மேலாதிக்கக் கருத்தியலை ஏற்றுக் கொண்டுள்ள ஒரு கூறு அதை நடைமுறைப் படுத்துவதில் அரைமனத் தன்மையைக் காட்டுகிறது. அங்குமிங்குமாக ஊசலாடுகிறது. அந்த ஊசலாட்டம் 'அதிகாரம்' என்ற கொழுக்கியால் ஒரு பக்கமாக இழுத்துப் பிடிக்கப்படுகிறது. இது பெரும்பாலும் புத்திஜீவித்தன்மையைக் கொண்ட அணி. மற்றைய அணி உறுதியாக அந்த மேலாதிக்கத்தை அடைய விரும்புகிறது. அதற்காக செயற்படத் தயாராக இருக்கிறது. அதனிடம் எந்த ஊசலாட்டமும் இல்லை. அதிகாரம் அதன் செயற்பாட்டுக்கு மிகவும் உறுதுணையாக நிற்கிறது.

ஆனால், நவீன அரசியற் சூழலில் வெகுஜன வாக்கெடுப்பு அரசாங்க முறையின் கீழ் இந்த இரண்டாவது அணியால் தனித்து நின்று செயற்பட முடியாது. முதலாவது அணியின் தலைமை அதற்குத் தேவை. அதன் வழிகாட்டல் அதற்குத் தேவை. முதலாவது அணிக்கும் தனிப்பட்டு செயற்பட முடியாது. அதன் கருத்துத் தளத்தைப் பலப்படுத்த செயற்படுத்த ஒரு பலமான 'செயற்பாட்டணி' தேவை.

இதில் வரும் முதலாவது ஜனாதிபதி சந்திரிகாவின் அணி. மற்றையது பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்கவின் அணி.

ஆக, இரண்டும் ஒன்று தான். இதில் ஒன்றைப் பலப்படுத்துவது மற்றையதைப் பலவீனப்படுத்தும் என்பது வெறும் அர்த்தமற்ற கதை.

இதை விளங்கிக் கொள்வது நமக்கும் நாட்டுக்கும் விடுதலைக்கும் சேமம்!

நன்றி - நூலகத்திட்டம்



# கொள்ளையர்க்கும் அவர்களுக்கும் இடையில் என்ன உறவு?

— விவேகி

கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு பெப்.03ம் திகதி இரவு 10.30மணிக்குப் புறப்பட்ட புகைவண்டிப் பிரயாணிகள் மேல் கொள்ளையர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளார்கள். கொள்ளையருக்கு எதிர்ப்புத் தெரிவித்த பயணிகள் இருவருக்குக் கத்திக்குத்துக்கள் விழுந்துள்ளன. கத்திக்குத்துக்கு இலக்கான மரியநாயகம், கணபதிப்பிள்ளை திருமாவளன் ஆகியோர் திருமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள்.

இது "வெறும் செய்தியல்ல" தமிழ்ப்பகுதி புகைவண்டிகள் மேல் தொடராக நடத்தப்பட்டு வரும் கொள்ளையர் கைவரிசையின் ஓரங்கமே. நன்கு திட்டமிட்ட ஒரு கூட்டு முயற்சியாக இது நீண்ட காலமாக நடைபெற்று வருகிறது என்பது இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது.

ஜன 26 திகதியும் இத்தகைய ஒரு கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

கொள்ளையர்கள் வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய புகையிரதப் பயணிகளிடமே பெரும்பாலும் அடிக்கடி தங்கள் கைவரிசையைக் காட்டுவதில் தீவிரமாக இருந்து வருகிறார்கள். தென்னிலங்கைப் பகுதிகளில் எப்போதாவது ஒரு ரயில் கொள்ளை நடந்தாற்கூட இரண்டொரு நாட்களில் மடக்கிப் பிடித்துவிடும் பொலிசார் தமிழ்ப் பகுதிக் கொள்ளைகளில் காட்டி வரும் மெத்தனப் போக்கே கொள்ளையருக்கு உற்சாக மூட்டி வருவதாகத் தெரிகிறது.

கொள்ளையர்களில் மூவர் ராகம நிலையத்திலிருந்து ஏறியதாகச் சில பயணிகள் கண்டிருக்கிறார்கள். இவர்கள் சாதாரண பயணிகள் போல் நடந்து கொண்டார்கள். வேறு மூவர் வேறு வேறு நிலையங்களில் இருந்து ஏறி இணைந்து கொண்டிருக்கிறார்கள். அனைவரும் எவரும் சந்தேகம் கொள்ளாதபடி ஜாக்கிரதையாக நடந்து கொண்டதோடு, இளைஞர்களுடன் இணைந்து ஆடியும், பாடியும் வந்திருக்கிறார்கள்.

நேரம் செல்லச் செல்ல பயணிகள் தங்களை மறந்து தூங்க ஆரம்பித்த வேளை தான் கொள்ளையர்கள் ஆறுபேரும் விழிப்புடன் தங்கள் செயலில் இறங்கினார்கள். அதிகாலை 4 மணியளவில் தங்கள் திட்டப்படி திடீரென எழுந்த கொள்ளையர்கள் கத்திகளைக் காட்டிச் சத்தம் போட வேண்டாம் என்ற எச்சரிக்கையுடன் ஒவ்வொரு பயணியாகத் தட்டி எழுப்பி உடமைகளை அபகரித்திருக்கிறார்கள்.

இது இரண்டாம் வகுப்புப் பெட்டியிலேயே தொடங்கப் பட்டிருக்கிறது. ஒரு பகுதியில் நடந்த கொள்ளை மறுபகுதி ஆசனங்களில் இருப்போருக்குத் தெரியமுடியாதபடி நேர்த்தியாகவும் அமைதியாகவும் கொள்ளையர் செயல்பட்டிருக்கிறார்கள்.

தனது மனைவியின் சங்கிலியை அறுக்க முயன்றபோது தடுக்கப்போன மரியநாயகம், பணத்தைத் தரமாட்டேன் என்று எதிர்ப்புக் காட்டிய திருமாவளவன் ஆகியோர் கத்தியால் குத்தப்பட்ட போது பெண்கள் போட்ட கூக் குரல்கள் தான் கொள்ளை நடைபெறுவதை எல்லோருக்கும் தெரியப்படுத்தியிருக்கிறது. கொள்ளையர்கள் இந்தக் கூக்குரல்களின் பின் முன்னரை விட விழிப்புடன் செயல்பட்டிருக்கிறார்கள். "யாராவது படை வீரர்கள் பொலிஸ் என்று சொல்லிக் கொண்டு "கலர்ஸ் காட்ட வெளிக்கிட்டால் சுட்டுத்தள்ளி விடுவேன்" என்று கொள்ளையன் ஒருவன் கைத்துப்பாக்கியைக் காட்டி மிரட்டியபோது பயணிகளால் எதுவும் செய்ய முடியவில்லை.

அவசர அவசரமாக முடிந்த அளவு பணத்தையும் நகைகளையும் பறித்துக் கொண்ட கொள்ளையர்கள் ஆறுபேரும் புகைவண்டி நேகம நிலையத்தில் தரித்தபோது இறங்கி ஓடிவிட்டார்கள். பயணிகள் இறங்கி நேகம புகையிரத நிலைய அதிபரிடம் முறையிட்ட போது "நான் என்ன செய்ய முடியும்?" என்று கேட்டாராம்.

கோபமடைந்த பயணிகள் புகையிரதப் பாதுகாவலர்களிடம் தங்களுக்கு நேர்ந்த நிலைமையை விளக்கி, புகையிரதப் பாதுகாப்புக்கு என வந்த நீங்கள் எங்கே போனீர்கள் என்று கேட்டபோது "உங்களுக்கு உதவுவதற்காக நாங்கள் உயிரைக் கொடுக்கவா?" என்று கேட்கிறார்கள்.

அடுத்த நிலையங்களான கலாவெவ நிலையத்திலும், கெக்கிராவ நிலையத்திலும் புகையிரத நிலைய அதிபர்கள் பொறுப்பு எதுவும் இன்றி அலட்சியமாகப் பதில் கூறியிருக்கிறார்கள்.

நேகம புகையிரத நிலையம் ஒரு சிறிய தரிப்பிடம். அங்கு எந்தப் பயணி இறங்கினாலும், ஏறினாலும் புகையிரத நிலைய ஊழியர்களுக்குத் தெரியாதவர்களாக இருக்க முடியாது. எனவே அங்கு இறங்கிய ஆறு கொள்ளைக் காரர்களுக்கும் புகையிரத நிலைய ஊழியர்களுக்கு நன்கு பரிச்சயப்பட்டவர்களாகவே இருப்பார்கள் என்பது பயணிகள் தரப்பு நிலைப்பாடு.

ஒரு காட்டுக்கிராமத்தில் அந்தக் கிராமத்தவர்களுடன் தொடர்பில்லாத ஒரு குழு எங்கே தங்க முடியும்? என்ன செய்ய முடியும்? என்று பயணிகள் கேட்டதில் நியாயம் இல்லாமல் இல்லை. கடைசியில் புகையிரதப் பயணிகள் விடயத்தில் திருகோணமலை புகையிரத நிலைய அதிகாரிகள் தாம் கரிசனையுடன் நடந்து கொண்டிருக்கிறார்கள்.காயமடைந்தவர்கள் விடயத்தில் அதிக அக்கறை எடுத்து ஆஸ்பத்திரிக்குப் போவதற்குக் கடிதமும் கொடுத்து விட்டிருக்கிறார்கள்.

ஆனால், இவர்கள் விடயத்தில் ஆஸ்பத்திரியோ நிர்வாகமோ பொறுப்பின்றி ஏனோ தானோ பாணியில் நடந்து கொண்டிருக்கிறார்கள். சக பயணிகள் என்ற வகையில் உதவிக்கு வந்தவர்களுடன் சீறிச் சினந்திருக்கிறது. வாசலில் நிற்கும் கூலியாள் தொடக்கம், மாபெரும் வைத்திய அதிகாரிகள் வரை தாங்கள் சந்தித்த நபர்கள் பண்பாக நடந்து கொள்ளவில்லை என்று காயப்பட்டோருக்கு உதவச் சென்றவர்கள் கவலைப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ்ப் பகுதிக்குச் செல்லும் புகையிரதங்களில் கொள்ளை நடப்பதென்பது சர்வசாதாரணமான ஒன்று. கொள்ளையர்கள் புதிய புதிய உத்தியைக் கையாளுகிறார்கள். சில கொள்ளையர் பயணத்தின் போது நகைகள் அணிந்து ஜன்னலோரத்தில் இருப்பவர்களை நோட்டமிடுகிறார்கள். வசதியான நிலையங்களில் இறங்கி நின்று, புகையிரதம் புறப்படும் வேளையில் நகைகளை இழுத்து அறுத்துக் கொண்டு சென்று விடுகிறார்கள்.

சிலர் இரண்டாம், மூன்றாம் வகுப்பு உறங்கலிருக்கையில் பயணம் செய்து கொண்டே அருகிலிருக்கும் வசதிபடைத்த தமிழர்களை நோட்டமிடுகிறார்கள். தமக்கு வாய்ப்பான புகையிரத நிலையம் நெருங்கும்போது தாங்கள் சி.ஐ.டி என்று போலி அடையாள அட்டையை அவர்களிடம் காட்டி விசாரிக்க வேண்டும் என்று கீழே தன் [illegible] அழைத்துச் சென்று உடைமைகளை அபகரித்து விட்டு மறைந்து விடுகிறார்கள்.

இந்தக் கொள்ளைகளில் உள்ள பொதுவான விடயம் சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் புகைவண்டி சென்று கொண்டிருக்கும்போது நடைபெறுவது தான். கொள்ளையர்கள் போதைப் பொருள் பாவனையாளர்களாக இருக்கலாம் அல்லது இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களாக இருக்கலாம் என்ற அபிப்பிராயமே பயணிகளிடம் அதிகமாகக் காணப்படுகிறது.

எதுவாக இருந்தாலும், ஒரு பயணி புகைவண்டி பயணச்சீட்டு, எடுத்துப் புகைவண்டியில் ஏறினால் அவர் சென்று இறங்க வேண்டிய இடம்வரை அவருக்கும் அவரது உடைமைக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டிய பொறுப்பு புகையிர்தத் திணைக்களத்துடையது என்பதை ரெயில்வே அதிகாரிகள் மறந்து போயிருப்பதும், நாடகத்துக்கு வேஷம் போட்டது போல் அங்கும் இங்கும் மிடுக்காக புகையிரதத்தில் நடைபழகும் பாதுகாப்பு ஊழியர்கள் கொள்ளையர் கைவரிசையைக் காட்டும் போது பதுங்கிக் கொள்வதும் கொள்ளையருக்கு வாய்ப்பாகப் போய்விடுகிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏறுகின்ற - இறங்குகின்ற பயணிகள் விஷயத்திலும் கடுமையாக நடந்துகொள்ளும் பொலிஸ் திணைக்களம் கூட கொள்ளையர்கள் ஏறும் இறங்கும் இடங்களில் தங்கள் கடுமையைக் காட்ட முன் வருவதில்லை. சாதாரண உடையில் பொலிசார் பயணம் செய்தாலும் கூடக் கொள்ளையரை இலகுவாகப் பிடித்து விட முடியும்.

பயணிகள் ஒன்றை அடித்துக் கூறுகின்றார்கள். கொள்ளைக்காரர் களுக்கும் புகையிரத பகுதி ஊழியர்களுக்குமிடையில் நெருக்கமான உறவு இல்லாவிட்டால் தொடராகக் கொள்ளைகள் இடம் பெற முடியாது என்பது தான் அது.

## காதல் தேவதைகள்!

நீண்ட நாட்களுக்குப்பிறகு, யாழ்ப்பாணத்திலிருந்து வந்த நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தேன்.

யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தைக்கான புலிகளின் நிலைப்பாடு, அங்குள்ள மக்களின் நிலை என்பன குறித்து பல விடயங்களையும் பேசிக் கொண்டிருந்தோம். இடையிலேயே சுவாரஸ்யமான ஒரு தகவலை அவர் சொன்னார்.

'யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு சில இடங்களில் இராணுவத்தினருக்கு அங்குள்ள பெண்கள் மீது காதல் ஏற்பட்டிருக்கிறது.... இராணுவத்திற்கு காதல் வருவது பிரச்சினை இல்லை. ஆனால், எங்கடை ஆக்களுக்கு மெல்லே அவையள் மீது காதல் வருகிறது" எனக்கு மெல்லிய சிரிப்பு வந்தது. சிரித்தபடியே கேட்டேன்:

"அதிலே என்ன தப்பு? இந்திய இராணுவம் வந்தபோதும் கூட இது நடந்தது தானே?"

"அதிலே தப்பு ஒன்றும் இல்லை. அவர்களுக்கு காதல் வந்தது பற்றி எனக்கு அக்கறையும் இல்லை... ஆனால்...."

"ஆனால்."

"ஆனால், இந்தக் காதல் தேவதைகள், தங்கடை தனிப்பட்ட பிரச்சினைகளில் பழிவாங்க இதைப் பயன்படுத்துவதுதான். எனது வீட்டிற்கு அருகிலுள்ள ஒரு குடும்பத்துக்கு இது நடந்தது. இரண்டு நிமிடத்திலை குடும்பத்தோடை அள்ளிக் கொண்டு போய் உள்ளை போடவைப்பன் என்று ஒரு தேவதை மிரட்டியது எனக்குத் தெரியும்..."

எனக்கு ஆச்சரியம் வரவில்லை. புலிகள் அதிகாரத்தில் இருந்த போதும், இந்தியன் ஆமி அதிகாரத்தில் இருந்த போதும், இப்படிச் சம்பவங்கள் நடந்து தான் இருந்தன. இப்போது மட்டும் அப்படி நடக்க முடியாது, என்று எப்படிச் சொல்வது?

அவரிடமே திருப்பிக் கேட்டேன். கோபத்துடன் என்னை முறைத்த அவர் கேட்டார்:

"நீ சரிநிகரிலையா வேலை செய்கிறாய்?"

கேள்வியின் அர்த்தமும், எரிச்சலும் எனக்குப் புரிந்தது.

ஆனாலும், தமிழ்த் தேசிய உணர்வு எல்லா மனித இயல்புகளையும் முழுமையாக மாற்றிவிடும், விட வேண்டும் என்று நம்பும் அப்பாவித்தனத்தை என்ன செய்ய?

நான் மௌனமாய் இருந்தேன்.

## கிரிக்கெட்டும் சயனைட்டும்!

அலுவலகத்திற்கு வந்த அருட் தந்தை ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தேன். அவர் ஒரு தமிழர்.

கொழும்பிலுள்ள கத்தோலிக்க தேவாலயம் ஒன்றைச் சேர்ந்தவர். நாட்டின் சமூக அரசியல் பிரச்சினைகளில் அக்கறைக் கொண்டவர். மலையக மக்களின் வாழ்நிலை மேம்பாடு குறித்தும், அவர்களது அரசியல் சமூக விழிப்புணர்வு குறித்தும் அக்கறையான செயற்பாடுகள் அவசியம் என்று கருதுபவர். அதற்காக முடிந்தளவு செயற்பட்டு வருபவர்.

கொழும்பிலுள்ள தமது தேவாலயத்திற்கு வருகை தரும் இளைஞர்களது சமூகப் பிரக்ஞையை வளர்க்கும் நோக்குடன் சில கருத்தாடல்களை செய்ய விரும்பி யாரையாவது ஒழுங்கு செய்து தரமுடியுமா என்று கேட்டார்.

நான் ஒரு சிலரின் பெயரைச் சொன்னேன். 'இப்படி எல்லாம் செய்ய வேண்டும் என்று உங்களுக்கு தோன்றியதன் காரணம் என்ன' என்று கேட்டேன்.

அவர் சொன்னார்:

"பாருங்கள் எமது சமூகம் எப்படிப் பிளவுற்றுக் போய் இருக்கிறது என்று... ஒருபுறம் சயனைட் கட்டியபடி போராடும் இளைஞர்கள். மறு புறம் சதாகாலமும் கிரிக்கட் மட்டையும் கையுமாய் திரியும் இளைஞர்கள். இந்தப் பிளவுண்ட நிலையை இணைப்பது அவசியமில்லையா?

அவரது கேள்வியின் ஆழமும், அதில் பொதிந்திருந்த சமூக அக்கறையும் என்னை வியக்க வைத்தன.

(அவரது முயற்சியுடன் சம்பந்தப்பட்ட விரும்புவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்)

எல்லா மதகுருமார்களும் இவ்வாறு சிந்திப்பார்கள் என்றால் இந்த நாட்டின் பிரச்சினைகள் எவ்வளவு இலகுவாகத் தீர்க்கப்படக் கூடும் என்று தோன்றியது.

## காதலர் தினம்!

காதலர் தினத்தைக் கொண்டாடும் காதலர்களுக்கு இம்முறை ஒரு பெரிய சங்கடம்.

தமது காதலர்களுக்கு பரிசில்கள் கொடுப்பது, அவர்களுடன் சேர்ந்து உலாப்போவது, பேசி மகிழ்வது என்று அதைக் கொண்டாட நினைத்திருந்த அவர்களுக்கு ஒரு புதிய சிக்கல் தோன்றியிருக்கிறது.

அது தான் அரசாங்கம் அறிவித்த காதலர் தினத்திற்கான புதிய விளக்கம். பெப்ரவரி 14ம் திகதி நடக்கும் இந்தக் கொண்டாட்டத்தினை 'நாங்கள் எங்கள் படையினரை நேசிக்கிறோம்' என்ற கோசத்தின் கீழ் கொண்டாட ஒழுங்கு செய்துள்ளது அரசு. இதை முன்நின்று நடத்துபவர் அமைச்சர் மங்கள சமரவீரவின் கூட்டமைப்பு செயலாளர்.

இந்த 'நேசிக்கப்படும்' படையினர் யார் தெரியுமா? இப்போது யுத்தகளத்தில் நிற்பவர்களும், தடை முகாம்களில் கடமை செய்பவர்களும் தான் அந்தப்பேறு பெற்றவர்கள்.

பாடசாலை மாணவர்கள் கூட இதைச் செய்யலாமாம். செய்ய வேண்டுமென்பதற்காக கல்வி அமைச்சு 'புத்தக அடையாள'ங்களைக் கூட தயார் செய்திருக்கிறது.

படையில் இல்லாத ஒருவர் உங்கள் காதலராக இருந்து இல்லாவிட்டால் என்ன செய்வது?

சங்கடத்தை விட்டுவிடுங்கள். இன்னொருவரை நேசிக்கக்கூடாதா என்ன?

வாழ்க காதல்!

நன்றி - நூலகத்திட்டம்



# சுயநிர்ணய உரிமை

## மேலும் சில குறிப்புகள் - 3

– சிசைரோ

பகுதி -III

இதன்படி பார்ப்பின் போராடும் ஒரு தேசத்தின் பாட்டாளி வர்க்கத்தின் பங்குபற்றலானது அப்போராட்டத்தைச் சர்வதேச மட்டத்திலான போராட்டமாக மாற்றும் என்பது லெனினது பார்வையாகும். சிறிய நாடுகளின் சுதந்திரத்தை ஆதரிக்கும் கடப்பாட்டிலிருந்த அவர் அதேவேளை ஆக்கிரமிப்பானது எந்தப் பெயரில் வந்தாலும் அதை எதிர்க்க வேண்டும் என்ற கோட்பாட்டிலிருந்து பின்வாங்கவில்லை என்பதையும் கவனிக்கலாம். இதுபற்றிய போதிய விளக்கமின்றிய திரிபுவாதிகள் பின்னாட்களில் தேசிய எழுச்சிப் போராட்டங்களை ஒன்றில் அவை வெறும் இன, மத, மொழி ரீதியிலான வெறிபிடித்த போராட்டங்கள் என்றோ அல்லது முதலாளித்துவத்துக்குச் சாமரம் வீசுவதற்கான மறுவடிவம் என்றோ சாதிக்கத் தலைப்பட்டார்கள். வேறுசிலர் பொருளாதார சுதந்திரமின்றி சுயநிர்ணய உரிமை கிடையாது என்றும் சுயமான பொருளாதார அத்திவாரமில்லாத குழுவொன்றின் போராட்டம் வெற்றியளிப்பது சாத்தியமில்லை என்றும் அது மேலும் அடிமைத் தனத்துக்கே இட்டுச் செல்லும் என்றும் வாதிட்டு வந்துள்ளனர். இதனை ஈழத்தில் ஏற்பட்ட போராட்ட அனுபவங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது வாசகர்களது கடமையாகும்.

சோவியத் அக்காலப்பகுதியில் வெளியிட்ட பல்வேறு பிரகடனங்களை ஆராயும் ஒருவர் லெனினும் ஏனைய சோவியத் தலைவர்களும் சுயநிர்ணய உரிமை என்பது மூன்று பிரதான அங்கங்களைக் கொண்டிருந்தது என்ற முடிவுக்கே வரமுடியும். முதலாவது கருத்தில் தமது தலைவிதியை சுதந்திரமாகத் தீர்மானிக்க விரும்பும் ஓர் இனத்துவ அல்லது தேசியக் குழுவினால் இது உதவிக்கழைக்கப்பட முடியும். இரண்டாவதாக, இறைமையுள்ள இரு நாடுகள் தமக்குள் இராணுவ ரீதியில் பொருதிக் கொள்ளும் போது அல்லது அதன் பின்னர் அவற்றுள் ஏதேனும் ஒன்றுக்கு ஆள்புலங்களை உரியதாக்குவதில் பாவிக்கப்படலாம். மூன்றாவது பொருளில், முற்றிலுமே குடியேற்ற வாதத்துக்கு எதிரான போராட்டம் என்று எடுத்துக்கொண்டால் எல்லாக் குடியேற்றநாடுகளதும் விடுதலைக்கான போராட்டமாகவும் கொள்ளப்படலாம். இதில் இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட அம்சமான ஆள்புலங்களை இணைத்தல் என்பதில் பிரெஞ்சுப் புரட்சியின் அம்சங்களே கூடுதலாக விரவி நிற்பதைக் காணலாம். அதாவது ஓர் ஆள்புலம் ஒன்று அதன் மக்களது விருப்புக்கு எதிராக இன்னொன்றுடன் இணைக்கப்படுவதைத் தடுக்க வேண்டும் என்பது பிரெஞ்சுப் புரட்சியாளர்களது சுயநிர்ணய உரிமைக்குரலாக இருந்தது. அங்ஙனம் பார்க்கையில் முதலாவதும் மூன்றாவதும் பெருமளவுக்குப் புதிய வரவுகள் என்றே கூறவேண்டும்.

சுயநிர்ணய உரிமை பற்றிய முதலாவது அம்சத்தின் கீழ், அதாவது இனத்துவ அல்லது தேசியக் குழுக்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் உரிமை சம்பந்தமானது என்றளவில் - எல்லா இனத்துவக் குழுக்களுமே இந்த உரிமையைக் கொண்டிருப்பதாகக் கருதப்பட்டது. குடியேற்ற ஆட்சிக்கு உட்பட்ட மக்களுக்கு மட்டுந்தான் இந்த உரிமை உரியது என்ற பொருளில் இதனை சோவியத் யூனியன் வலியுறுத்தி வந்ததாகக் கூறமுடியாது. இங்கே இக்குழுக்கள் தாமே வேறாகப் பிரிந்து போகத் தீர்மானிக்கலாம். அல்லது மாற்றாக, பாரிய அமைப்பொன்றுக்குள்ளாக மீந்திருந்து கொண்டு சுயாட்சி உரிமையைக் கோரி நிற்கலாம். முதலாம் உலகப் போரின் போதும் அதற்கும் பிந்திய காலப்பகுதியிலும் வெளியிடப்பட்ட சோவியத் பிரசுரங்கள் பலவும் இந்த இரண்டில் இரண்டாவது வகைக்கே தமது விருப்பினைக் காட்டி நின்றன. உதாரணமாக, சோவியத் யூனியனின் 1918 ஆம் ஆண்டுக் குடியரசு அரசியலமைப்பில் சோவியத் குடியரசுகள் யாவற்றுக்குமே சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டிருந்ததோடு பிரிந்து போவதற்கான அவற்றின் உரிமையும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

குடியேற்றவாதத்துக்கு எதிரான கருத்துப்பாடு என்றளவில் சுயநிர்ணய உரிமையானது அந்நிய ஆட்சிக்கு உட்பட்டவர்கள் தமது சுதந்திரத்துக்காகப் போராடும் உரிமையை நியாயப்படுத்துவதாக இது புரிந்து கொள்ளப்பட்டது. இக்கோட்பாடு குடியேற்றவாதத்துக்கு எதிரான அதனது நிலைவிளக்கத்தின்படி தீர்க்கமுனையும் பிரச்சினைபற்றியும் அதன் எதிர்பார்ப்புக்கள் பற்றியும் அப்போதைய சோவியத் வெளிவிவகார அமைச்சர் செச்செரின் 1922 இல் லெனினுக்குப் பின்வருமாறு எழுதினார்:

'உலக யுத்தத்தினால் அடக்குமுறைக்கும் குடியேற்றத்துக்கு உட்பட்டதுமான மக்களின் விடுதலை இயக்கங்கள் தீவிரம் பெற்று வருகின்றன. --- எமது சர்வதேச வேலைத்திட்டமானது அடக்கப்பட்ட எல்லா குடியேற்ற நாடுகளையும் மக்களையும் சர்வதேச நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டும். எல்லா மக்களதும் பிரிவினை அல்லது சுயாட்சி உரிமையும் அங்கீகரிக்கப்பட வேண்டும் - - -.'


சுயநிர்ணய உரிமை பற்றிய இக்கருத்தேற்பின் பின்னால் நிற்பது சோசலிஸம் தான் என்பதைப் புரிந்து கொள்ளுதல் சிரமமன்று. தனது Theses என்ற தொகுப்பில் லெனின் வெற்றிகரமான சோசலிஸம் என்பது கட்டாயமான முழுச் சனநாயகந்தான் என வலியுறுத்தியுள்ளார். சர்வதேச மட்டத்தில் சோசலிஸமும் ஜனநாயகமும் கையோடு கைகோர்த்துப் போக முடிந்தது. வெற்றிகரமான சோசலிஸம் என்பதால் மற்றைய நாடுகளுடன் சம அந்தஸ்துக் கிடைக்கின்றதென்ற விடயமும் அடக்கப்பட்ட குடியேற்ற நாட்டு மக்களின் போராட்டம் என்பதால் சுயநிர்ணயத்துக்கான வெற்றியும் கிடைக்கும் என்று லெனின் வாதிட்டார் (Selected Works:157). இன்னும் எளிதாகக் கூறுவதாயின், ஒரே அரசுக்குள் சோசலிஸமும் ஜனநாயகமும் இருப்பதாகக் கூறுவதாயின் நாட்டு மக்களுக்குச் சுதந்திரமும் சர்வதேச மட்டத்தில் எல்லா நாடுகளுக்கும் சமத்துவமும் கிடைக்கும் என்றும் கூறலாம். ஆனால் லெனினின் இந்தக் கோட்பாட்டு அடிப்படையிலமைந்த சுயநிர்ணய உரிமைக்கான பொருள் கோடலானது இக்கோட்பாட்டின் பிரயோக எல்லையினை எவ்விதம் மட்டுப்படுத்தியது என்பதைப் பின்னால் பார்ப்போம்.

ஆனாலும் சுயநிர்ணய உரிமையை எவ்விதம் அமுல்படுத்தலாம் என்பதற்கு லெனின் கூறிய வழிமுறையைக் கவனிக்காமல் விடமுடியாது. அவரைப் பொறுத்தளவில் இறைமையுடைய அரசுகளுக்குள் வாழுந் தேசங்களது சுயநிர்ணய உரிமையானது முதலில் பிரிவினையினூடாகவே பிரயோகிக்கப்படலாம். ஆனால் பிரிவினை என்றதும் கட்டாயமாக வன்முறைப் பிரயோகத்தின் மூலமான பிரிவினை தான் என்று முடிவுகட்ட வேண்டிய அவசியமில்லை. சுதந்திரமான கருத்துக்கணிப்பு மூலமாகவும் இதனைச் செயலுருப்படுத்தலாம். இரண்டாவது அம்சமான ஆள்புல மாற்றங்கள் தொடர்பில் சுயநிர்ணய உரிமையானது சர்வசன வாக்கெடுப்பு மூலம் செயலாக்கப்படலாம். அரசியற் சுதந்திரம், சர்வதேச அந்தஸ்து என்பவற்றைப் பெறுவதற்கான மூன்றாம் அம்சத்திலான பிரயோகத்தில் குடியேற்றநாட்டு மக்கள் ஆயுதப் போராட்டத்தை நடாத்த உரித்துடையவர்கள்.

ஆனாலும், தேசம் அல்லது மக்கள் குழு ஒன்றினால் அடையப்படும் சுதந்திரம் என்பதே அவர்களின் இறுதி இலட்சியம் என்று கொள்ளப்படத் தேவையில்லை. பிரிவினை, சிதறுண்டு போதல், சிறிய அரசுகளாக உருவாகுதல் என்பதிலுள்ள அபாயங்களைச் சுட்டிக்காட்டிடும் அதேவேளை பெரிய அரசுகளாக இருப்பதன் நிச்சயமான அனுகூலங் களையும் லெனின் எடுத்துக்காட்டி சுதந்திர அரசுகளுக்குப் பதிலாக கூட்டிணைவுகளின் அருமையினைப் பெரிதும் வலியுறுத்தினார். இந்தக் கூட்டிணைவுகூட இறுதி இலக்கு அல்லவென்றாலும் சோசலிஸ உலகைப் பொறுத்தளவில் அரசுகளின் கட்டமைவுகளை உருவாக்குவதில் மிகப் பொருத்தமானதும் மக்கள் குழுக்களதும் மத்திய ஆட்சியினதும் கௌரவத்தைப் பேணுவதுமான உரிய வழி இதைத் தவிர வேறேதுமில்லை என்றே அவர் வாதிட்டார் (Lenin: Socialism and War, p. 235).

Theses என்பதில் அவர் தொடர்ந்தும் கூறுவதாவது (Selected Works: 160):

'மேலும், வர்க்க வேறுபாடுகளை ஒழிக்க வேண்டுமாயின் ஒடுக்கப்பட்ட மக்களின் சர்வாதிகார ஆட்சியானது இடைமாறு காலப்பகுதிக்கு அவசியமாவது போலவே தவிர்க்க முடியாதபடிக்குத் தேசங்களின் ஒன்றிணைவு ஏற்பட வேண்டுமாயின் அடக்கப்பட்டுள்ள தேசங்களது மக்களது பிரிவினைக்கான உரிமை இடைமாறு காலப்பகுதிக்கு ஏற்றுக் கொள்ளப்



படவே வேண்டும்.'

லெனினது அணுகுமுறை தொடர்பாக முன்வைக்கப்படும் சில கண்டனங்களை இப்போது கவனிப்போம். 18 ஆம் நூற்றாண்டுப் பிரெஞ்சுப் புரட்சியாளர்கள் போலவே லெனினும் சுயநிர்ணய உரிமை பற்றிய தனது கருத்தேற்பினை தனது தத்துவார்த்த மற்றும் அரசியல் இலக்குகளுக்குள் நின்றுகொண்டு முன்வைத்தாரே தவிர மக்கள் குழுக்களைப் பாதுகாப்பதற்காக அங்ஙனம் செயற்பட முன்வரவில்லை என்று சாடப்படுகின்றது. சுயநிர்ணயக் கோட்பாட்டினைவிட சோசலிஸ இலட்சியமும் புரட்சியின் நலன்களுமே எப்போதும் முன்னுரிமை பெற்றிருந்ததாகவும் கூறப்படுகின்றது. முதன்முதலாக தனது Theses தொகுப்பில் 1916 இல் எழுதியதன் மூலம் சுயநிர்ணய உரிமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி ஏற்றுக் கொள்கின்ற அதே வேளையில், இக்கோட்பாட்டையும் அரசியற் சுதந்திரத்துக்கான ஏனைய எல்லா வகைப் போராட்டங்களையும் பின்னிலைப்படுத்தி பூர்ஷ்வா வர்க்கத்தின் அரசாங்கங்களைத் தூக்கியெறிந்து சோசலிஸத்தை அடைவதற்கான புரட்சிகர சக்திகளின் போராட்டத்தையே முன்னிலைப்படுத்த வேண்டும் என்றும் அவர் கருதிக் கொண்டிருந்தார். 1918 ஆம் ஆண்டு பெப்ரவரி 21 ஆந் தேதியப் 'பிரவாத' இதழில் ஜேர்மனியுடான சமாதானப் பொருத்தனை ஒன்று ஆக்கப்படுவதனை ஆதரித்து அவர் எழுதியிருந்தார். Brest - Litovsk Treaty என்று அழைக்கப்பட்ட இந்தப் பொருத்தனை ரஷ்யாவை ஒருபுறத்திலும் ஜேர்மனி, ஒஸ்ரியா-ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி என்பவற்றை மறுபுறத்திலுமாகக் கொண்டு ஒப்பமிடப்பட்டதாகும். சோசலிஸம் வெற்றிகரமாக நிலைநாட்டப்பட வேண்டுமாயின் போலந்து, லித்துவெனியா, லத்வியாவின் ஒரு பகுதி, எஸ்ரோனியா, பைலோருஷ்யா என்பவற்றை ஜேர்மனிக்கு விட்டுக் கொடுத்தல் என்பது அவற்றின் மக்களுக்குச் செய்யப்படும் துரோகம் என்பதுடன் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டினையும் கைவிடுவதாகவும் அமைந்துவிடும் என்று வாதிட்டார்.

மீண்டும் மீண்டும் அவர் எழுப்பிய கேள்வியானது எது முதலில் முன்வைக்கப்பட வேண்டும்? சுயநிர்ணயத்துக்கான தேசங்களின் உரிமையா அல்லது சோசலிஸமா? என்பதேயாகும். அவரது விடை மிகத் தெளிவாகவே இருந்தது. அது சோசலிஸம் என்பதே தான். சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை அவர் முன்னெடுத்தது அது வர்க்கப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் அந்தளவுக்கே என்றாகும். அதாவது ஒரு தத்துவார்த்தக் கோட்பாடானது லெனினினால் தருணத்துக்கேற்பக் கையாளப்படும் ஓர் ஆயுதமாகப் பாவிக்கப்பட்டுள்ளது என்பதே இந்த விமர்சனமாகும்.

சோவியத் யூனியனதும் ஏனைய சோசலிஸ நாடுகளதும் அதிகாரம் வாய்ந்த ஆவணங்களின்படி சுயநிர்ணய உரிமை தொடர்பான மூன்று அம்சங்களில் மூன்றாவது அம்சத்தினை மட்டும் வலியுறுத்தும் அவற்றின் நிலைப்பாட்டில் ஒரு தொடச்சித் தன்மையை அவதானிக்க முடிந்த போதிலும் மற்றைய இரண்டு அம்சங்களையும் வலியுறுத்துவதில் எவ்வித அக்கறையும் காட்டப்படாது விடப்பட்டமையை சோசலிஸவாதிகளால் இன்றும் நியாயப்படுத்த முடியாமலே போய்விட்டது.

ஒக்டோபர் புரட்சியைப் பற்றிய ஒரு முரண்பாட்டு நிலையும் விமர்சனத்துக்குள்ளாகின்றது. அதாவது, மக்கள் விருப்பு என்பதன் பெயரில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் மாற்றமானது லெனினே அதுகாலவரை கூறிவந்த சுயநிர்ணய உரிமையை நிகழ்வுவழியில் (de facto) ஆக மீறுவதாக அமைந்து விட்டது என்பதே இக்கண்டனமாகும். ஏனெனில் மற்றைய ஆள்புலங்களை இணைத்தல் என்று வரும்போது 1940 இல் லத்வியா, எஸ்ரோனியா, லித்துவெனியா மக்களுக்கு என்ன நடந்தது என்பதும் தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் வாய்ப்பு இந்த இனத்துவ, தேசியக் குழுக்களுக்கு வழங்கப் பட்டதா என்பதும் கேள்வியாக எழுப்பப்பட்டது. அதற்கான விடை என்னவாக இருந்திருக்கும் என்பதிலே போலியான விளக்கங்களே தொடுக்கப்பட்டன என்பதையே 1989 இன் நிகழ்வுகள் இக்குடியரசுகளில் நிரூபித்தன என்றும் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர்.

லெனினினதும் சோவியத் தலைவர்களதும் நிலைப்பாடானது தொழிலாள வர்க்கத்தின் சுயநிர்ணய உரிமை பற்றிய அக்கறையை மையமாகக் கொண்டிருந்ததே தவிர எல்லா மக்களதும் சுயநிர்ணய உரிமையை முன்னிலைப்படுத்தியதாக இருந்திருக்கவில்லை என்பதை ஒப்புக் கொள்ளவே வேண்டும். ஆனால் எது எப்படியிருப்பினும் லெனினது கருத்து நிலையானது குடியேற்றவாதத்துக்கு எதிரான அம்சத்தை முதன்மைப்படுத்திய சுயநிர்ணய உரிமையாக இருந்த போதிலும் பல்வேறு நாடுகளது வெளிவிவகாரக் கொள்கைகளின் மீதும் சர்வதேசச் சட்டத்தின் உள்ளார்ந்த இயல்பு மீதும் அது அளவிறந்த செல்வாக்கைச் செலுத்தி வந்துள்ளதையும் ஒப்புக் கொள்ள வேண்டும்.

சோவியத் யூனியனின் இடைவிடாத முயற்சி இல்லையென்றால் இக்கோட்பாடு ஐக்கிய நாடுகள் சாசனத்தில் இடம்பிடித்திருக்க முடியாது. இச்சாசனத்தில் இடம்பெற்றதால் தான் இக்கோட்பாடு பின்னதாகப் பல்வேறு சர்வதேச ஆவணங்களிலும் சட்ட அந்தஸ்துப் பெற்று வலுவான சட்டக் கோட்பாடாக வளர்ச்சியடையத் தொடங்கியது என்றால் அது மிகையல்ல.

(தொடரும்)

நன்றி - நூலகத்திட்டம்

# திருமலை:
# தேர்தல் கூட்டின் போது நடந்த திருகுதாளங்கள்!
## உறுப்பினர் அம்பலப்படுத்துகிறார்

– கோணன்

திருகோணமலை தமிழர் பிரதிநிதித்துவம் நிராகரிக்கப்பட்டதும், (பறிபோனதும்), அதைத் தடுப்பதற்கு முயற்சி எடுத்த தமிழர் மகா சபையின் நடவடிக்கை பற்றியும் பலரும் பல விதங்களில் அபிப்பிராயங்கள் தெரிவித்து விட்டனர். இது பற்றி சரிநிகரில் விவேகியும், ஆதவனில் நட்டாமுட்டியனும் சிறிது விரிவாக ஆராய்ந்து இருந்தனர் என்ற போதிலும் தமிழர் மகாசபையின் நடவடிக்கை நிகழ்வுகளிலும், கட்சியின் நடவடிக்கைகளிலும் என்ன நடந்தது என்பது பற்றி பூரணமாக யாருக்கும் ஒன்றும் சரிவரத் தெரிந்திருக்கவில்லை! இது பற்றி திருகோணமலை தமிழர் மகா சபையினர் கூட வாய் திறக்கவில்லை! ஏனெனில், 'மௌனம் கலக நாஸ்தி'. ஆம்! இவற்றிற்கு பதில் அளிக்கப்போய் மேலும் மேலும் சிக்கலை உருவாக்குவதால் யாருக்கு என்ன பயன்? என்றாலும் இத்தனைக்குப் பிறகு இரண்டொரு கருத்துக்களை கூறலாம் என துணிந்துள்ளேன். அதன் முக்கிய செயற்பாடுகளில் பங்கு பற்றி உழைத்தவன் என்ற உரிமையில் சில உண்மை விடயங்களைக் கூற முற்பட்டதே இந்த நிகழ்வுக் குறிப்பு ஆகும்!

முதலில் ஒன்றை உணர வேண்டும். தமிழர் மகாசபை என்பது ஒரு அரசியல் கட்சியோ அல்லது இயக்கமோ அல்ல. திருகோணமலை தேர்தல் களத்தில் ஏற்பட்ட திக்குமுக்காடலில் திடீர் விபத்தாகப் பிறந்தது தான் தமிழர் மகாசபை. திடீர் தேவையின் அவசியமும், குறுகிய கால இடை வெளிக்குள் செய்ய வேண்டிய இமாலயப் பொறுப்பினையும் உணர்ந்து இதய சுத்தியுடன் செய்ய முனைந்தது. இதனைச் சுற்றி ஒரு மக்கள் இயக்கமும் தன்னிச்சையாக உருவாகி இயங்கத் தொடங்கியது. யாரும் கேட்காமலே கடைகள், பாடசாலைகள், நிறுவனங்கள் மூடப்பட்டன! பொதுமக்கள் இளைஞர், மாணவர் என எழுச்சி கொண்டனர்! ஆனால், எல்லாம் சுயநல குழிபறிப்பு அரசியலுக்குள் அமுங்கி விட்டது தான் உண்மை!

பல்வேறு கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் என்று பல அணிகள் தேர்தல் களத்தில் வியூகம் வகுத்தன. தமிழர் மகாசபை அவற்றினை அணுகி ஒரு அணியாக்க முயற்சி செய்தது. கூட்டணியினர் வர மறுத்ததால் இரண்டு அணியாக்க முயன்றது. என்ற போதும், அணிகள் குழிபறிப்பனவாகவே இயங்கின. ஆனால், உண்மையில் இரண்டே இரண்டு இயக்கங்களான "ஈ.பி.டி.பி" யும், "ரெலோ"வும் தான் இதய சுத்தியுடன் உண்மையாக ஒற்றுமையுடன் ஒத்துழைத்தன. மற்றவர்கள் எல்லாம் ஒருவரை ஒருவர் குழிபறிக்கவே விஷமத்தனங்கள் செய்தனர். ஒரு அணியாக்கப் புறப்பட்டு பின் இரண்டு அணியாக்க முயன்று இயலாமல்போன பிறபாடு இறுதியில் ஐந்து அணியாகப் போட்டியிடுவதால் என்ன பயன்? சிக்கல் பாருக்குச்? மக்களுக்கே ஆதலால், இரு இயக்கங்களிடமும் வருத்தத்துடன் மன்னிப்பு கேட்டுக் கொண்டு தமிழர் மகாசபை ஒதுங்கிக் கொண்டது. இது தான் உண்மை!

தேர்தலில் கவிழ்ந்து விழுந்தெழும்பிய அரசியல் கட்சிகள், சுயேட்சைகள் எல்லோரும் என்னென்னவோ எல்லாம் கூறின. ஆனால், தமிழர் மகாசபை எல்லா முயற்சிகளும் தோற்ற பின்பு கண்ணீர் மல்கியவாறு வரக்கூடிய ஆபத்துக்களையும், அரசியல் கட்சிகள், சுயேட்சைகள் நடந்து கொண்ட விதம் பற்றியும், ஆரம்பம் முதல் இறுதிவரை நடந்த சம்பவங்களையும் மற்றும் விபரங்களையும் பொது மக்களுக்கு கூட்டிய கூட்டத்தில் விபரித்து, தமிழர் மகாசபையின் முயற்சி தோற்றதற்கான காரணங்களையும் கூறி இறுதியில் ஒன்றும் செய்ய முடியாமை, கையறு நிலையின் தர்மசங்கடத்தையும் கூறி விடைபெற்றது. இளைஞர், மாணவர், பொது மக்கள் ஆத்திரமுற்று வெகுண்டெழுந்தனர். அவர்களையும், சாந்தப்படுத்தி அமைதியாகச் செல்ல வழிசமைத்தனர். இறுதி அமர்வு கூட்டம் மிகவும் உணர்ச்சிகரமாகவும், உணர்வுமயமாகவும் நடந்து முடிந்தது. இறுதியாக அறிக்கை ஒன்றையும் தயாரித்து வெளியிட்டனர்.

இனி அரசியற்கட்சிகள் அவற்றின் நடவடிக்கைகள் எப்படி இருந்தன என பார்க்கலாம்.

திருகோணமலையில் கூட்டணியின் செயற்பாடுகள் கழுதை தேய்ந்து கட்டெறும்பானது என்ற கதை தான்! கூட்டணியின் வாக்கு வங்கி வீழ்ச்சியடைந்து கொண்டே வந்தது. போதாக் குறைக்கு சம்பந்தர் புதியதொரு மேட்டுக்குடி சிந்தாந்தத்தை நடைமுறைப்படுத்தினார்! இதனால், பொது மக்களுக்கும் கூட்டணிக்குமிடையேயானதொடர்புகள் நீண்ட இடைவெளிக்கும், மனக் கசப்புக்கும் ஆளானது. தங்கத்துரை இது விடயத்தில் கொஞ்சம் நிதானமாகவே நடந்து கொண்டுள்ளார். இயலுமானவரை பொது மக்களிடம் நல்லுறவையே பேணி வந்துள்ளார்.

உண்மையில் தேர்தலில் கூட்டணியின் தலைமை வேட்பாளர் பதவி சிறீக்கே கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். திருமலை மாவட்ட அமைப்புக் குழு அப்படியே தீர்மானித்தது. பத்திரிகைகளுக்கும் அறிக்கை விட்டிருந்தது. சிறீ அவர்கள் கூட்டணிக்காக பலவிதங்களிலும், நீண்ட காலமாக உழைத்து தன்னைத் தியாகம் செய்து வந்துள்ளார். அடுத்த நிலையில் ஈழத்துநாதன் இருந்தாலும், அவருக்கு மக்கள் மத்தியில் வெறுப்பே இருந்தது! இந்த நிலையில் கூட்டணியின் நீண்டகால அனுபவ உறுப்பினராக சிறீக்கே உண்மையில் தலைமை வேட்பாளர் பதவி கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், சம்பந்தரின் மேட்டுக்குடி சிந்தாந்தம் அதற்கு இடம் கொடுக்கவில்லை! சிவபாலனை எங்கிருந்தோ கொண்டு வந்த தலைமை வேட்பாளராக நிறுத்தினார். முடிவு தோல்வியில் முடிந்தது.

திருமலையில் 1948ம் ஆண்டிற்கு பின் போட்டியிடாத தமிழ்க் காங்கிரஸ் இம்முறை திருகோணமலையில் வந்து போட்டியிட்டது. ஒரு முக்கிய வரலாறு ஆகிவிட்டது. அது மாத்திரம் அல்ல இன்னொரு முக்கிய வரலாற்றையும் ஏற்படுத்தியவர்களாக மறைத்து விட்டனர். ஆனால், பத்திரிகைகளில்' அது செய்தியாக வந்து தொலைத்து விட்டது. அம்பாறையில் தமிழர் பிரதிநிதித்துவத்தைக் காக்க அங்கு போட்டியில் இருந்து விலகுவதாக பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்ட தமிழ்க் காங்கிரஸ் கோமான்கள், திருகோணமலையில் தமிழர் பிரதிநிதித்துவத்தை ஒழிக்க போட்டியிட்ட மாபெரும் சதியை என்னவென்பது? இதை ஒருவரும் கவனிக்கவில்லையே...?!

அது மட்டுமா, திருகோணமலையின் தமிழர் மகாசபையின் கூட்டத்தில் இறுதிவரை கலந்துகொண்டே இரகசியமாக கட்டுப்பணத்தைக் கட்டி கூட்டுக்கு வேட்டு வைத்தவர்களும் அவர்களே தான்?!

இன்னும் சுயேட்சைகள் பற்றி நாம் ஒன்றும் கூறத்தேவையில்லை. அவர்கள் என்றும் சுயேட்சைகளாக செயல்படுபவர்கள் தான் அவர்கள் ஒடிய ஓட்டமும், காசை நான் முந்தி நீ முந்தி என்று கட்டுப் பணமாக செலுத்தியும், குயுக்தி வழிகளைத் தேடியதும், தமிழர் மகாசபையை முட்டாள் ஆக்கிவிடலாம் என்று தப்புக் கணக்கு போட்டு நடித்தவர்களையும் சுயேட்சை என்றே மகாசபை அறி ) கொண்டு தன் காரியத்தில் பொறுமையைக் கடைப்பிடித்து நல்லதை செய்து விடலாம் என்று முயற்சி செய்தது.

முதல் முயற்சி போதிய அனுபவம், சரியான நேர்மையான அரசியல் இன்மையால் சாக்கடையான அரசியலுக்குள் அமுங்கி விட்டது என்று தான் கூற வேண்டும்.

இன்னுமொரு விடயத்தையும் கட்டாயம் குறிப்பிடவேண்டும். அது சரியாகவும் இருக்கலாம், பிழையாகவும் இருக்கலாம். ஆனால், தேர்தலில் அதுவும் ஒரு முக்கிய காரணியாயிற்று.

ஒரு பெரும் அலையாக உருவாகி மக்கள் மத்தியில் வியாபித்த கருத்து என்னவென்றால், "இம்முறை தமிழ் மக்கள் யானைக்கு புள்ளடி போட வேண்டும் என்று புலிகள் கூறியதாக ஒரு கருத்து புயற்காற்று அலையாக மக்கள் செவிக்குள் பாந்தது தான். அது தான் இம்முறை கூடுதலான தமிழ் மக்கள் ஐ.தே.கவுக்கு வாக்களித்ததன் மர்மம் ஆகும் என்ற போதிலும், வாக்களிக்காமல்விட்ட மக்களும் கணிசமானவரே என்பதும் கவனிக்கப்பட வேண்டும்!

இவையெல்லாவற்றையும் பார்க்கும் போது, தமிழ் பிரதிநிதித்துவம் பறிபோனது என்று கூற முடியுமா? இல்லை. நிராகரிக்கப்பட்டது என்று தான் கூற வேண்டும். ஆனால், திருகோணமலையில் தமிழர் பிரதிநிதித்துவம் இதுதான் முதல் முறையாக இல்லாமல் போனது என்ற நிலையும் இல்லை! இதற்கு முதலும் பிரதிநிதித்துவம் இல்லாமல் இருந்த வரலாறும் உண்டு. அதைவிட நள்ளிரவில் கானகத்தே தனியே விடப்பட்டுப் போன கதையும் உண்டு. அப்போது எல்லாம் திருகோணமலை மக்கள் எல்லாரும் ஓடிப்போகவும் இல்லை. அழிந்து போய் விடவும் இல்லை. மீண்டும், மீண்டும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றார்கள். ஆறுகள் ஒரு போதும் பின்னோக்கி ஓடுவது இல்லை என்பார்கள். அதுபோல் வரலாறும் முன்னோக்கி சென்று கொண்டேயிருக்கும் என நம்புவோமாக!

# தந்தையின் மனைவியே மகளைக் கொன்றாரா?

–விகடகவி

அண்மையில் மட்டக்களப்பு, ஓட்டமாவடி பிரதேசத்தில் இடம் பெற்ற ஒரு சிறுமியின் திடீர் மரணத்தில் தற்போது சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

ஓட்டமாவடி பிரதேசத்தில் உள்ள மாவடிச்சேனை என்கின்ற இடத்தில் வசித்து வந்த நிபாணா என்ற 15 வயதுச் சிறுமி கடந்த ஜனவரி மாதம் 8ம் திகதி திடீர் என்று மரணம் அடைந்துள்ளார். இஸ்லாமிய முறைப்படி, அந்தச் சிறுமி இறந்து சுமார் இரண்டு மணி நேரத்திற்குள் அவரது ஜனாஸா அடக்கம் செய்யப்பட்டு விட்டது.

இந்தச் சிறுமியின் மரணம் இயற்கையானது இல்லை என்றும், இந்தச் சிறுமி அவளது தந்தையின் இரண்டாவது மனைவியால் கொலை செய்யப்பட்டிருக்கக் கூடும் என்றும் தற்போது அயலில் வசிப்பவர்களால் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றித் தெரியவருவதாவது, ஓட்டமாவடியைச் சேர்ந்த நூருமுகமது(48) என்பவருக்கு, மரணமடைந்த நிபாணா என்கின்ற சிறுமியுடன் சேர்த்து நான்கு பெண் பிள்ளைகள்.

தனது முதல் மனைவியின் இழப்பைத் தொடர்ந்து கடந்த சில வருடங்களாக, பரிதா என்கின்ற இளம் பெண்ணுடன் வாழ்ந்து வருகின்றார்.



தமது வயதை ஒத்த ஒரு பெண்ணை வீட்டில் வைத்து, தமது கண் முன்னே தந்தை குடும்பம் நடத்துவதை விரும்பாத நிபாணாவின் மூத்த சகோதரிகள் மூவரும், தந்தையுடன் முரண்பட்டுக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினர். பின்னர் வேலை பெற்று வெளிநாடு சென்று விட்டனர்.

சிறுமியான நிபாணாவால் இது முடியவில்லை. தலைவிதியை நொந்தபடி அவள் தனது தந்தையின் வீட்டிலேயே காலம் தள்ள வேண்டி இருந்தது.

தனது தந்தையின் 'மனைவி'யான பரிதாவுடன் தனித்து விடப்பட்டிருந்த சிறுமி நிபாணா பல விதமான துன்புறுத்தல்களுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நெருப்புக் கொள்ளியால் சுடப்பட்டது முதற்கொண்டு பல வகைகளிலும் அவள் சித்திரவதை செய்யப்பட்டதாக, அவர்களது வீட்டின் அருகே வசிப்பவர்களும், உறவினர்களும் தெரிவித்தார்கள். பரிதாவினால் அடித்து துன்புறுத்தப்பட்ட சிறுமி நிபாணா, மூன்று சந்தர்ப்பங்களில் வீட்டை விட்டு வெளியேறி அயல் வீடுகளில் தஞ்சம் அடைந்ததாகவும், இது சம்பந்தமாக இரண்டு தடவைகள் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் சிறுமி நிபாணாவின் மரணம் இடம் பெற்றுள்ளது.

இஸ்லாமிய முறைப்படி முக்காடிடப்பட்டு சுமார் இரண்டு மணி நேரம் மட்டுமே வைக்கப் பட்டிருந்த நிபாணாவினது ஜனாஸாவின் முகத்தில், முக்காட்டையும் மீறி சில தழும்புகள் தெரிந்ததை சூழ இருந்த பெண்கள் அவதானித்துள்ளார்கள்.

கல்வியறிவின்மை, சமூகக் கட்டுப்பாடுகள் போன்றவை காரணமாக, இந்தச் சந்தேகம் பற்றி தமக்குள் பேசிக் கொள்வதைத் தவிர இவர்களால் வேறெதுவும் செய்ய முடியவில்லை.

சிறுமி நிபாணா மரணமடைவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு பரிதாவினால் கடுமையாகத் தாக்கப்பட்ட சம்பவம், பரிதாவின் மகனான நியாஸ் என்ற சிறுவன் மூலமே முதன் முதலில் வெளி உலகிற்குத் தெரிய வந்தது.

இதனைத் தொடர்ந்து, நிபாணா பரிதாவால் கொடூரமான முறையில் அடித்துக் கொல்லப் பட்டிருக்கலாம் என்கின்ற சந்தேகம் அயலவர்களிடையே வலுவடைய ஆரம்பித்தது.

மாவடிச்சேனை பள்ளிவாசல் தலைவரின் கவனத்திற்கு இந்த விடயம் கொண்டு செல்லப்பட்ட போதும் போதிய நடவடிக்கை எடுக்கும் முயற்சி எதையும் அவர் மேற்கொள்ளவில்லை. சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படும் வீட்டிற்கு மிகச் சமீபமாக பொலிஸ் நிலையம் ஒன்று இருந்த போதிலும், தமது சந்தேகம் பற்றிய முறைப்பாட்டை தெரிவிக்கக் கூடிய தைரியம் அற்றவர்களாகவே அந்த மக்கள் காணப்படுகின்றனர்.

நாதியற்ற இந்த அப்பாவிச் சிறுமிக்கு இழைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் கொடுமையை வெளி உலகிற்குத் தெரியப்படுத்துவதன் மூலமும், இந்தக் கொடுமையைச் செய்தவர்களுக்கு அதற்கான தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதன் மூலமும் தான், இந்தச் சிறுமிக்கான நீதியைக் கிடைக்கச் செய்ய முடியும் என்பதுடன் இது போன்ற மற்றொரு துன்புறுத்தல் நிகழாமல்

நன்றி - நூலகத்திட்டம்



மலையகம்:

# பெருந்தோட்டத்துறை தனியார் மயமாக்கலின் பின் தொழிற்சங்கங்களின் இயலாமையும், காட்டிக்கொடுப்புகளும்

**பெருந்தோட்டத்துறை சம்பள உயர்வு பிணக்கு குறித்த சில அவதானிப்புகள்**

– இடையன்

"நடப்பு ஆண்டிற்காக நிறுவனத்தின் ஐந்தொகை ஒதுக்கங்களில் தொழிலாளர்களின் சம்பள உயர்விற்காக ஒரு சதமும் ஒதுக்கப்படவில்லை" என ஒரு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை நிறுவனத்தின் நிருவாக பணிப்பாளர் பெருமிதத்துடன் குறிப்பிட்டதாக குறித்த அதே நிறுவனத்தின் மற்றுமொரு பணிப்பாளர் கடந்தவாரம் கட்டுரையாளரைச் சந்தித்த போது மிகவும் கவலையுடன் தெரிவித்தார். "மேலும் சட்டத்தின் பிரகாரம் இரண்டு ஆண்டுகளுக்கு எவ்வித சம்பள அதிகரிப்பும் செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை' என கூறி முதலாமவர் பெருமிதம் கொண்டாராம்.

மேற்குறிப்பிட்ட நிகழ்வு எதை எமக்கு எடுத்துரைக்கின்றதென்றால், பெருந்தோட்ட நிறுவன முகாமையாளர்களிடையே சம்பள உயர்வு நியாயமானது தான் என்று உணர்பவர்கள் இருக்கும் அதேவேளை, தொழிற்சங்கங்களும் முதலாளிமார் சம்மேளனமும் இணைந்து செய்து கொண்ட தொழிலாளர்களை ஏமாற்றும் மோசடி ஒப்பந்தத்தை காரணம் காட்டி சம்பள உயர்வை புறக்கணிக்கும் நிருவாகிகள் மறுபுறம் என, இரு நிலைப்பாடுகளை கொண்டோர் இருப்பது தெளிவாகின்றது.

இந்நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் ஆரம்ப கட்டங்களை நோக்குவோமாயின் முதலில் 1830களில் தினக்கூலியாக ஐந்து சதமே வழங்கப்பட்டது. இந்தியாவிலிருந்து வந்து இலங்கையின் மத்திய மலைநாட்டில் தங்கள் கூலித் தொழிலாளர் வாழ்க்கையை கடனாளிகளாகவே இவர்கள் ஆரம்பித்தார்கள். அதாவது இவர்களை இந்தியாவிலிருந்து அழைத்து வந்த தரகர்களான பெரிய கங்காணிமார்களுக்கு பிராயாணச் செலவு, இடையில் ஏற்பட்ட சாப்பாட்டு, மற்றும் ஏனைய செலவுகளால் தொழிலாளர்கள் கடனாளிகளாகவே மலைநாட்டில் வாழ்க்கையை ஆரம்பித்தனர். 1978களில் ஆண் தொழிலாளர்களுக்கு 33சதம் முதல், 37 சதம் வரையும், பெண் தொழிலாளர்களுக்கு 25 சதமும், நாட் சம்பளமாக வழங்கப்பட்டது.

இவ்வாறு படிப்படியாக வளர்ச்சி கண்ட பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை 1970கள் வரையிலும் தனியார் வசமே - பெரும்பாலும் வெளிநாட்டு நிறுவனங்களின் பொறுப்பிலேயே இருந்தது. 1972இல் பெருந்தோட்டங்கள் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டன. 1984இல் ஆண், பெண் இருபாலாருக்கும் சம சம்பளம் வழங்கப்பட்டதுடன், அன்றைய நிலையில் நாளொன்றுக்கு ரூபா 28/- நாட் சம்பளமாக வழங்கப்பட்டது. வாழ்க்கை செலவு அதிகரிப்பிற்கேற்ப (Cost of Living Index) தொழிலாளர்களின் சம்பளமும் அதிகரித்துச் சென்றது. இந்நிலையில் பெருந்தோட்டங்கள் மீண்டும் 1992ஜூன் மாதத்தில் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

தோட்டங்கள் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டபின் தொழிலாளர்கள் தாங்கள் அனுபவித்த பல சலுகைகளை இழந்ததுடன், பல்வேறான நெருக்கடிகளுக்கும் முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. ஆனால், இதில் கவலைக்குரிய விடயம் யாதெனில் இவற்றிற்கு பெருந் தோட்ட தொழிற்சங்கங்களும் துணை நின்றமை தான்! தோட்டங்கள் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படுவதற்கு முன்னர் வருடமொன்றிற்கு தேயிலை மீதான வரிவிதிப்பு மூலம் அரசாங்கத்திற்கு ரூபா 2200 கோடி வருமானம் கிடைத்தது. ஆனால், தோட்டங்கள் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் இவ் வரிவிதிப்பு முற்றாக விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. இதனால், அத்தொகை முழுமையாக அரசாங்க வருமானத்தில் பாதக விளைவுகளை ஏற்படுத்தியதுடன் கம்பனிகளுக்கு இலாபமாக மாறியுள்ளது. இது மட்டுமின்றி பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு அரசாங்க வங்கிகள் மூலம் இதுவரையில் ரூபா பத்தாயிரம் கோடிக்கு மேல் நீண்ட காலக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேற்கூறிய இரு விடயங்கள் மூலம் புதிய நிதி இத்தொழிற்துறையில் பாய்ச்சப்பட்டுள்ளதுடன், ஏற்கெனவே வரி மூலமாக வெளியேறிய பெரும் நிதி தற்போது நிறுவனத்திலேயே தேக்கப்பட்டுள்ளது.

மேலும் பெருந்தோட்ட கைத்தொழில் மதிப்பீட்டுக் குழுவின் வருடாந்த அறிக்கையின்படி 1992 இலிருந்து 2000ஆம் ஆண்டு வரை தோட்டங்கள் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் மூன்று லட்சம் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். இதே நிலையில் இக் காலப் பகுதியில் எவ்வித புதிய தொழில் வாய்ப்புக்களும் இத்துறையில் தோற்றுவிக்கப்படவில்லை என்பதுடன், வேலைச்சுமை, அதிகரிக்கப்பட்டதுடன், வேலை செய்யும் நாட்களின் அளவும் குறைக்கப்பட்டுள்ளது. பல சந்தப்பங்களில் மாதத்தில் 15 நாட்களுக்குக் குறைவாக வேலை வழங்கப்படுவது தொடர்ந்த வண்ணமே உள்ளது. அத்துடன் இக்காலப் பகுதியில் பெரும்பாலான தோட்டங்களில் புதிய தொழிலாளர்கள் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படவுமில்லை. அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்ட சில இடங்களிலும் தற்காலிகமாக சமய ஊழியர்களாகவே உள்வாங்கப்பட்டுள்ளனர். இவர்கள் சுமார் ஐம்பதினாயிரம் பேர் வரை இன்று உள்ளனர். இவ்வாறாதொரு நிலையில் தான் 1992 இல் ஐந்து வருட ஒப்பந்தத்தில் தனியார் நிறுவனங்களிடம் கையளிக்கப்பட்ட தோட்டங்களின் நிருவாக உரிமையைத் தற்போதைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் மேலும் 50 ஆண்டுகளுக்கு நீடித்துள்ளது.

இந்நாட்டின் பல வளங்களதும், உற்பத்தி பொருட்களினதும் மூல அமைவிடம் மலையகம் ஆகும். உதாரணமாக நீர், காட்டு வளம், விவசாயம், இயற்கை வளங்கள், மண்வளம், இரத்தினக்கற்கள்,பெருந்தோட்ட உற்பத்திகள் என்று தொடர்ந்த வண்ணமே போகலாம்.

தனியார் நிறுவனங்களிடம் தோட்டங்கள் கையளிக்கப்பட்ட பின்னர் மலையகத்தில் உள்ள இவ்வளங்கள் திட்டமிட்ட வகையில் சூறையாடப்படுகின்றன. உதாரணமாக பல தோட்டங்களில் பெறுமதியான மரங்கள், தோட்ட நிருவாங்களினால் வெட்டி விற்கப்பட்டுள்ளதுடன், பெறுமதியான கற்களும் தோட்டங்களிலிருந்து அகற்றப்பட்டுள்ளன. இவ்வாறன நிகழ்வுகள் நீண்ட காலத்தில் மண் அரிப்புக்களுக்கும், மழைவீழ்ச்சி குறைவதற்குமே வழிசமைக்கும்.



இந்நிலையில் அரசாங்கமானது இயற்கை நீர்வள பாவனைக்கும் வரி விதிப்பது பற்றி முன்னேற்பாடுகளை தயாரிக்கும் அதே சமயம், பெருந்தோட்டக் காணிகளை குடியேற்றத் திட்டங்களுக்காக சுவீகரிப்பதுடன், நின்றுவிடாது பெருந்தோட்ட காணிகளை மாணிக்கக்கல் அகழ்விற்காக ஏல விற்பனை செய்யும், நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளது. இதன் முதல் கட்டமாக பொகவந்தலாவை பகுதியில் செப்பல்டன் தோட்ட காணியின் ஒரு பகுதி ஏலத்தில் விடப்பட்டுள்ளது. இரத்தினக்கல் அகழ்வதால் ஏற்படும் குழியை மீண்டும் மூடித் தரவேண்டும் என்ற நிபந்தனை மட்டும் விதிக்கப்பட்டுள்ளது. ஏலவிற்பனை மூலம் பெறப்பட்ட குத்தகை பணத்தில் 40 சதவீதம் குறித்த தோட்ட நிறுவனத்திற்கும் ஏனையவை இரத்தினக்கல் கூட்டுத்தாபனத்திற்கும் போய்ச் சேரும். இவ்வாறு எதிர்காலத்தில் நுவரெலியா, இரத்தினபுரி, பதுளை, மாவட்டங்களில் பல தோட்டக் காணிகள் ஏலத்தில் விடப்பட திட்டமிட்டுள்ளதாக இரத்தினக்கல் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அரசாங்கமானது முதலில் தோட்டங்களை தனியார் வசம் கையளித்ததுடன் நிற்காமல் தன் பக்கத்தில் மலையகத் தமிழர்கள் செறிந்து வாழும் மலையகப் பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்களை மேற்கொள்வதுடன் (குடியேற்றங்களுக்கு என இன்னும் பல இடங்களில் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன) தனியார் நிறுவனங்களுக்கு மேலதிக வருமான வழிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதுடன், தொழிலாளர்களை நசுக்கும் நிறுவனங்களின் அனைத்து செயற்பாடுகளுக்கும் பின்புலத்தில் துணை நிற்கிறது.

இன்று போர் வெறி பிடித்த இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. சகல அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் நாளுக்கு நாள் ஏறி கொண்டே செல்கின்றன. இந்நிலையில் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது மலையகத் தோட்டத் தொழிலாளர்களே. பொருட்களின் விலை ஏறும் அளவிற்கு இவர்களின் வருமானத்தின் எவ்வித சாதகமான மாற்றமும் ஏற்படவில்லை. நாட்டின் ஊதிய உயர்வில் முழுமையாக தவிர்க்கப்பட்ட ஒரு பிரிவினர் தோட்டத் தொழிலாளர்களே. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஆயிரம் ரூபாவும், தனியார் துறையினருக்கு 400/-வும் ஊதிய உயர்வு வழங்கப்பட்டது. இப்போது இலங்கை நாணயமான ரூபா மிதக்கவிடப்பட்டுள்ளதால் வெளிநாட்டு நாணயங்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளதால் அவற்றின் விலையும் பெருமளவு உயர்ந்துள்ளன.

அதேவேளை கடந்த காலங்களில் வாழ்க்கைச் செலவுக்கு அமைய (Cost of Living Index) தொழிலாளர்களின் சம்பளம் தானாக அதிகரித்தது. ஆனால், 1996இல் மலையக தொழிற்சங்கங்கள் (பிரதானமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சியின் - இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் மற்றும் கூட்டு கமிட்டி) முதலாளிமார் சம்மேளனத்துடன் செய்துக் கொண்ட ஒப்பந்தத்திற்கிணங்க வாழ்க்கைச் செலவுப் புள்ளி அதிகரிப்பிற்கேற்ப வழங்கப்பட்ட (ஒரு புள்ளிக்கு ரூபா இரண்டு) அதிகரித்த ஊதியம் நிறுத்தப்பட்டது. அன்றைய தினத்திலிருந்து இன்றுவரை கிட்டதட்ட 850 - 1000 புள்ளிகள் வரை (கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டி - Colombo Consumer Price Index) அதிகரித்துள்ளது. இதன்படி பார்த்தால் இதுவரையில் இவர்களது மாதாந்தச் சம்பளம் கிட்டத்தட்ட ரூபா 2000/-த்தினால் அதிகரிக்கத்திருக்க வேண்டும். இந்த அதிகரித்த தொகை முற்றிலுமாக தொழிலாளர்களுக்குக் கிடைக்காமல் செய்தமைக்கான பொறுப்பை மலையக தொழிற் சங்கங்களே ஏற்க வேண்டும்.

இதேவேளை 2000ஆம் ஆண்டு தொழிற்சங்கங்கள் முதலாளிமார் சம்மேளனத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு இணங்க பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களிடையே ஊதிய வித்தியாசம் காணப்படுவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (அடிப்படை நாட் சம்பளமாக தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 101/-வும், இறப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு 95/-வும் என இணங்கப்பட்டுள்ளதுடன் இரண்டு ஆண்டுகளுக்கு ஊதிய அதிகரிப்புக் குறித்து பேசுவதே இல்லையென தொழிற்சங்கங்களும் கையொப்பமிட்டு தொழிலாளர்களை ஏமாற்றியுள்ளன.

கடந்த தேர்தலுக்கு முன்னர் அரசாங்க ஊழியர்கள் 3000/- ரூபா சம்பள அதிகரிப்பு கோரி போராட்டம் நடத்திய போது மலையகத் தொழிற்சங்கங்கள் 400/- கோரியே போராட்டம் நடத்தின. ஆனால், அரச ஊழியர்கள் 1000/- ஊதிய அதிகரிப்பாக வென்றெடுக்க, தனியார்துறை ஊழியர்களுக்கு 400/- அதிகரிப்பு வழங்கப்பட்டது. இன்று மீண்டும் அரசாங்க ஊழியர்கள் மக்கள் விடுதலை முன்னணி தலைமையில் மாதச் சம்பளத்தை ரூபா 5000/- வால் அதிகரிக்கக் கோரி போராட்டம் நடத்த தயாராகின்றனர். ஆனால், மலையகத் தொழிற்சங்கத் தலைமைகள் இன்னும் பழைய கோரிக்கையான ரூபா 400/- ஊதிய அதிகரிப்புப் பற்றியே பேசுகின்றன. அதைக் கூட தாங்களே ஏற்படுத்திக் கொண்ட தடை காரணமாக, போராட்டம் -முக்கியமாக வேலை நிறுத்தப் போராட்டம் - கூட நடத்த முடியாதவாறு நீதிமன்ற தடை உத்தரவை முதலாளிமார் சம்மேளனம் பெற்றுள்ளது. இத் தொழிற்சங்கங்கள் இரண்டு வருடங்களுக்கு ஊதிய அதிகரிப்புக் கோர மாட்டோம் எனச் செய்து கொண்ட உடன்படிக்கையே இதற்குக் காரணமாகும்.

இந்நிலையில் தான் மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்து வரும் இ.தொ.கா எதிர்வரும் 19ஆம் திகதி ஹட்டன் நகரில் சத்தியாகிரகப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளது. இது வெளிப்படையாக மக்கள் உணர்வுகளை தூண்டும் ஒரு ஏமாற்று நாடகமாகும். ஒரு சில உறுப்பினர்களின் துணையில் நிலைத்திருக்கும் இன்றைய அரசாங்கத்தில் முக்கியபங்கு வகிக் கும் இவர்களால் அரசாங்கத்திற்கு எவ்வித அழுத்தத்தையும் கொடுக்க முடியாத நிலையிலேயே ஆறுமுகம் தொண்டமான் உள்ளிட்ட இ.தொ.கா.தலைமை உள்ளது. முதலாளிமார் சம்மேளமும் எவ்வித ஊதிய அதிகரிப்பிற்கும் இணங்குவதாகத் தோன்றவில்லை. நீதிமன்றத் தீர்ப்பு வரும்வரை வேலைநிறுத்தத்தில் ஈடுபட முடியாததுடன் ஊதிய உயர்வு கிடைக்க எவ்வித வாய்ப்புமில்லை. இந்நிலையில் சட்ட ரீதியாகப் போராடாமல் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட இருப்பது இ.தொ.கா மற்றும் அதன் நேச சக்திகளின் இயலாமையின் முழு வெளிப்பாடாகும்.

மறுபுறத்தில் கூட்டு உடன்படிக்கையில் (Collective Aggrement) கையெழுத்திடாத மலையக மக்கள் முன்னணி ஊதிய உயர்வு தொடர்பாக நீதிமன்றம் செல்லப்போவதாகவும், சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தில் (Internatinol Labour Organzation) முறையீடு செய்யப்போவதாகவும், அதன் தலைவர் பெ.சந்திரசேகரன் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தார். ஆனால், இவரது இவ்வார்த்தைகள் கூட தேர்தல் முடிந்த கையோடு ஓய்ந்துவிட்டது தான் வேதனைக்குரியது.

மேலும் இன்றைய நிலையில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சும், பெருந்தோட்ட ஊழியர் நம்பிக்கை நிதியமும் (Trust) உருவாக்கப்பட்ட பின் முன்னர் தோட்ட நிருவாகத்தினால், மேற்கொள்ளப்பட்ட சமூக நலத் திட்டங்களை இன்று தோட்ட நிருவாகங்கள் முழுமையாகவே கைவிட்டுள்ளன. ஆனால், பெருமளவு வெளிநாட்டு நிதிவளத்தில்

⇨8

நன்றி - நூலகத்திட்டம்



# பெண்கள் அதிகம் பாதிக்கப்படுவது புற்று நோயாலல்ல, பாலியல் வன்முறையாலேயே?

பெண்கள் புற்றுநோய்க்கு இலக்காகும் எண்ணிக்கையை விட வன்முறைக்கு இலக்காகும் எண்ணிக்கை அதிகமாகும்.

உலகம் முழுவதும் பெண்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வன்முறைக்கு இலக்காகின்றனர். இது வறுமையான குடும்பங்களில் மட்டும் நிலவும் நிகழ்ச்சி என்றில்லை. இன்று சகல விதத்திலும் அபிவிருத்தியடைந்த நாடுகள் எனக் கருதப்படும் நாடுகளில் கூட பெண்கள் வீதிகளில் நிறுத்தப்பட்டு துன்புறுத்தலுக்கும் வன்முறைக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பெண்கள் உடல் ரீதியாகத் துன்புறுத்தப்படுவதினால் அதன் விளைவாக அவர்கள் அலுவலகங்களுக்கு விடுப்புக்களை அதிகம் எடுப்பதனால் பொருளாதாரத்தில் நூறு மில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்டம் ஏற்படுவதாக அங்குள்ள முதலாளிமார்களினால் கணிக்கப்பட்டுள்ளது. இதன்படி உலகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி புற்றுநோய்கள், விபத்துக்கள் மற்றும் மலேரியா காய்ச்சல் என்பனவற்றால் ஏற்படும் மரணங்கள்ள விட அதிகமான மரணங்கள் பாலியல் வல்லுறவுகளினால் நிகழ்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சனத்தொகை விவகாரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி உடலியல் துன்புறுத்தல்களினால் மரணமடையும் பெண்களின் எண்ணிக்கை புற்றுநோய்கள் காரணமாக மற்றும் இயற்கை மகப்பேற்று காரணமாக இறக்கும் பெண்களின் எண்ணிக்கையை விட அதிகமாகும்.

**ந பாலியல் வர்த்தகம்!**

ஒவ்வொரு வருடமும் ஐம்பதாயிரம் பெண்கள் பாலியல் வர்த்தகத்திற்காக ஐக்கிய அமெரிக்காவுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.


அரிசோனா பிராந்தியத்தின் டிமோக்கிரட்டிக் செனட்டைச் சேர்ந்த ரூட் சொமமன் குறிப்பிட்டதைப் போன்று அமெரிக்க ஆய்வுகளின் பிரகாரம் அமெரிக்காவுக்கு இலத்தின் அமெரிக்காவைச் சேர்ந்த பெண்களும், கிழக்காசியப் பெண்களுமே அதிகம் கடத்தி வரப்படுகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியம் வெளியிட்ட புள்ளிவிபரங்களின் படி, குறைந்த வயதைக் கொண்ட சிறுமிகள் மில்லியன் கணக்கானோர் பாலியல் தொழிலுக்கும், ஆபாசப் புகைப்படத் தொழிலுக்கும் (Pornography) பயன்படுத்தப்பட்டுள்ளனர். சிறந்த கொடுப்பனவு, ஸ்திரமான வேலைவாய்ப்பு என்ற உறுதிகளுடன் அவாகளை நாடு கடத்துகின்றனர். பின்பு விடுதி பராமரிப்பாளர், சிறுவர் பராமரிப்பு, வீட்டுத் தோட்ட பராமரிப்பு என்ற போர்வையில் அழைத்துச் செல்லப்படும் அவர்கள், இறுதியில் பாலியல் தொழில் புரியும் விடுதிகள், மதுபான விற்பனைச் சாலைகள், நிர்வாண முகாம்கள் போன்ற பாலியல் முகாம்களில் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

யுனிசெப் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் பாலியல் வர்த்தகத்தில் பலியானவர்கள் குறித்தான புள்ளி விபரங்களை தயாரித்துக் கொண்டிருந்தாலும், இவ்வாறான செயற்பாடுகள் உலகத்தின் ஒவ்வொரு மூலையிலும் 'இரகசியமாக' நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன. தாய்லாந்தில் மட்டும் 20 வயதுக்குக் குறைந்த பாலியல் சுரண்டலுக்குள்ளான பெண்கள் 8 லட்சம் பேர் உள்ளனர். இவர்களில் 25 சதவீதமானோர் 14 வயதுக்குட்பட்டோர்.




வருடாந்தம் நேபாளச் சிறுமிகள் ஐயாயிரம் தொடக்கம் ஏழாயிரம் பேர் வரை இரகசியமாக இந்தியாவுக்குக் கொண்டு வரப்படுகின்றனர். இவர்களது வயது மட்டம் வருடாந்தம் குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக இவர்களில் 10-14 வயதுக்குட்பட்டோர் அதிகம் என இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



கிழக்கு ஐரோப்பாவில் சோசலிசத்தின் வீழ்ச்சியுடன் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி பாலியல் தொழிலுக்கு ஸ்திரமான அத்திவாரத்தை இட்டுள்ளது எனலாம். ரஷ்ய, ஆர்மேனிய, உக்கிரேனிய, பல்கேரிய மற்றும் செக் நாட்டுப் பெண்கள் மற்றும் சிறுமிகள் மத்திய ஐரோப்பிய நாடுகளில் பாலியல் தொழிலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். ஆர்மேனியப் பாலியல் தொழில் புரியும் பெண்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது, அவர்களில் 52 சதவீதமானோர் வேறு சிறந்த தொழில் கிடைத்தால் தாம் இத்தொழிலைக் கைவிடத் தயாராக இருப்பதாக விருப்பம் தெரிவித்துள்ளனர்.

மலேசியாவில் தனது கணவர்மார்களின் துன்புறுத்தல்களுக்கு பத்து பெண்களில் நால்வர் ஆளாகுகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் நிதியத்தின் (UNIFEM) படி, வேலைத்தளத்தில், அரசியல் தளத்தில் பாலியல் அசமத்துவத்தினைப் போக்க நடவடிக்கை எடுப்பதாகக் கடந்த 15 வருடங்களாக பலதரப்பட்ட அரசாங்கங்கள் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படா மைக்கான காரணமாகப் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் குறைவாக உள்ளமையே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பெரும்பாலான நாடுகளில் தத்தமது அரசியல் முறைகளுக்குள் பெண்களை உள்வாங்காத வரையில் உண்மையான ஜனநாயகம் ஒருபோதும் கட்டியெழுப்பப்படமாட்டாதென அவ் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

**கியூபாவில் பெண்களின் நிலைமை!**

சமூக மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் முன்னணி பெற தேவையான சட்ட மற்றும் சமூக நிலைமைகளை கியூபப் பெண்கள் அனுபவித்து வருகின்றனர்.

எனினும், வீட்டு வன்முறைகளைக் குறைக்க இந்த பாரிய சமூக நிலைமை (Macro Social Condition) போதுமானதாக இல்லை. ஹவானா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த க்லோவில்ட் புரோவெயார் கூறுவதன்படி, மிகவும் சிறிய விடயங்களுக்குக் கூட குடும்பங்களில் வன்முறை தலைவிரித்தாடுவதாகக் குறிப்பிடுகின்றார். பெரும்பாலும் திருமணத்தின் போது பெண்களுக்குரித்தாகும் "பொறுப்பு" குறித்தே இங்கே கேள்விகள் எழுப்பப்படுகின்றன. தேசிய மட்டத்தில் இல்லாவிடினும், "குவான்த்தனாமோ" பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 21-30 வயதுக்குட்பட்ட பெண்கள் வேலையற்றோராகவும், குறைந்த கல்வியறிவைக் கொண்டவர்களாகவும் உள்ளனர். இவர்களே வீட்டு வன்முறைகளுக்கு அதிகம் இலக்காகின்றனர். பாலியல் கல்வி குறித்தான தேசிய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் இலியானா அட்லஸ், உடலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வல்லுறவு என்பனவற்றை விட ஏகாதிபத்தியவாத உணர்வுகளினால் ஏற்படும் உளவியல் ரீதியான வன்முறை கியூபாவில் பாரிய சிக்கலைத் தோற்றுவித்துள்ளதாகக் குறிப்பிடுகின்றார்.

கியூபாவின் முதல் தர பாடசாலைகளில் பாலியல் கல்வி பயிற்றப்படுவதன் நோக்கம் இவ்வாறான மரபுகளை உடைத்தெறிவதே எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது. கியூபாவில் நிறுவனமயப்பட்ட அல்லது அரச மயப்பட்ட வன்முறை இல்லாவிட்டாலும், குடும்பச் சூழலில் அவை காணப்படவே செய்கின்றன.

இவ்வாறு பெண்களுக்கு எதிரான அனைத்து வித வன்முறைகளும் பெருகும் சூழலில் கடந்த ஒக்டோபர் மாதம் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டிக்கும் முகமாக சர்வதேச ஆர்ப்பாட்டம் நியூயோர்க் நகரில் இடம்பெற்றது. இங்கு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த வகையில் இந்த நூற்றாண்டில் நாம் சந்திக்க வேண்டியுள்ள சவால், பெண்களாக பிறப்பதில் உள்ள ஆபத்தை எவ்வளவு தூரம் குறைக்க முடியும் என்பதேயன்றி வேறில்லை.

—GRANMA INTERNATIONAL கியூபத் தேசிய பத்திரிகையில் Raisa Page எழுதிய கட்டுரையின் சுருக்க வடிவம்.

நன்றி:- நவோதா மாதாந்த இதழ்

## பெருந்தோட்டத்துறை...

இயங்கும் நிதியம் கூட முழுமையாக செயற்படவில்லை என்பதை அண்மையில் நிகழ்ச்சித் திட்ட உதவி குழுவினர் (Programme Support Group) மேற்கொண்ட ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது. தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சைப் பொறுத்த வரையில் அதன் அலுவலகமே அமைச்சு என்ற சந்தேகத்தை தோற்றுவிக்கின்றது. (இக் காரணத்தினால் தான் முன்னாள் அமைச்சின் செயலாளர் இராமானுஜம் வேறு அமைச்சிற்கு மாற்றுபெற்று சென்றதாகவும் அறிய முடிகிறது.) இவ்வமைச்சின் முக்கிய கருப்பொருள் திருத்தலங்களே! நடப்பு நிதி ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு செலவு திட்டத்தில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சிற்கு 498 மில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளது. இதன் பயனை முழுமையாக மலையகம் அடையுமா என்பது சந்தேகமே?!

இன்று சில தனியார் தோட்டங்களில் நாளொன்றிற்கு 150/- ரூபாவிற்கு அதிகமான கூலியும் வழங்கப்படுகின்றன. அதேவேளை பெரும்பாலான தோட்டக் கம்பனிகள் பெருத்த இலாபம் உழைக்கும் அதேவேளை ஊதிய அதிகரிப்பை மறுக்கின்றன. ஒரு தோட்ட கம்பனி முகாமையாளர், தங்களால் அதிகரித்த சம்பளம் வழங்க முடியும் எனவும், முதலாளிமார் சம்மேளனத்தில் உறுப்பினராகத் தாம் இருப்பதால் அதை மீறி எதுவும் செய்ய முடியாதுள்ளதாகவும், தனிப்பட்ட முறையில் உரையாடும்போது குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய நிலையை அவதானிக்கும் பொழுது 175 வருடங்களாக மிகக்குறைந்த நாட்கூலி பெறும் சமூகமாக உலகில் மலையக சமூகமே முன்னணியில் உள்ளது எனலாம். மேலும் மலையகத்தின் இன்றைய ஸ்திரமற்ற அரசியல் கள நிலைமைகள், தோட்ட நிருவாகங்களின் உறுதியான தன்மை, தொழிற்சங்கங்களின் இயலாமை, வேலைநிறுத்தம் செய்ய முடியாதபடி நீதிமன்ற உத்தரவு, கூட்டு உடன்படிக்கையின் நிருவாகத்திற்கு சாதகமான நிலைமை என்பவற்றை நோக்கும்போது தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊதிய அதிகரிப்பிற்கான அறிகுறிகளே தென்படவில்லை எனலாம். அத்துடன் பொதுத்தேர்தல் மோசடியாக மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தம், அதற்கான இழப்பீடாக முதலாளிமார் சம்மேளனம் கூட்டு உடன்படிக்கையில் கையொப்பமிட்ட தொழிற் சங்கங்களிடமிருந்து நாளொன்றிற்கு ரூபா ஒரு கோடியே பத்து இலட்சம் கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளது. இவ்வாறான நிலைமைகளின் கீழ் தோட்டத் தொழிலாளருக்கு அரசாங்கம் தனது இருப்பு கருதி ஏதேனும் நடவடிக்கை எடுத்தால் அன்றி அண்மை காலத்தில் ஊதிய அதிகரிப்பிற்கு எவ்வித வாய்ப்புமில்லை. எதிர்வரும் 19ம் திகதி இ.தொ.கா தலைமை ஹட்டனில் நடத்தவுள்ள சத்தியாகிரகம் கூட ஊதிய அதிகரிப்பு கிடைக்காதற்கு முழு பொறுப்பு தாங்களே என்ற உண்மை வெளிவந்துவிடக்கூடாது என்பதற்காக மக்களை திசைதிருப்புவதற்கான ஒரு முயற்சியே ஆகும்!

எனவே கடந்த கால நிகழ்வுகளை ஒரு படிப்பினையாகக் கொண்டு எதிர்காலத்திலாவது ஊதிய உயர்வு பற்றி சிந்திக்கும் பொழுது பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ளல் சிறந்த முடிவுகளைத் தரக்கூடியதாக அமையும்.

- குறைந்த பட்ச மாதச் சம்பளத்தை கோரல்
- சம்பளத் தரத்தை மையமாகக் கொண்ட ஒரு சம்பளத் திட்டமாக அது இருத்தல் வேண்டும்.
- வாழ்க்கைச் செலவு அதிரிப்பிற்கேற்க (Cost of Living Index) அதிகரித்து செல்லும் ஒரு சம்பளத் திட்டமாக அது இருத்தல் வேண்டும்.

இவற்றைக் கருத்தில் கொண்டு செயற்பட மலையகத் தொழிற்சங்க அரசியல் தலைமைகள் தவறின் எதிர்காலத்தில் மக்கள் தொழிற்சங்களை புறக்கணித்து தாமாகவே போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்!

நன்றி - நூலகத்திட்டம்



# றோவின் நடவடிக்கைகளைப் பற்றி யாரும் கேள்வியெழுப்புவதில்லையே?

## நெடுமாறன் கேட்கிறார்

***ஈழப் பிரச்சினையில் நீங்கள் ஆரம்பத்தில் டெசோ நடத்தியபோது எல்லா போராளிக் குழுக்களையும் தானே ஆதரித்தீர்கள்? பிறகு ஏன் புலிகளை மட்டும் ஆதரிப்பவராக மாறினீர்கள்?***

அவர்கள் மட்டும் தான் மக்கள் ஆதரவோடு இயங்கும், மக்களை மதிக்கும் போராளிகளாக இருக்கிறார்கள் என்பதை நான் 1985ல் ஈழம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்த போது நேரில் அறிந்து கொண்டேன். தவிர போராளிக் குழுக்கள் ஒற்றுமையாக இருக்கக் கூடாது என்று திட்டமிட்டு அதைக் குலைத்தது இந்திய அரசின் 'றோ' உளவுப் பிரிவு தான்.

1983ல் எல்லாப் போராளிக் குழுக்களுக்கும் இந்திய இராணுவத்தின் மூலம் பயிற்சி அளிக்க முன்வந்த போது முதலில் புலிகள் அதை ஏற்கவில்லை. 'றோ' அதிகாரி உன்னிகிருஷ்ணனிடம் பிரபாகரன் கேட்டார். 'எதற்காக எங்களுக்குப் பயிற்சி? நாங்கள் தனிநாடு அடைவதற்கா? அல்லது எங்களைக் கொண்டு இலங்கை அரசை மிரட்டி உங்கள் விஷயங்களைச் செய்து கொள்வதற்கா?' என்று கேட்டார். அது றோவுக்குப் பிடிக்கவில்லை. புலிகளை விட்டுவிட்டு மற்றவர்களுக்குப் பயிற்சி தந்தார்கள்.

நான் உடனே இந்திராவுக்கு இது தவறு என்று கடிதம் எழுதினேன். அவர்களுக்கும் பயிற்சி தரவேண்டும் என்று சொன்னேன். பயிற்சி தரும் முடிவை நான் ஆதரித்தேன். என் கடிதம் நரசிம்மராவுக்கு அனுப்பப்பட்டு மற்றொரு உளவுப் பிரிவான ஐ.பியிலிருந்து ஒரு உயர் அதிகாரி வந்து பேசி, புலிகளுக்கும் பயிற்சி தர ஏற்பாடு செய்தார். ஐ.பி. புலிகளுக்கு ஆதரவாக இருந்தது. றோ எதிராக இருந்தது. மற்ற இயக்கங்களைப் புலிகளுக்கெதிராகத் திருப்பி விட்டார் றோ அதிகாரி உன்னிகிருஷ்ணன். பின்னால் அவரை சி.ஐ.ஏவுக்கு வேலைசெய்கிறார் என்று சொல்லி கைது செய்தார்கள்.

ஒவ்வொரு குழுவையும் எல்.டி.டி.ஈக்கு எதிராக துாண்டி விட்டார்கள். அந்த முயற்சிகள் தோற்றதும் புலிகளுக்கெதிராக கருத்துப் பிரசாரம் செய்தார்கள். இந்திய அமைதிப் படையில் பணியாற்றிய பல அதிகாரிகள் பின்னால் புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்களெல்லாம் றோவைப் பற்றி கடுமையாக விமர்சித்திருக்கிறார்கள். றோ எப்படி மிஸ்லீட் பண்ணியது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

***எந்தக் கட்டத்தில் ஈழப்பிரச்சினையில் இந்திய அரசு தவறு செய்ய ஆரம்பித்தது என்று நினைக்கின்றீர்கள்?***

ராஜிவ் காலத்தில் தான். ஆனால், அவர் வேண்டுமென்றே அப்படிச் செய்ததாக நான் நினைக்கவில்லை. அவருக்கு அனுபவமும் கிடையாது. ஈழத் தமிழர் பிரச்சினையில் முழுமையாகத் தெரிந்து வைத்திருந்த இரண்டு பேரையும் ராஜிவ் காந்தி தனக்கு வேண்டாமென்று அனுப்பி விட்டார். ஒருவர் சீனியர் டிப்ளமேட்டான ஜி.பார்த்தசாரதி, இன்னொருவர் வெளியுறவுச் செயலாளராக இருந்த ஏ.பி.வெங்கடேஸ்வரன். அவர்கள் இருவரும் ஒன்றும் என்னைப் போல் தனி ஈழத்தை ஆதரித்தவர்கள் அல்ல. ஆனால், தமிழர்களின் பிரச்சினை என்ன என்று நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார்கள்.

இந்திரா, ஜெயவர்த்தனாவிடம் பேசுவதற்கு ஏன் சீனியரான ஜி.பியை அனுப்பினார்? அது உலக நாடுகளுக்கெல்லாம் இந்திரா தெரிவித்த மெசேஜ். எப்படி அமெரிக்கா குட்டிக்குட்டி பிரச்சினைக்கெல்லாம் கிசிஞ்சரை அனுப்பாதோ, அது மாதிரித் தான் இதுவும். ஜி.பி. போகிறார் என்றால், இந்தியா இதில் மிகவும் தீவிரமாக இருக்கிறது என்று அர்த்தம். ஜி.பி., ஜெயவர்த்தனாவை அனெக்ஷர் 'சி' என்ற federal திட் டத்தை ஏற்றுக் கொள்ளச் செய்தார், அப்போது ஆயுதப்போராட்டம் தீவிரமாகவில்லை.

இந்திரா உயிரோடு இருந்திருந்தால், அப்போதே பிரச்சினை தீர்ந்திருக்கும். இந்திரா மறைந்த உடனே ஜெயவர்த்தனா இனிமேல் ஜி.பி. வந்தால் சந்திக்க மாட்டேன் என்று தெரிவித்தார். ராஜிவ் காந்தி வெங்கடேஸ்வரனை பகிரங்கமாக டிஸ்மிஸ் செய்தது ஜெயவர்த்தனாவுக்கு இன்னொரு தவறான மெசேஜ் ஆகிவிட்டது. திம்பு பேச்சுவார்த்தையின் போது எல்லா போராளிக் குழுக்களும் ஒரே நிலை எடுத்தது றோ அமைப்புக்குப் பிடிக்கவில்லை. அவர்களைப் பிரிப்பதில் அதன் பிறகு றோ மும்முரமாக ஈடுபட்டு வெற்றி பெற்றது.

***ஆனால். ராஜிவ்காந்தி படுகொலைக்குப் பிறகு தமிழ் நாட்டில் ஈழத்தமிழர் பிரச்சினையிலும் புலிகளை ஆதரிப்பதிலும் மக்களிடையே பெரிய மனமாற்றம் ஏற்பட்டு விட்டது என்பதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?***

ராஜிவ் காந்தி கொலை என்பது வருந்தத்தக்க ஒன்று என்பதில் சந்தேகமும் இல்லை. ஆனால், இதில் புலிகளை சம்பந்தப்படுத்தி ஒரு பெரிய தவறான பிரசாரம் தமிழ்நாட்டில் மக்களிடம் தொடர்ந்து செய்யப்பட்டு விட்டது. முன்னாலிருந்தே அதாவது 1987லிருந்தே புலிகளுக்கெதிராக மீடியாவில் இந்தப் பொய்ப் பிரச்சாரம் நடந்து வருகிறது. அது மேலும் தீவிரமாகிவிட்டது. மறுதரப்புக் கருத்துக்களை தெரிவிக்கக்கூட விடாமல் தடுத்துவிடும் அளவுக்கு இது நடந்து வந்திருக்கிறது. எங்களைப் போன்ற ஆதரவாளர்கள் மீதெல்லாம் தடா ஏவி விடப்பட்டது. திருமண வீட்டுக்குச் சென்றால் கூட என்னைக் கண்காணித்தார்கள்.

இந்த அடக்குமுறையினால், பொய்ப் பிரச்சாரத்தினால், மக்களிடையே சற்று அச்சம் ஏற்பட்டது உண்மை. ஆனால், ஆதரவு என்பது நீறுபூத்த நெருப்பாக இருந்து வருகிறது. ராஜிவ் காந்தி கொலை வழக்கில் அப்பாவிகள் தண்டிக்கப்பட்டிருப்பதை எதிர்த்து நாங்கள் வழக்கு நிதி சேர்க்க சாதாரண மக்களிடம் சென்றோம். கிட்டத்தட்ட 40 லட்சம் ரூபாய் திரட்ட முடிந்தது. பொய் வழக்கு என்பதை உச்ச நீதிமன்றத்தில் நிரூபித்தோம். அதனால் தான் பலர் விடுதலை செய்யப்பட்டார்கள். மரண தண்டனைக்கெதிரான பிரச்சாரத்துக்கு ஏராளமான மக்கள் ஆதரவு கிடைத்திருக்கிறது.

***ராஜிவ்காந்தி கொலைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பில்லை என்பது தான் உங்கள் நிலையா?***

உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் இதை தடா சட்டத்தின் கீழ் போட்டதே தவறு என்று சொல்லி விட்டார்கள். எனவே அதையொட்டி சதியாலோசனை குற்றச்சாட்டும் அடிபட்டுப் போய் விட்டதே. யாரெல்லாம் தீவிர எல்.டி.டி.ஈ என்று சொன்னார்களோ அவர்களெல்லாம் வழக்கில் விடுவிக்கப்பட்டார்கள்.

புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டதற்கு இரண்டு காரணங்கள் தரப்பட்டன. ஒன்று இவர்கள் இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டையும் சேர்த்து அகண்ட தமிழ் நாட்டு விடுதலைக்காக போராடுகிறார்கள் என்றார்கள். இதற்கு எந்த ஆதாரமும் இதுவரை தரப்படவில்லை.

இரண்டாவதாக தமிழர் மீட்சிப் படையினருக்குப் பயிற்சி தந்து அனுப்பி வைப்பதிருப்பதாகச் சொன்னார்கள். இதில் ஈழத்தில் சென்று பயிற்சி பெற்றவர்கள் என்ற குற்றச்சாட்டுக்குள்ளானவர்கள் மீது 5 ஆண்டுகள் தடா கோர்ட்டில் வழக்கு நடந்து குற்றம் நிரூபிக்கப்படாமல் அத்தனை பேரும் விடுதலையாகியிருக்கிறார்கள். புலிகளுக்கு ஆதரவு காட்டியவர்கள் என்று சுமார் 20 வழக்குகளில் அத்தனை பேரும் விடுதலை ஆகியிருக்கிறார்கள். எதிலும் குற்றச்சாட்டுக்கள் நிருபிக்கப்படவில்லை.

***நீங்கள் சொல்கிற செய்திகள் எதையும் பத்திரிகைகளில் பார்த்த மாதிரி இல்லையே?***

ஓர் உதாரணம் சொல்கிறேன். காந்தளகம் பதிப்பகம் சச்சிதானந்தம், ஈழவேந்தன் ஆகியோர் மீது புலிகளுக்கு மருந்து கடத்தியதாக வழக்கு. ஏழெட்டு மாதம் சிறைக்குப் பின் ஜாமீனில் வரவே பெரும்பாடாக இருந்தது. மூன்று ஆண்டுகள் வழக்கு நடந்தது. ஹிந்து பத்திரிகையில் வழக்கு விசாரணை குறுக்கு விசாரணை கட்டத்திலெல்லாம் தொடர்ந்து செய்தி போட்டுக் கொண்டிருந்தார்கள்.

கடைசியில் தீர்ப்பு வந்து அவர்கள் எல்லோரும் விடுவிக்கப்பட்டபோது அந்தத் தீர்ப்புச் செய்தி மட்டும் வெளியிடப்படவில்லை. நாங்கள் பிரஸ் கவுன்சிலிடம் முறையிட்டோம். பத்திரிகைளை அனுப்பிவைத்தோம். கடைசியில் பிரஸ் கவுன்சில் உத்தரவின்படி ஓராண்டு கழித்து சின்னதாக ஒரு மூலையில் அந்தத் தீர்பை ஏதோ இப்போதுதான் நடந்தமாதிரி வெளியிட்டார்கள்.

ஹிந்து மாதிரி பத்திரிகையே இப்படி இருந்தால் நாங்கள் என்ன செய்ய முடியும்.

***மீடியா உங்கள் விஷயத்தில் இப்படிச் செய்வதற்கு என்னகாரணம் என்று நினைக்கின்றீர்கள்?***

ஒரு முக்கியமான காரணம் இலங்கையில் தனி ஈழம் அமைந்து விட்டால், இங்கேயும் தமிழ்நாடு பிரிந்து போய்விடும் என்று பயப்படுகிறார்கள். இது நியாயமே இல்லை.



வங்கதேசம் பிரிகிறபோது இந்தியாவில் எல்லா மக்களும் அதை ஆதரித்தார்கள். யாரும் அப்போது இங்கே இந்தியாவில் இருக்கிற மேற்கு வங்கமும் அதோடு சேர்ந்து போய்விடும் என்று பயப்படவே இல்லை. தமிழன் மீது மட்டும் ஏன் சந்தேகப்பட வேண்டும்.

***தமிழர்கள் ஒரு காலத்தில் தனி நாடாக திராவிட நாடு கேட்டது இந்த பயத்துக்கு காரணமாக இருக்குமா?***

அப்படிப்பார்த்தால் கூட இந்த நாட்டிலிருந்து பிரிந்து போகவேண்டும் என்ற முழக்கத்தை முதலில் எழுப்பியது தமிழர்கள் அல்ல. 1944ல்தான் திராவிட நாடு கோரிக்கை எழுப்பட்டது. அதற்கும் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு வங்காளத்தில் /பகுல் என்று ஒரு முஸ்லிம் லீக் தலைவர் இருந்தார். அவர் 1938ல் முதலமைச்சராக இருந்தவர். அவர் இந்தியாவை ஹிந்துஸ் தான், பாகிஸ்தான், பெங்கால்ஸ்தான் என்று மூன்றாகப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பினார்.

பின்னாளில் பாகிஸ்தான் பிரதமராக இருந்தவர் சுஹ்ரவர்த்தி. அவர் வங்க முதலமைச்சராக இருக்கும் போதே கேபினட் கமிஷனரிடம் வங்கத்தைத் தனியாகப் பிரிக்க வேண்டுமென்று சொன்னார். அதற்காக ஜின்னாவால் கண்டிக்கப்பட்டார்.

மாநில் முதலமைச்சர்களாக இருந்தவர்களே தனி வங்கம் பற்றி பேசியிருந்தும், 1971ல் யாரும் மறுபடியும் வங்கம் இந்தியாவில் இருந்து பிரிந்துவிடும் என்று கருதவில்லை. தமிழர்கள் மீது மட்டும் சந்தேகம் ஏன்? புருஷனுக்கு மனைவி மீது சந்தேகம் வரக்கூடாது. வந்துவிட்டால், வேறு வழியே இல்லை. டைவோர்ஸ் தான். தமிழர்கள் மீது சந்தேகப்படுகிறவர்கள் தான் பிரிவினைக்கான விதையை எங்கள் மனதிலே விதைக்கிறார்கள். அது சரியல்ல. பாசிட்டிவ் அப்ரோச் வேண்டும்.

***உங்களைப் போல் தமிழ் தேசிய இனத்துக்கு சுய நிர்ணய உரிமை வேண்டும் என்று சொல்லும் வேறு பல அமைப்புகள் கூட உங்களைப் போல விடுதலைப் புலிகளை ஆதரிப்பதில்லை. அவர்கள் மீது பல விமர்சனங்களை வைக்கிறார்கள். எடுத்துக்காட்டாக ராஜிவ் கொலை வழக்கில் மரண தண்டனை கூடாது என்று நீங்கள் நிலை எடுத்தீர்கள். ஆனால். விடுதலைப் புலிகள் இயக்கம் தான் குற்றவாளிகள் என்று தீர்மானிப்பவர்களுக்கு மரண தண்டனை வழங்கத்தானே செய்கிறது என்பது ஒரு விமர்சனம். இதில் உங்கள் கருத்து என்ன?***

பலரும் என்னைக் கேட்கிறார்கள். ராஜிவ் கொலை வழக்கில் தானே நீங்கள் மரண தண்டனையை எதிர்க்கிறீர்கள். இதற்கு முன்பு எதிர்த்ததில்லையே என்கிறார்கள். உண்மை தான். நான் ஒன்றும் அதை மறைக்க விரும்பவில்லை. இதிலிருந்து தான் எனக்கு அந்தச் சிந்தனை வந்தது. காரணம், உலகிலேயே முதல் முறையாக இந்த வழக்கில் தான் குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் மரண தண்டனை என்று தீர்ப்பு சொல்லப்பட்டது. இது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அதனால் இது பற்றி சிந்திக்கத் தொடங்கினோம். இப்படி விதிக்காமல் இருந்திருந்தால் எங்களுக்கும் இந்தச் சிந்தனை வந்திருக்காது.

கடைசியில் உச்ச நீதிமன்றத்தில் 19 பேரை விடுதலை செய்தார்கள். அவர்களும் துாக்கில் போடப்பட்டிருந்தால் எவ்வளவு பெரிய கொடுமை: தவறு.

இரண்டாவதாக மரண தண்டனை கூடாது என்று விடுதலைப் புலிகள் கேட்கவில்லை. அவர்கள் நாட்டில் ஏன் மரண தண்டனை ஒழிப்பு இல்லை என்பதற்கு அவர்கள் தான் பதில் சொல்ல வேண்டும். தவிர அவர்கள் செய்வது எல்லா நாட்டிலும் இந்தியா உட்பட இராணுவத்தில் செய்வது தான். துரோகம் செய்தால், எதிரிக்கு உளவு வேலை பார்த்தால் தண்டனை உண்டு. துரோகத்தால் பத்து பேருக்கு உயிர் போவதாயிருந்தால் துரோகியை தண்டிக்கிறார்கள். அது யுத்த நிலைமை.

***அத்தகைய நிலைமையில் நீங்கள் மரண தண்டனையை ஒப்புக்கொள்கிறீர்களா?***

அப்போதும் கூட, எவ்வளவு துரோகம் செய்திருந்தாலும் மரண தண்டனைக்கு பதிலாக வேறு தண்டனைகள் தரலாம். மரண தண்டனை கூடாது என்பது தான் என்னுடைய நிலைப்பாடு. ஆனால், அதை நான் புலிகளிடம் வற்புறுத்த முடியாது. நான் என் நாட்டில், என் மக்களிடம் தான் வேண்டுகோள் விடுக்க முடியும். அங்கே அவர்கள் நாட்டு மக்கள் தான் வேண்டுகோள் விடுக்கலாம்.

***ஈழப் போராட்டத்தில் முன்னணியில் இருப்பவர்கள் விடுதலைப் புலிகள் தான் என்று ஏற்றுக் கொள்பவர்கள் மத்தியில் கூட அவர்கள், தங்கள் இயக்கத்துக்குள்ளேயும் வெளியிலேயும், முரண்படுகிறவர்களை நடத்தும் விதம் பற்றி விமர்சனங்கள் உள்ளன. உங்களுக்கும் அவை தெரிந்திருக்கும். அவற்றை அவர்களுடன் நீங்கள் விவாதித்து உண்டா?***

உண்டு. அந்த இயக்கத்துக்குள் என்ன நடக்கிறது என்பது பற்றி இங்குள்ள பலரையும் விட எனக்குச் சற்று அதிகமாகவே தெரியும். இந்தியாவின் றோ, சிங்கள உளவுத்துறை ஆகியோரின் கையாட்களாக பல இயக்கங்களும் விலை போன பிறகு, புலிகளுக்கு மட்டுமல்ல, ஈழ விடுதலை போராட்டத்துக்கே பல அபாயங்கள் உள்ளன. முதலில் சொல்லிப் பார்க்கிறார்கள். இயேசு காலத்திலிருந்தே யூதாஸ்கள் உண்டு. சொல்லியும் கேட்காதபோது நடவடிக்கை எடுக்கிறார்கள்.

இரண்டாவதாக அவர்கள் மற்றவர்களை சகித்துக் கொள்வது இல்லை என்று சொல்வதும் தவறு. எதையும் ஜனநாயகபூர்வமாகவே நடவடிக்கை எடுக்கிறார்கள். மக்கள் மத்தியில் மக்கள் குழுக்கள் அமைத்திருக்கிறார்கள். அவற்றில் விவாதித்து தான் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. போர் சம்பந்தமான விஷயத்தில் நிர்வாகம், நீதி, மக்கள் பிரச்சினைகள் முதலியவற்றில். மக்கள் குழுக்கள் தான் முடிவு எடுக்கின்றன. புலிகள் தலையிடுவதில்லை.

⇨ 13

# போர் தந்த அழிவு!

## இரண்டு தசாப்த காலக் கணக்கெடுப்பு

– தொகுப்பு : மகேஷ்

'போரின் செலவீனம்' (Cost of war) என்று சொன்னதும் ஒருவரது மனதில் உடனடியாக ஞாபகத்திற்கு வருவது நாளாந்த போர் நடவடிக்கைகட்கான செலவுகளும், பொருளாதார அழிவுகளால் ஏற்படும் செலவீனங்களும் மட்டும் தான். ஆனால், உண்மையில் போரின் செலவீனம் இதைவிடவும், பாரியது. இலகுவில் கணக்கிட்டு விடப்பட முடியாதது. மனித உயிர்களின் இறப்பும், சிதைவும் அவர்களது உழைப்புச் சக்தி அல்லது படைப்பாற்றலின் அழிவு, சமூக உறவுகளின் உடைவு, மற்றும், விதவைகள், அநாதைகளின் உருவாக்கம், மக்களின் இடப்பெயர்வு போன்றவை எல்லாம் கணிப்பிட முடியாத யுத்த செலவீனங்கள் தான் உண்மையில் மொத்தமான செலவீனம் என்பது, பொருளாதார செலவீனங்கள், மனிதவள செலவீனங்கள், சமூக அரசியல் மற்றும் மனித விழுமியங்களின் செலவீனங்கள், என்று பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கியது. இவற்றில் பொருளாதார செலவீனம் மட்டுமே ஓரளவுக்கு கணிப்பிடப்படக் கூடியது. ஏனையவற்றை சரியாகக் கணிப்பிடுவது என்பது சாத்தியமாகக் கூடிய ஒன்றல்ல. ஒரு நாட்டின் வளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றுக்கு இந்தச் செலவீனங்கள் எவ்வளவு தூரம் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்பதை ஒருபோதும் சரியாகக் கண்டிறிந்து விட முடியாது என்றே சொல்ல வேண்டும்.

இரண்டு நாடுகட்கிடையிலான யுத்தம் போல் அல்லாது உள்நாட்டில் நடைபெறும் யுத்தம் பெருமளவு வேறுபட்ட ஒன்றாகும். அருகருகாகவும், நெருங்கியும் வாழ்ந்த மக்கள் தமக்கிடையே உருவாக்கிக் கொண்டுள்ள சமூக பொருளாதார உறவுகள் காரணமாக அவர்களிடையே உருவாகும் முரண்பாடுகளும் வன்முறையும் மிகவும் கொடுமையானதாகவும் மனிதாபிமானமற்ற வடிவங்களைக் கொண்டதாவும் அமைந்து விடுவதுண்டு. இது அவர்களது சமூக விழுமியங்களையும், மனித உறவுகளையும் சிதைவடையச் செய்கிறது. இலங்கையில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர் இந்த இழப்புகளையும் உள்ளடக்கியதாக அமைகிறது.

### பொருளாதார செலவீனம்

ஒரு போரின் பொருளாதார செலவீனம் பற்றி மதிப்பீடும் போது நாம் இரண்டு முக்கிய விடயங்களைக் கருத்தில் எடுக்க வேண்டும். அப்போது தான் போரின் செலவீனம் பற்றிய ஒரு பருமட்டான முடிவுக்கேனும் வரமுடியும்.

ஒன்று போருக்காக செலவிடப்படும் செலவீனங்கள். அதாவது போருக்காக செலவிடப்பட்ட அல்லது போரியால் அழிவுற்ற எல்லா வளங்களதும் செலவீனங்கள். இதனை அளவிடச் செய்வதற்கு, அரசாங்க தரப்பு வரவு செலவுத் திட்டங்கள், பிற நிதியறிக்கைகள், அழிவுகள், பாதிப்புகள், இடப்பெயர்வு என்பன குறித்த அறிக்கைகள் முதலியவைகளிலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மற்றையது யுத்தத்தால் இழந்த அல்லது அடையப்பட முடியாமல் போய்விட்ட வருமானத்தின் இழப்பு. இந்த விடயத்தை அளவீடு செய்வது என்பது மிகவும் சிக்கலானதாகும். உல்லாசப் பயணிகளின் வருகைக் குறைவு, வடக்கு கிழக்கின் உற்பத்தி வீழ்ச்சி போன்ற ஒன்றிரண்டு விடயங்களை ஓரளவுக்கு மதிப்பிட முடியும். யுத்தத்துக்கு முந்திய உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு இவற்றை ஓரளவுக்கு மதிப்பிட முடியும். ஆனால், இதுகூட பகுதியளவுக்கே சரியாக இருக்க முடியும்.

உண்மையில் போரின் முழுமையான அளவிலான தாக்கத்தை வர்த்தகம் மீதான நம்பிக்கை வீழ்ச்சி, முதலீட்டின் வீழ்ச்சி, வளர்ச்சி வேகத்தின் வீழ்ச்சி, வருமான வீழ்ச்சி மற்றும் சேமிப்பு வீழ்ச்சியென்று நிலவும் எதிர்மறைப்போக்கின் மத்தியில், முழுமையாக அறிந்து கொள்ள முடியாது. போரின் செலவீனம் பற்றிய முழுமையான மதிப்பீடு பற்றி முழுமையாக அறிந்து கொள்ள இலங்கைக்கான மிகவும் சிறப்பாக வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு பொருளாதார செயற்முறைத் திட்டம் இருந்திருக்க வேண்டும். ஆனால், எமக்கு அப்படி ஒன்று இல்லாதபோது இதற்கு வாய்ப்பே இல்லை.

ஆயினும், முடிந்தளவுக்கு இதை மதிப்பீடு செய்வதில் தேசிய சமாதானப் பேரவை முயற்சி செய்வது ஒரு அறிக்கையைத் தயாரித்துள்ளது. அந்த அறிக்கை வெளிப்படுத்தும் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

### நேரடியான போர்ச்செலவீனம்

போரின் நேரடியான செலவீனத்தை அளவிடும் ஒன்றாக வரவு செலவுத்திட்டத்தில் யுத்தத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையை எடுத்துக் கொள்ளலாம். இந்தச் செலவானது படையினரின் சம்பளம், மற்றும் கொடுப்பனவுகள், மற்றும் அவர்களுக்கான பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவு என்பவையும், இராணுவ நடவடிக்கைகளின் போது பாவிக்கப்பட்ட ஆயுதங்கள், தளவாடங்கள், போன்றவையும் உள்ளடங்கும்.

1982ம் ஆண்டு முதல் 2000 ஆண்டு வரையான 18 வருடத்தின் போருக்கான செலவீனங்களை அட்டவணைகள் 2ம் 3ம் காட்டுகின்றன. ஆனால் ,இவை யுத்தத்திற் மறைமுகப் பின்விளைவுகளாக வந்த செலவீனங்களை உள்ளடக்கவில்லை. தவிரவும், பாதுகாப்பு காரணங்களுக்கான செலவீனங்கள் பொரின் காரணமாக அதிகரித்தது. அதிகளவிலான பொலிஸ் நிலையங்கள், மற்றம் நபர்களைச் சேர்த்தது போன்ற திணைக்ளள விரிவாக்கம் போன்றவையும் கூட மொத்தம் போர்ச் செலவீனங்களில் உள்ளடக்கவேண்டியவையே. உதாரணமாக, சிவில் நிர்வாகத்துக்கான செலவு 2.5 பில்லியன் ரூபாயாக 1983இல் இருந்தது. பொதுஜன பாதுகாப்பு மற்றும் ஒழுங்கமைப்புக்கான செலவீனம் 0.56 பில்லியனிருந்து 6.14 பில்லியனாக கிட்டத்தட்ட ஒரே காலத்துள் அதிகாரித்தது.

போர் நிலை காரணமாக நேரடியாக பொசன பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட அரசாங்கத் திணைக்களங்களின் செலவீனங்களும், பெருமளவுக்கு அதிகரித்தன. இவை வரவு செலவுத் திட்டத்தில் நேரடியாக உள்வாங்கப்பட்டன. ஆனால், இவை போர்ச் செலவீனங்களாகக் கணிக்கப் படவில்லை.

1982இல் பாதுகாப்புக்காக் சம்பளம் மற்றும் பொருள்கள் சேவைகளுக்கான செலவீனம் கிட்டத்தட்ட ரூ. 486 மில்லியனாக இருந்தது. இது உள்நாட்டு உற்பத்தியின் 0.5%மாகவே இருந்தது. ஆனால், 1985இல் இது 4.6 பில்லியனாக அதிகரித்ததுடன் உள்நாட்டு உற்பத்தியின் 2.84% ஆக மாறியது. 1987இல் இது 6 பில்லியனாக மேலும் அதிகரித்துடன் உள்நாட்டு உற்பத்தியின் 3.05% மாக மாறியது. 1989 - 1990 அளவில் ஓரளவுக் குறைந்து விட்டு 1991 - 1994 காலப்பகுதியில் 2.85% - 3.35% என்ற மட்டத்துள் இருந்துவந்துள்ளது.

1995இல் பாரிய இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பித்தன. போர்ச் செலவீனம் 15.18 பில்லியனாக அதிகரித்தது. 1996 இல் இது 38.11 பில்லியனாகியது. இது முறையே உள்நாட்டு உற்பத்தியில் 5.31% ஆகவும், 4.96% ஆகவும் மாறியது. 1997இல் 37.06 பில்லியனாக இருந்த செலவீனம், 1998 இல் 42.95 பில்லியனாக மாறியது. 2000ஆம் ஆண்டு வருகையுடன் மேலும் விரிவடைந்த போர் நடவடிக்கை காரணமாக செலவீனமும் - பொதுசன பாதுகாப்பு மற்றும் ஒழுங்குக்கான செலவு நீங்கலாக 66 பில்லியன் ரூபாவாக மாறியது. (உ.நா.உ இன் 5.3%)

1985ம் ஆண்டுவரை வேகமாக வளர்ந்த செலவீனம், அதன்பின் 1993வரை 2.5% - 3.0% என்ற மட்டத்தில் இருப்பதைக் காணலாம். 1987 முதல் 1990 வரையான வெளிநாட்டுப் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளை இந்திய சமாதானப் படை பொறுப்பேற்றிருந்தது. தெளிந்த இலங்கைப் படையின் செயற்பாடுகள் பெரும்பாலும் தெற்கிலுள்ள கிளர்ச்சிகளை அடக்குவதிலேயே குவிக்கப்பட்டிருந்தன. 1991இன் பின் பாதுகாப்புச் செலவீனம் வேகமாக அதிகாரித்தது.

1995இலும் 1996 இது ஓரளவுக்கு குறைந்துள்ளது.

உள்நாட்டு பாதுகாப்புப் பிரச்சினைகள் இல்லாத அலய்நாடுகள் தமது இராணுவ செலவீனங்களை, அந்நாடுகளின் உள்நாட்டு உற்பத்தியில் 15%க்கும் குறைவாகவே கொண்டுள்ளன. 1985இல் நேபாளத்தின் இராணுவச் செலவீனம் கிட்டதட்ட அவர்களின் உள்நாட்டு உற்பத்தியின் 0.9% ஆக இருந்தது. பங்களாதேஷ் 1.7%மும், அர்ஜன்ரீனா, மெக்சிக்கோ, வெனிசுலா, பிலிப்பைன்ஸ், மொறிசியஸ், தான்காசனியா பெரு குவாட்டமாலா, போன்ற நாடுகளின் பாதுகாப்பு செலவீனம், உள்நாட்டு உற்பத்தியின் 1.5ற்கு கிட்டவாகவே இருந்துவருகின்றன.

1983இற்கு முன்னர் இலங்கையின் பாதுகாப்பு செலவீனம் உள்நாட்டு உற்பத்தியின் 0.5% ஆகவே இருந்தது. நாட்டில் போதிய பாதுகாப்பு நிலைமையைக் கொண்டிருக்கப் போதாமல் இருந்திருக்கலாம் என்று வாதிக்க இடமுண்டு. கோஸ்டா றிக்காவில் ஒரு வழமையான இராணுவம் இல்லாமலே அந்த நாடு 0.6%த்தை பாதுகாப்பு செலவீனமாகக் கொண்டுள்ளது. இலங்கையில் 1982க்குப் பிறகு 1.5% ஆக இது அதிகரிக்கப்பட்டதால், இதனை சாதாரண நிலைமைகளின் கீழான பாதுகாப்புத் தேவைக்கான செலவீனம் என்று எடுத்துக் கொள்ளலாம். இந்த மட்டத்திற்கு மேல் வருபவற்றை போருக்-



**அரச செலவீனம் பொதுசன ஒழுங்கும் பாதுகாப்பும்**

| வருடம் | பொதுசன ஒழுங்கும் பாதுகாப்பும் (பில்) | உள்நாட்டு உற்பத்தியில் வீதம் | 0.6% உள்நாட்டு உற்பத்தி மேல் | ரூ. மில்லியன் | 1998இன் பெறுமதி (பில்) |
|---|---|---|---|---|---|
| 1982 | 415.4 | 0.41 | - | - | - |
| 1983 | | 560.3 | 0.46 | - | - |
| 1984 | | 693.9 | 0.45 | - | - |
| 1985 | 1059.1 | 0.65 | 0.05 | 81.4 | 324.10 |
| 1986 | 1445.0 | 0.8 | 0.5 | 361.2 | 1432.15 |
| 1987 | 2109.0 | 1.10 | 0.50 | 985.9 | 3901.97 |
| 1988 | 2547 | 1.14 | 0.54 | 1206.4 | 3455.43 |
| 1989 | 3236 | 1.42 | 0.82 | 2647.6 | 6156.39 |
| 1990 | 4585 | 1.04 | 0.44 | 1642.8 | 3399.90 |
| 1991 | 3882 | 1.04 | 0.44 | 1642.8 | |
| 1992 | 4478 | 1.05 | 0.35 | 1748.5 | 2970.55 |
| 1993 | 4746 | 0.95 | 0.35 | 1478.5 | 2970.55 |
| 1994 | 6392 | 1.11 | 0.51 | 2936.8 | 4597.77 |
| 1995 | 6140 | 0.91 | 0.31 | 2091.6 | 2801.52 |
| 1996 | 5591 | 0.72 | 0.12 | 1977.0 | 2224.12 |
| 1997 | 7908 | 0.88 | 0.22 | 1977.0 | 2224.12 |
| 1998 | 8466 | 0.83 | 0.23 | 2345.0 | 2345.00 |
| 1999 | 9636 | 0.77 | 0.17 | 1887.0 | 1780.00 |
| 2000 | 12086 | 0.98 | 0.38 | 4658.0 | 4178.00 |
| மொத்தம் | 84560.71 | | | 25952.9 | 466190.37 |

நன்றி - நூலகத்திட்டம்



காக செவழிக்கப்பட்ட மேலதிக செலவீனம் எனக் கொள்ளலாம். இதன்படி அரசின் போர் நடவடிக்கை காரணமாக 1985இல் உள்நாட்டில் 1.34ஆக இருந்த செலவீனம், 1987இல் 1.55% ஆக மாறியது. பிறகு இது 1%ஆகக் குறைந்து 1991ல் 1.5% ஆக மாறி 1995இல் 3.8% ஆக அதிகரித்திருக்கிறது. 1996 - 1998 காலப் பகுதியில் 2.6% - 3.5% க்கு இடையிலிருந்தது. 2000ஆம் ஆண்டில் இது 3.8% ஆக அதிகரித்தது.

இந்த அடிப்படையில் 1995 - 1998 செலவீனமாக மேலதிக மொத்த இராணுவ செலவீனம் 213.32 பில்லியனாகும்.

இத்துடன் கூடவே பொதுசன பாதுகாப்பு ஒழுங்கு என்பவற்றுக்கான செலவுகளையும் நாம் சேர்க்க வேண்டும். இதைக் கணக்கில் எடுத்தால் பொதுசனப் பாதுகாப்பு ஒழுங்கைப் பேணுவதற்கான செலவீனம் ரூ4 பில்லியனாக 1993- 1998 காலப் பகுதியில் இருந்து வந்திருக்கிறது.

இராணுவ செலவீனமாக அரசாங்கம் செலவு செய்தவைகள் மட்டுமே நேரடியான போர்ச் செலவீனங்களை முழுமையாகத்

சொத்துக்களான, அரச சொத்துக்கள், வீதிகள், பாலங்கள், நீர்ப்பாசன ஒழுங்கமைப்புக்கள், பிற அசையும் சொத்துக்கள் போன்றவற்றின் அளவுகள் அனந்தம். 1987 - 1994 கால கட்டத்திற்கிடையிலான புனருத்தாரணம், புனர்நிர்மானம், மற்றும் நிவாரணங்களுக்கான மொத்தச் செலவீனம் 22.65 பில்லியன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் உலர் நிவாரண பொருட்கள், மற்றும் நஷ்டஈடு என்பவற்றிற்கான செலவீனமான 12.2 பில்லியன் உள்ளடங்குகிறது. மீதிப் 10.4 பில்லியன் புனர்நிர்மாணம், மீள்குடியேற்றம், என்பவற்றுக்கான செலவீனமாக மதிப்பிடப்பட்டிருந்தது. இந்த மீள் குடியேற்றச் செலவீனம், போர் மீண்டும் மீண்டும் நடந்த காரணத்தால் திரும்பத் திரும்பச் செய்ய வேண்டிய ஒன்றாக மாறியது. இதன் காரணமாக இது திரும்பத் திரும்ப செய்யப்படுகின்ற வீணாக்கப்பட்ட ஒரு செலவீனமாக மாறியது.

1995இல் அரசாங்கம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த காலத்தில் செய்த ஒரு கணீப்பீட்டின்படி புனருத்தாரணம் புனர்-

என்பவற்றைப் பற்றி சிந்திக்கையில் ரூ.30 ஆயிரம் மிகவும் அற்பமான ஒரு தொகை என்பது வெளிப்படை. வவுனியாவில் அவசரகால வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 450 அடி அளவில் கட்டப்பட்ட ஒரு வீட்டுக்கே ரூ. 1 லட்சத்து 17 ஆயிரம் செலவாகியது.

கட்டிங்களின் மீதான குண்டுத் தாக்குதல்கள்', கொழும்பைச் சூழவுள்ள அரச சொத்துக்கள் மீதான தாக்குதல்கள் போன்றவை பலத்த

*போர்ச்செலவீனம் 1987—1998*

*(செலவு, சொத்தழிவு, உற்பத்தி இழப்பு)*

| | | |
|---|---|---|
| *1.* | **நேரடிச் செலவு ரூபா (பில்லியன்களில்)** | |
| 0 | **நேரடியான போருக்கான அரசாங்க செலவு** | **212.32** |
| 0 | **பொதுசன பாதுகாப்பு மேலதிக செலவு** | **40.00** |
| 0 | **புலிகளின் போர்ச் செலவு** | **42.00** |
| 0 | **இடப்பெயர்வு சம்பந்தப்பட்ட செலவு** | **38.00** |
| | | **333.92** |
| *2.* | **சொத்தழிவு, புனர்நிர்மாணச் செலவு** | |
| 0 | **1987 – வடகிழக்கு புனர்நிர்மாணம்** | **10.40** |
| 0 | **1995 – வடகிழக்கு புனர்நிர்மாணம்** | **49.00** |
| 0 | **வீடுகள் புனர்நிர்மாணம் (வடகிழக்கு)** | **10.10** |
| 0 | **வடகிழக்கு வெளியே வீடமைப்பு** | **4.50** |
| 0 | **வடகிழக்கு வெளியே அழிவுகள் (1998 பெறுமதி)** | **112.30** |
| | **1995க்குப் பின்னனா அழிவுகள்** | **24.80** |
| | | **137.10** |
| *3.* | **உற்பத்தி இழப்பு** | |
| 0 | **தொழில் நிபுணர்கள் காரணமான இழப்பு** | **112.50** |
| 0 | **வடகிழக்கு உற்பத்தி இழப்பு** | |
| | **1. 1982 உற்பத்தி குறைவு** | **273.00** |
| | **2.தேசிய வளர்ச்சி வீதத்தில் வட-கிழக்கின் உற்பத்தி** | **392.00** |
| | **இழப்பு** | **120.00** |
| 0 | **உல்லாச பயணத்துறை!** | **120.00** |
| 0 | **அந்நிய முதலீடு** | **75.00** |
| | மொத்த போர் செலவீனம் | 1443.52 |
| | அழிவுகளைத் தவிர்ந்த மொத்த செலவீனம் | 1306.42 |

# கண்ணீரும் குருதியும்

தருவதாக கொள்ள முடியாது. புலிகளால் செலவிடப்பட்ட செலவீனங்களும் கூட கணக்கெடுக்கப்பட வேண்டியவையே. ஆயுதம் மற்றும் தளபாடக் கொள்வனவு, பிறபொருட்கள் சேவைகள் கொள்வனவு இவற்றில் ஒரு சிலவற்றைக் கணிப்பிட முடியுமாயின் முழுமையாக அறிந்து கொள்வதற்கான தரவுகள் இல்லாமலே உள்ளன.

### புலிகளின் போர்ச் செலவீனம்

புலிகளின் போர் நடவடிக்கைகளும், தொடர்ச்சியும் அவர்களும் கூட, ஆயுத தளபாடக் கொள்வனவுக்காக செயற்படுவதைக் காணலாம். அவர்கள் அரசாங்கத்துடன் பெரியளவிலான போரில் நின்றுபிடித்து ஈடுபடுவது அவர்களிடம் தேவையானளவு வளங்கள் இருந்திருக்கின்றன என்பதைக் காட்டுகின்றது. இந்த வளங்கள் வடக்கு கிழக்கிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் கிடைக்கின்றன எனக்கொள்ளலாம். இந்த வளங்கள் கிட்டதட்ட இலங்கையின் இராணுவச் செலவீனத்தின் 20% எனக் கொள்ளலாம் என மதிப்பிடப்படுகிறது. இதன்படி இந்தக் காலகட்டத்தில் இதுவரை புலிகளின் செலவீனம் 42.6 பில்லியனாக இருக்க வேண்டும். இதனை வடக்கு கிழக்கின் உள்ளூர் உற்பத்தியின் விகிதாசாரத்தில் சொன்னால் அது சராசரியாக 5.7% ஆக உள்ளது. ஆனால், இந்தக் கணிப்பு 1982ஆம் ஆண்டின் வடக்கு கிழக்கில் நிலவிய உள்ளூர் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டதாகும். அப்பிரதேசத்தின் உற்பத்தி வீழ்ச்சியின் தீவிரத் தன்மை காரணமாக இந்த விகிதாசாரம் மேலும் அதிகரித்துள்ளதாகவே சொல்ல வேண்டும். இது கிட்டதட்ட 10% ஆக இருக்கக்கூடும் என்று சமாதானப் பேரவை கருதுகிறது.

### சொத்து அழிவு

போர் வடக்கின் பொருளாதாரக் கட்டுமானங்களை அழித்து விட்டுள்ளதுடன், கிழக்கிலே மிகவும் மோசமான அழிவுக்கு இவற்றைச் சிதைத்து விட்டுள்ளது. இந்த அழிவுகளினாலும், அவற்றைப் புதுப்பித்தலினாலும் ஏற்பட்டுள்ள செலவீனங்களும் மிகப்பாரிய தாக்கத்தினை இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தக் கூடியவை.

போர் நடந்து கொண்டிருந்த காலத்தின் பல்வேறு கட்டங்களில் இந்தக் கட்டுமானங்களை புனருத்தாரணம் செய்வதற்கான பல மதிப்பீடுகள் செய்யப் பட்டுள்ளன. 1987ல் பொதுச் சொத்துக்கள், தனியார் சொத்துக்களின் 1983 - 1987 காலகட்டத்திற்குள்ளான அழிவுகள் பற்றிய மதிப்பீட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. 56 ஆயிரம் வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டதாயும் இன்னும் 34ஆயிரம் வீடுகள் சேதமாக்கப்பட்டதாயும் அது தெரிவித்தது. பொதுச்

நிர்மாணம் என்பவற்றுக்கான ஒரு விரிவான மதிப்பீடு செய்யப்பட்டது. அதன்படி மொத்த மதிப்பீடு 49 பில்லியனாக இருந்தது. இவற்றில் 95 பில்லியன் நீர்பாசனத்-



துக்கும், 7.7 பில்லியன் தொழிற்துறைக்கும், 5.5 பில்லியன் பொதுசன போக்குவரத்துக்கும் வீதி பாலம் புகையிரதப் பாதை போன்றவற்றுக்கும் 7.8 பில்லியன் தொலைத்தொடர்புக்கும் 3.2 பில்லியன் மீன்பிடித் துறைக்குமாக ஒதுக்கப்பட்டது. எல்லைப்புறக் கிராம புனர்நிர்மாணம் இந்த மதிப்பீட்டில் இருந்தது.

ஆனால், இந்த மதிப்பீடு தனிநபர்களின் வீடுகளை புனர்நிர்மாணம் செய்வதனையும், இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்துவதையும் உள்ளடக்கவில்லை. வடமாகாணத்திலுள்ள அரசாங்கத் தரப்புத் தகவலின்படி 1996மே மாதம் வரையான நிலைமைகளின் இவை. 17ஆயிரம் வீடுகள் அழிக்கப் பட்டுள்ளன. 64 ஆயிரம் வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. மொத்தமாக பாதிப்புக்குள்ளான வீடுகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 76 ஆயிரம். இந்த வீடுகளைத் திருத்துவதற்கு / புனர்நிர்மாணம் செய்வதற்கான மதிப்பீடுகள் எழுந்தமானவையாகவே இருக்கின்றன. சராசரியாக ரூ.30ஆயிரத்தை புனருத்தாரணத் திட்டம் ஏற்றுக் கொண்டது. இந்தத் திட்டம் 2 லட்சத்து 2 ஆயிரம் வீட்டு அலகுகளை முழு வடகிழக்கு மாகாணத்துக்குமாக ஒதுக்கீடு செய்தது. இந்தத்தொகை முற்றாக அழிந்த வீடுகள் முதல் பாதிப்புற்ற வீடுகள் வரை எல்லாவற்றையும் உள்ளடக்கியது. இந்த வீடுகளின் தரம், அளவு

பாதிப்புக்களை ஏற்படுத்தி உள்ளன. ஜே.ஓ.சி. தாக்குதல், கொல்லன்னாவை எண்ணைக் குதம், தெஹிவளை புகையிரதம், கலதாரி ஹோட்டல், தாக்குதல் போன்றவை பாரிய அளவிலான சேதத்தை விளைவித்தன. மத்திய வங்கி தாக்குதல் மட்டும் 1.85 பில்லியன் ரூபா பெறுமதியான சேதத்தை ஏற்படுத்தியது. இத்தகைய தாக்குதல்களின் மொத்த சேதங்கள் 4.5பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆக, ஒரு பருமட்டான மதிப்பீட்டின்படி, புனருத்தாரணம், புனர்நிர்மாணத்திற்கான செலவீனமானது 112.3 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்படலாம்.

### இடப்பெயர்வின் செலவீனம்

1996ல் மொத்த இடப்பெயர்வின் மாதமொன்றிற்கான செலவீனமாக ரூபா 250 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது. 1994 மார்கழியில் இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை 5லட்சத்து 24ஆயிரம் ஆக இருந்தது. 1996 மார்கழியின் 10 லட்சத்து 17ஆயிரம் ஆக அதிகரித்துள்ளது. இவர்களுக்கான உலர் உணவு விநியோகம் - கடந்த மூன்றாண்டு காலத்தில் மட்டும் 3 பில்லியன் பெறுமதி வாய்ந்ததாக இருந்திருக்கிறது.

1983 முதல் 1989 வரையான காலப் பகுதியில் இடம் பெயர்ந்தோருக்கான சராசரி செலவீனமாக ரூபா 2 பில்லியன் இருந்து வந்தது. 1990 - 98 காலப்பகுதியில் இது 3 பில்லியனாக . அதிகரித்துள்ளது.

உண்மையில் ஒரு உள்நாட்டுப் போர் சமூகத்தின் அடிப்படைகளை அதன் விழுமியங்களை எல்லாம் சிதைப்பதுடன் ஒருவகையான வக்கிரமும் வன்முறையும் கொண்ட கலாசாரத்தை வளர்த்து விடக்கூடியது.

வன்முறை, மனித துயரங்கள், பயங்கர ஆயுதங்கள் மத்தியில் வாழும் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக மனிதாபிமானமற்ற ஒரு நிலையை நோக்கித் தள்ளப்படுவார்கள். வன்முறை அரசியல் சமூக நிறுவனங்களைப் பாதிக்கிறது. ஜனநாயக நடைமுறையைக் கீழே தள்ளிவிடுகிறது. மக்கள் மத்தியிலான பிரச்சினைகளுக்கு வன்முறையே தீர்வு காண்பதற்கான வழிமுறை என்ற எண்ணத்தை வலுவுறச் செய்கிறது. ஆயுதக் கொள்வனவு போன்ற விடயங்கள் அவசர இராணுவத் தேவைக்காக அவசரமாகச் செய்யப்படுகையில் ஊழலும், அதிகாரத் துஷ்பிரயோகமும் மலிகின்றது.

போரின் பொருளாதார, மனித சமூக, மற்றும் விழுமிய செலவீனங்கள் அனைத்தும் இலங்கைச் சமூகத்தாலும், சுமக்கப்பட வேண்டி உள்ளது. சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த சகலராலும், அரசாங்கமும், தமிழ்ப் போராளிகளும் பெருமளவுக்கு தமது வளங்களைத் திரட்டி யுத்தத்தில் வீசுகின்றனர். மனித உயிர்கள் இறக்கின்றன. சமூக பொருளாதார கட்டுமானங்கள் சிதைக்கின்றன. பெண்கள் விதவைகளாகின்றனர். சிறுவர்கள் அகதிகளாகின்றனர். பெரும்பாலான மக்கள் ஒரு நியாயமான மனித வாழ்வுக்கான இருப்பை அனுபவிக்க முடியாதவாறு மறுக்கப்படுகிறார்கள். போர் தொடர்கிறது.

மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டி இருக்கிறார்கள்.

*அரச பாதுப்பு செலவீனம்*

| வருடம் | பாதுகாப்பு (பில்) | வரவுசெலவு திட்டத்தின் வீதம் | உள்நாட்டு உற்பத்தியில் வீதம் | 1.5%உள்நாட்டு உற்பத்தி | 1.5%உள்நாட்டு உற்பத்தி மேல் | 1998இன் பெறுமதி (பில்) |
|---|---|---|---|---|---|---|
| 1982 | 0.48 | 1.4 | 0.5 | 1.48 | - | - |
| 1983 | 0.98 | 2.5 | 0.8 | 1.82 | - | - |
| 1984 | 1.27 | 2.66 | 0.83 | 2.30 | - | - |
| 1985 | 4.61 | 8.35 | 2.84 | 4.23 | 2.18 | 8.70 |
| 1986 | 4.35 | 7.35 | 2.42 | 2.68 | 1.67 | 7.17 |
| 1987 | 6.00 | 9.39 | 3.05 | 2.94 | 3.06 | 11.48 |
| 1988 | 4.89 | 6.56 | 2.20 | 3.33 | 1.56 | 4.18 |
| 1989 | 4.12 | 5.01 | 1.63 | 3.77 | 0.35 | 0.91 |
| 1990 | 6.91 | 6.92 | 2.15 | 4.82 | 2.09 | 4.83 |
| 1991 | 10.61 | 8.88 | 2.85 | 5.58 | 5.03 | 10.40 |
| 1992 | 13.23 | 11.31 | 3.11 | 6.37 | 6.86 | 14.14 |
| 1993 | 15.41 | 10.97 | 3.08 | 7.42 | 7.99 | 13.60 |
| 1994 | 19.41 | 11.56 | 3.35 | 8.68 | 10.73 | 16.80 |
| 1995 | 35.18 | 17.2 | 5.31 | 9.93 | 25.25 | 33.95 |
| 1996 | 38.11 | 17.4 | 4.96 | 11.52 | 26.59 | 33.22 |
| 1997 | 37.06 | 15.76 | 4.16 | 13.35 | 23.71 | 26.66 |
| 1998 | 42.49 | 15.8 | 4.18 | 15.21 | 27.28 | 27.28 |
| 1999 | 40.67 | - | 3.6 | 16.65 | 23.42 | 22.10 |
| 2000 | 65.40 | - | 5.3 | 18.39 | 47.04 | 42.18 % |
| மொத்தம் | 351.18 | | | | | 277.60 |

நன்றி - நூலகத்திட்டம்



# அமெரிக்க விமானக் குண்டுவெடிப்பு! குற்றவாளிக் கூண்டில் லிபியா!!

**- பிரணவி குணசீலன்**

'இந்த வழக்கில் லிபியா மீது வேண்டுமென்றே, திட்டமிட்டுக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பானது அரசியல் சார்ந்தது. அப்துல் பாசட் அலி அல் மெக்ராகி ஒரே நேரத்தில் மூன்று இடங்களில் எவ்வாறு சமூகமளித்திருக்க முடியும்?'

**- லிபியத் தலைவர் மும்மது கடாபி.**

'ஈரான் ஹஜ் யாத்திரிகர்களின் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதுடன், லிபியத் தலைநகர் திரிப்போலியில் விமானத் தாக்குதல் நடாத்திக் கடாபியின் வளர்ப்பு மகளையும் கொலை செய்த அமெரிக்காவை யார்? எந்த நீதிமன்றத்தில் நிறுத்துவது? என்ன தண்டனையை வழங்குவது?'

'1999 ஆம் ஆண்டு வரையும் அந்த Timerஇன் புகைப்படம் மட்டுமே எனக்குக் காட்டப்பட்டது. அதனைப் பார்வையிடக் கேட்ட போது சி.ஐ.ஏயும், ஸ்கொட்லாந்து பொலிசாரும் மறுத்து விட்டனர். பின்னர் நான் நேரடியாக Timerஐப் பார்த்த போது, புகைப்படத்தில் இருப்பதும் இதுவும் ஒன்றல்ல என்று தெரிந்தது. குண்டு வெடிப்பிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள Timer எமது உற்பத்தி அல்ல.'

**- சுவிற்சர்லாந்தின் மேபோ நிறுவன அதிகாரி**

லண்டனில் இருந்து 1988ஆம் ஆண்டு டிசம்பர் 21ம் திகதி நியூயோர்க்கிற்குப் புறப்பட்ட போயிங் - 747 விமானம் வெடித்துச் சிதறியது. புறப்பட்டுச் சரியாக 37 நிமிடங்கள் 50 வினாடிகளில் இது நடந்தது. ஸ்கொட்லாந்தின் லொக்கர்பீ நகருக்கு மேல் வெடித்துச் சிதறிய பன்-அம் விமான சேவைக்குச் சொந்தமான இந்த விமானத்தில் இருந்த 259 பேரும் இறந்தனர். விமானச் சிதைவுகள் தாக்கியதில் லொக்கர்பீ வாசிகள் 11பேர் மாண்டனர். மொத்தம் 270பேரை இந்த விபத்துப் பலி கொண்டிருந்தது.

இந்தக் குண்டு வெடிப்பிற்கு யார் சூத்திரதாரி என 12ஆண்டுகளாக அமெரிக்க சி.ஐ.ஏ. விசாரணை செய்தது. பல்வேறு சந்தேகங்கள் நிலவின. எனினும் லிபியாவின் உளவுப்பிரிவின் உறுப்பினர்கள் இருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு ஜனவரிமாத இறுதியில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒருவருக்கு ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கப்பட்டு, மற்றவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட விமானக் குண்டுவெடிப்பிற்குப் பின்வரும் மூன்று தரப்பினர்கள் காரணமாக இருக்கலாம் என ஆரம்பத்தில் சந்தேகங்கள் எழுந்தன.

1. ஈரான் புரட்சிப் படையினர்.
2. பலஸ்தீனக் கெரில்லாக்கள்.
3. லிபிய உளவுப் பிரிவினர்

1988ம் ஆண்டு மக்காவிற்கு 'ஹஜ்' யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற ஈரான் விமானமொன்றை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியது. இதற்குப் பதிலடியாகவே ஈரான் புரட்சிப் படையினர் அமெரிக்காவிற்குப் பாடம் படிப்பிக்கும் முகமாக, இத்தாக்குதலை நடாத்தி இருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டது. ஈரானின் அன்றைய அமைச்சர் ஒருவர், நேரம் குறித்து வெடிக்கும் குண்டைப் பகுதி பகுதியாக லண்டனுக்குக் கடத்தினார் என்றும், பின்னர் அக்குண்டு முழுமையாகப் பொருத்தப்பட்டு லண்டனில் வைத்து விமானத்தில் பொதி செய்யப்பட்டுள்ளது எனவும் ஈரான் குறித்த சந்தேகத்தில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த விமான விபத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற விசாரணைகளின் போது, வானொலிப் பெட்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இதை வைத்து பலஸ்தீனக் கெரில்லாக்கள் தான் இத் தாக்குதலை நடாத்தி உள்ளனர் என சி.ஐ.ஏ. கருதியது. வானொலிப் பெட்டிப் பாணியில் பலஸ்தீனக் கெரில்லாக்கள் பல குண்டுத் தாக்குதல்களை நடாத்தி இருந்ததே இதற்குக் காரணமாகும். லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அமெரிக்கர்களைப் பலாத்காரமாக விடுவிக்க அமெரிக்க சி.ஐ.ஏ. திட்டம் ஒன்றைத் தீட்டியிருந்தது என்றும், குறிப்பிட்ட திட்டத்தில் சம்பந்தப்பட்ட சி.ஐ.ஏ. குழு இந்த விமானத்தில் பயணம் செய்ததினால் பலஸ்தீனக் கெரில்லாக்கள் விமானத்தைக் குண்டு வைத்துத் தகர்த்தனர் என்றும் கூறப்பட்டது.

அடுத்த சந்தேகம் லிபியா தொடர்பானது. 1986ல் அன்றைய அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றேகன் லிபியத் தலைநகர் திரிப்போலியில் விமானத் தாக்குதலை நடாத்துமாறு உத்தரவிட்டிருந்தார். இத்தாக்குதலில் லிபியத் தலைவர் கடாபியின் வளர்ப்பு மகள் கொல்லப்பட்டாள். இதற்குப் பழி வாங்கும் வகையிலேயே லிபிய உளவுப் பிரிவு, இத் தாக்குதலை மேற்கொண்டது என்பது லிபியா குறித்த சந்தேகமாக இருந்தது. லிபியா குறித்த சந்தேகத்திற்கு இன்னொரு காரணமும் இருந்தது. இதன்படி அமெரிக்க சி.ஐ.ஏ. லிபிய உளவுப் பிரிவிற்குள் ஊடுருவி செயற்படத் திட்டமிட்டது. லிபிய உளவுப்பிரிவில் இருந்த சிலரை



அமெரிக்காவிற்குள் போதைவஸ்துக் கடத்துவதற்கு அனுமதித்து இருந்ததுடன், இதற்குப் பதிலாக லிபியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மேற்குலகக் கைதிகளை மீட்க உதவ வேண்டுமெனவும் சி.ஐ.ஏ. அவர்களைக் கேட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. இதன்படி லிபிய உளவுப்பிரிவினர் சி.ஐ.ஏயின் இத் திட்டம் லிபிய அரசிற்குத் தெரிந்து விட்டது என்றும், தாம் உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற விரும்புவதாகவும் சி.ஐ.ஏ. அதிகாரிக்கு அறிவித்ததாகக் கூறப்படுகின்றது. சி.ஐ.ஏ. அதிகாரி குறிப்பிட்ட விமானத்தில் அவர்களுக்கு இருக்கைகளைப் பதிவு செய்தார் என்றும், அவர்களில் ஒருவரே குண்டைத் தம்முடன் எடுத்து வந்து வெடிக்க வைத்துள்ளார் என்றும், விபத்து இடம்பெற்ற போது பலமாக நம்பப்பட்டது. இதற்கு விமான விபத்தில் இறந்த ஒருவரைத் தன்னோடு தொடர்புடைய லிபிய உளவாளி என சி.ஐ.ஏ. அதிகாரி ஒருவர் அடையாளம் காட்டியிருந்தது மேலும் சாதகமாக அமைந்தது. லிபிய உளவாளிகள் அமெரிக்காவிற்குச் சார்பாக நாடகமாடி, இத் தாக்குதலை நடாத்தினர் என்பதே இதன் அர்த்தமாகும்.

இப்படிப் பலவழிகளிலும் ஊகங்கள் எழுந்த போதும், இறுதியாக 12 ஆண்டுகளுக்குப் பின்னர் லிபியாவின் தலையிலேயே இச் சம்பவம் கட்டிவிடப்பட்டுள்ளது. லிபிய உளவுப்பிரிவில் இருந்து சி.ஐ.ஏ.யினால் விலைக்கு வாங்கப்பட்ட சியாசா என்பவரின் தகவல்களின்படியே, இவ்வழக்குச் சோடிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. குற்றம் சாட்டப்பட்டிருந்த லிபிய உளவுப் பிரிவைச் சேர்ந்த அப்துல் பாசட் அலி அல் மெக்ராகி, லாமென் கலிபா பீமாச் ஆகிய இருவரும் மோல்டா தீவில் வைத்தே இத் தாக்குதலுக்குத் திட்டமிட்டதாக சியாசா தெரிவித்துள்ளார். பீமாச் மோல்டாவில் லிபிய விமான சேவையில் கடமையாற்றியவர். இவர் மோல்டா விமான சேவைக்குரிய, பொதிகளில் ஒட்டும் லேபல்களைக் கையாடினார் என்றும், மெக்ராகி உடுப்புக்களைக் கொள்வனவு செய்து இருவருமாக சூட்கேஸ் ஒன்றினுள் உடுப்புடன் குண்டுவைக்கப்பட்ட வானொலிப் பெட்டியை மறைத்து வைத்துப் பொதி செய்தனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

இப்பொதிக்கு பீமாச்சினால் கையாடப்பட்டதாகக் கூறப்படும் மோல்டா விமானசேவை லேபல் ஒட்டப்பட்டிருந்துள்ளது.

இந்த இருவரும் இது விடயத்தில் ஈடுபட்டிருந்ததைத் தான் அவதானித்ததாக, சி.ஐ.ஏ.யின் கையாளாக மாறியுள்ள சியாசா கூறிய சாட்சியங்களின் அடிப்படையிலேயே, இவ் வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் இரு முக்கிய ஓட்டைகள் உள்ளதாக சர்வதேச சட்ட நிபுணர்கள் ஏற்கனவே கருத்து வெளியிட்டிருந்த போதும், வழக்கின் தீர்ப்பு லிபியாவையே குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியுள்ளது. சியாசா 1991ல் குறிப்பிட்ட தாக்குதலை மேற்குறிப்பிட்ட இருவருமே நடாத்தியதாக சி.ஐ.ஏக்கு தெரி வித்திருந்த போதும் 1999லேயே சி.ஐ.ஏ யினால் இதனை உறுதி செய்ய முடிந்துள்ளது. 1988ல் இந்த விபரங்கள் சியாசாவிற்குத் தெரிந்திருந்த போதும், அவர் அதை வெளியிடாமல் 1991 வரையும் மறைத்ததன் காரணம் என்ன? எனச் சர்வதேச சட்ட நிபுணர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இவர் கள் இந்த வழக்கு சி.ஐ.ஏ. யினால் சோடிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த முரண்பாடு வெளிக்காட்டுகின்றது எனவும் கூறியுள்ளனர். அடுத்தது Timer குறித்த விடயமாகும். சி.ஐ.ஏயின் தகவல்களின்படி குண்டிற்குப் பொருத்தப்பட்டிருந்த Timer சுவிற்சர்லாந்தின் மேபோ நிறுவனத் தயாரிப்பு எனத் தெரியவருகின்றது. குறிப்பிட்ட நிறுவனம் 20 Timerகளை லிபியாவிற்கு விற்பனை செய்ததை ஏற்றுக் கொண்டும் இருந்தது. ஆனால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது மேபோ நிறுவனத் தலைவர் எட்வின் போல்லியர் சில விடயங்களை வெளியிட்டு இருந்தார். இது சி.ஐ.ஏ. குறித்த சந்தேகங்களை மேலும் அதிகரித்துள்ளது. 1999ம் ஆண்டு வரையும் குண்டு வெடிப்பிற்குப் பயன்படுத்தப்பட்ட Timerன் புகைப் படம் மட்டுமே தனக்குக் காட்டப்பட்டது என்றும், தான் குறிப்பிட்ட உதிரிப்பாகத்தை பார்வையிடக் கேட்ட போது சி.ஐ.ஏ.யினரும் ஸ்கொட்லாந்து பொலிசாரும் மறுத்து விட்டனர் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் புகைப்படத்தைப் பார்த்த போது அதில் இருந்த Timer தமது நிறுவன உற்பத்தி போன்று இருந்ததினால் அது தமது உற்பத்தி தான் என தான் ஏற்றுக் கொண்டதாகவும் கூறியிருந்தார். ஆனால் சட்டத்தரணியூடாக இவர் மேற்கொண்ட முயற்சியினால் 1999ல் Timerன் உதிரிப்பாகம் இவருக்குக் காட்டப்பட்டது. அந்தப் பாகம் புகைப்படத்தில் உள்ளது அல்ல என்றும், தமது உற்பத்தி அல்ல என்றும், அதனை நேரடியாகப் பார்த்த போது எட்வின் போல்லியர் மறுத்து இருந்தார்.

இந்தச் சந்தேகங்கள், சர்ச்சைகளுக்கு மத்தியிலும் 1991ம் ஆண்டு நவம்பர் 14ம் திகதி அமெரிக்க சி.ஐ.ஏ.யினரும், ஸ்கொட்லாந்து பொலிசாரும் லிபியாவின் உளவுப் பிரிவு உத்தியோகத்தர்கள் இருவருக்கும் எதிராக பிடியாணை பிறப்பித்திருந்தனர். அத்தோடு லிபிய அரசாங்கம் அவர்களை ஒப்படைக்க வேண்டுமெனவும் கேட்கப்பட்டது. எட்டு ஆண்டுகளாக சந்தேக நபர்களை ஒப்படைக்க லிபியத் தலைவர் கடாபி மறுத்து வந்தார். இதற்கு எதிராகக் கடுமையான பொருளாதாரத் தடையை அமெரிக்கா லிபியா மீது விதித்தது. எனினும் தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவிற்கும் லிபியத் தலைவருக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர் பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் சந்தேக நபர்களை ஒப்படைக்க லிபியா இணங்கியதுடன், ஐ.நா. வும் இதன்னை ஏற்றுக் கொண்டது.

* குறிப்பட்ட வழக்கின் குற்றப் பத்திரத்தில் இருந்து லிபியத் தலைவர் கடாபியின் பெயர் நீக்கப்பட வேண்டும்.
* வழக்கு விசாரணைகள் நடுநிலையான நாடு ஒன்றில் இடம் பெற வேண்டும்.
* சம்பவம் ஸ்கொட்லாந்தில் இடம் பெற்றிருப்பதனால் ஸ்கொட்லாந்து நீதிமன்றமொன்றே விசாரணை செய்ய வேண்டும்.

இந்த நிபந்தனைகளை அமெரிக்காவும் பிரித்தானியாவும் ஏற்றுக் கொண்டதையடுத்தே, லிபியா 1999ம் ஆண்டு மார்ச் மாதத் தில் சந்தேக நபர்களை ஒப்படைத்தது. இதனை அடுத்து 2000ம் ஆண்டு மே மாதம் 3ம் திகதி குறிப்பிட்ட வழக்கின் விசாரணை கள், நெதர்லாந்திலுள்ள அமெரிக்க முன்னாள் விமானப்படைத்தளம் ஒன்றில் மூன்று ஸ்கொட்லாந்து நீதிபதிகள் முன்னிலையில் ஸ்கொட்லாந்துச் சட்டப்படி ஆரம்பமாகின.

வழக்கு விசாரணைகள் ஆரம்பமான போது சந்தேக நபர்கள் இருவரும் தம்மீதான குற்றச்சாட்டை மறுத்திருந்தனர். லிபியத் தரப்புச் சட்டத்தரணிகள் PFLP. GC என்ற பலஸ்தீன விடுதலை அமைப்பே இத் தாக்குதலுக்குப் பொறுப்பு என்று நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர். இதனால் விசாரணைகளின் போது புதிய திருப்பங்சள் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் எந்தத் திருப்பங்களும் இன்றி லிபியாவின் தலையிலேயே பொழுது விடிந்துள்ளது. பலநூறு சாட்சியங்களையும், ஆயிரத்திற்கும் அதிகமான புகைப்படங்களையும், மற்றும் ஆவணங்களையும் கொண்டு 9 மாதங்கள் இடம் பெற்ற இந்த வழக்கின் முடிவு ஜனவரி இறுதியில் வெளிவந்துள்ளது. முதலாவது எதிரியான 48 வயதினையுடைய அப்துல் பாசட் அலி அல் மெக்ராகிக்கு ஆயுட்கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது எதிரி லாமன் கலிபா பீமாச் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அமெரிக்காவிற்கும் லிபியாவிற்கும் இடையிலான ஒரு பலப்பரீட்சையாகக் கருதப்படும் இந்த வழக்கின் தீர்ப்பை ஆட்சேபித்து, லிபியா மேன் முறையீடு செய்துள்ளது.

நீதிமன்றத் தீர்ப்புக் குறித்து கருத்து வெளியிட்டுள்ள லிபியத்தலைவர் மும்மர் கடாபி 'இந்த வழக்கில் லிபியா மீது வேண்டுமென்றே திட்டமிட்டுக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பானது அரசியல் சார்ந்தது. அப்துல்

⇨19

நன்றி - நூலகத்திட்டம்



# இது போராடும் காலம்!

சுமார் இருபது வருடங்களுக்குப் பிறகு சொந்த ஊருக்கு திரும்பிய எனக்கு அது நிறைய மாற்றங்களை உள் வாங்கியிருப்பதை எளிதில் உணர முடிந்தது. எனது சொந்த ஊர் உள்வாங்கியிருந்த மாற்றங்கள் தானாக ஏற்பட்டதொன்றல்ல என்பதையும் அது ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் என்பதையும் உணர முடிந்தது. பிரதான வீதிகள் எங்கும் வெற்றுத் தகரப் பீப்பாக்கள் வைக்கப்பட்டிருந்தன. பனை மரக் குற்றிகள் வரிசையாக அடுக்கப்பட்டு களிமண் பூசப்பட்டு முகம் மட்டும் தெரியக் கூடியவாறு அமைக்கப்பட்டிருந்த காவலரண்களை சந்திக்குச் சந்தி தரிசிக்கக் கூடியதாக இருந்தது.

"தம்பி எங்க இருக்கிறீர்?" என் கேள்விக்கு ஆட்டோ சாரதி திரும்பாமலே பதில் சொன்னான்.

"கரவெட்டி"

"கரவெட்டியில் எவடம்?"

"தலையப்புலம்"

"தலையப்புலமோ?" நான் ஆனந்தத்தோடு ஆச்சரியப் பட்டேன்.

"ஓமோம்" அவன் திரும்பாமலே தலையாட்டினான்.

"தலையப்புலத்தில ஆற்ரை மகன்?" எனக்கு ஆவல் மேலிட்டது.

"இளையவியின்ர இரண்டாவது மகன்"

"எட, இளையவியவின்ர மோனே நீ!" நான் ஆச்சரியப் பட்டேன். நான் பதின்ம வயதில் இருந்தபோது தவ்வலாக இருந்தவன் இப்போது மீசை வெளிப்பட்டுக் குரல் முற்றி உருவம் மாறி, "அப்ப என்னைத் தெரியாதே?" அவன் என்னைத் திரும்பிப் பார்த்துவிட்டு "நீங்கள்?" என இழுத்தான்.

'நான் தான்ராப்பா விநாயகம் விதானையாற்ற மூத்தபொடியன்"

"அப்ப நீங்கள் ரமணன்ர அண்ணரே"

"ஓமோம், பேந்தென்ன உனக்கும் என்னை நல்லா விளங்கி விடுத்து" என்றபடி நான் சிரித்தேன். அவனும் என்னைத் திரும்பிப் பார்க்காமல் சிரித்தான்.

"ஊர் எப்படியிருக்குடா தம்பி" நான் அக்கறையோடு விசாரித்தேன்.

"பரவாயில்லை. ஆனால், என்ன நேரம் என்ன நடக்குமெண்டு தெரியாது" அவன் பதிலுக்கு நான் என்னையறியாமல் தலை யாட்டினேன். அவன் தொடர்ந்து சொன்னான். "இங்க நாங்கள் எங்கட பாட்டில் இருக்கிறம். ஆனா, எங்கட உயிர் எங்கட கையில இல்லை" நான் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். சிறிது நேர இடைவெளிக்குப் பின்னர் நான் பேச்சைத் துவக்கினேன்.


"உங்கட குடும்பம் எப்பிடியிருக்குது?"

"அப்பா மோசம் போயிட்டார். அண்ணா பிரான்சிற்கு போயிட்டார். போய்ப் பத்துவரியம், தம்பி கம்பசில படிக்கிறான். அக்காவுக்கு கலியாணம் முடிஞ்சுது. நான் ஆட்டோ ஓடுறன். இப்பிடியே சீவியம் போகுது. அம்மாவுக்கு இப்பதான் ஆறுதல்". அவன் விடாமல் சொல்லி முடித்துவிட்டு அமைதியானான். நான் சிந்தனை வயப்பட்டிருந்தேன். இளையவி எங்கள் வீட்டிற்கும், எங்கள் உறவினர்கள் வீட்டிற்கும் சீலை வெளுத்தவள். நான் சின்னவனாக இருக்கும் போது கார்த்திகை விளக் கீட்டுக்குப் பந்தம் சுற்றுவதற்கு வெள்ளைச் சீலை கொண்டு வருவது இளையவி தான். நல்ல சிவலையான ஆள். நல்ல நெடுவலான ஆளும் கூட. நல்ல பணிவான குரலில் கதைப்பது இப்போதும் ஞாபகம் இருக்கிறது. என்னைக்கூட 'சின்னையா' என்று தான் இளையவி அழைப்பது வழக்கம். இளையவி குடும்பம் அந்தக் காலத்தில் மிகவும் வறுமையான குடும்பம். நாங்கள் கொடுக்கும் சொற்ப பணத்திலும் உணவு முத்திரைச் சாமானிலுமே அந்தக் குடும்பம் தங்கியிருந்தது. இளையவியின் மூத்தமகன் தேவன் என்னோடு தான் படித்தான். என்னை விடக் கெட்டிக்காரன். ஆனால், குடும்ப நிலை காரணமாக எட்டாம் வகுப்போடு படிப்பை நிறுத்திக் கொண்டான். இளையவிக்கு உதவியாக குடும்பத் தொழிலில் இறங்கினான். நான் கனடாவிற்கு போகும்வரை அவனும் தகப்பனும் குடும்பத் தொழிலையே செய்து

## மாற்றங்கள்!

கொண்டிருந்தனர். இப்போது இவன் சொல்வதைக் கேட்க சந்தோசமாகத் தானிருந்தது. 'இளையவியின்ர குடும்பம் நல்லாக் கஸ்ரப்படுது' அம்மா அடிக்கடி ஆதங்கப்பட்டுக் கொள்வாள்.

ஆட்டோ பிரதான வீதியில் இருந்து மணல் நிறைந்த தெருவில் இறங்கியது. நான் சிந்தனை கலைத்தேன். தெருவின் இரு மருங்கும் புதிய கட்டிடங்கள் முளைத்திருந்தன. பெரும்பாலான



இடங்களில் கிடுகு வேலிகளுக்கும், அலம்பல் வேலிகளுக்கும் பதில் மதில்களைக் காண முடிந்தது. சிற்சில மதில்களில் தேர்தல் காலச் சுவரொட்டிகள் அடுக்காகக் ஒட்டப்பட்டிருந்தன. அவற்றில் சிலவற்றை கிழித்தெறிய முயற்சித்திருப்பது தெரிந்தது. நான் எதிர்பார்த்து வந்ததைவிட நிறைய மாற்றங்கள் நிகழ்ந்திருந்தன. இந்த மாற்றங்கள் சுந்தரேசக் குருக்களையும் பாதித்திருக்குமா? அவருடைய சுண்ணாம்புக் கல் வீடும் மாறியிருக்குமா? என்னுள் ஒரு புதிய சந்தேகம் துளிர்விட்டது.

சுந்தரேசக் குருக்கள் என்றதும், அவரது நீண்ட நெடிய செந்நிறமேனியும், ஊடுருவிப் பார்க்கும் கண்களும், உருத்திராட்ச மாலையணிந்த கழுத்தும், கடுக்கண் தொங்கும் காதுகளும் விசேடமாக ஞாபகத்திற்கு வந்தன. அவரைப் போல ஆசாரம் பார்ப்பவரையும், வரட்டுக் கௌரவம் பிடித்தவரையும் இதுவரை நான் கண்டதில்லை. எங்கள் கிராமத்திலிருக்கும் வீரமாகாளியம்மன் கோவில் தொடக்கம் நகரப் புறக் கோயில்களுக்கும் அவரே குருக்களாக இருந்தார். எவராக இருந்தாலும் அவரது வீட்டு வாசல்படியைத் தாண்டி உள் நுழைய முடியாது. அதைமீறி யாராவது உள் நுழைந்து விட்டால் குருக்கள் ரௌத்திரர் ஆகிவிடுவார். சாணியும், மஞ்சளும் கலந்து கலக்கி தெளித்த பின்னர் தான் அவர் மனம் சாந்தியடையும்.

ஒரு நாள் எனக்கு நேரடி அனுபவம் கிடைத்தது. அன்று சித்திரை வருடப்பிறப்பு. அம்மா சொன்னாள். "சிவன்! குருக்கள் ஐயா வீட்டை போய் மருந்து நீர் வாங்கிக் கொண்டு வா". சித்திரை வருடப் பிறப்பில் தலையில் மருந்து நீர் வைத்து குளத்தில் குதித்து முழுகுவதில் எனக்கும் என் போன்றவர்களுக்கும் தனிச் சந்தோசம். அந்தச் சந்தோசத்தை நினைத்தவுடன் உற்சாகம் பிறந்தது. அம்மா தந்த போத்தலை வாங்கிக் கொண்டு ஐயர் வீட்டுக்கு ஓடினேன். அவர் வீட்டு வாசலில் நின்று குரல் கொடுத்தேன். "குருக்கள் ஐயா...! குருக்கள் ஐயா...! என் அழைப்புக்கு பதில் இல்லை. மீண்டும் சில தடவை கூப்பிட்டேன். பதிலில்லை. எனக்கோ மருந்து நீர் வைத்து குளத்தில் குதிக்கும் சந்தோச அவசரம். மருந்து நீர் இல்லையென்று திரும்பிப் போனால் மீண்டும் நானே வரவேண்டி ஏற்படும்.

எனவே திறந்திருந்த வீட்டினுள் மெதுவாகக் காலடி எடுத்து வைத்தேன். மூன்று அடிகள் நடந்திருப்பேன். "தொபீர்" என என் முதுகில் அடி விழுந்தது. அந்த அடியின் வலிதாங்க முடியாதவனாய் திரும்பினேன், "ஐயா! அம்மா" என்ற அலறலுடன். சுந்தரேசக் குருக்கள் கண்கள் சிவந்து உடல்நடுங்க கடுங் கோபத்துடன் நின்றிருந்தார். கண்களில் என்னை எரித்துவிடும் ஆத்திரம் கொப்பளித்தது. "எளிய வடுவா!" வரிச நாளில வீட்டைத் தீட்டாக்கி போட்டியேடா" என்றபடி மறுபடியும் என்னை அடிக்க கை ஓங்கிக் கொண்டு முன்னேறினார். நான் ஒருவாறு சமாளித்துக் கொண்டு வெளியேறினேன். ஒரே ஓட்டமாக வீடுவந்து சேர்ந்தேன். இதன்பிறகு குருக்கள் வீட்டிற்குப் போவதென்றாலே எனக்கு வயிற்றைக் கலக்கும். தவிர்க்க முடியாமல் நானே ஐயர் வீட்டிற்கு போகவேண்டி வந்தால் அவர் வீட்டு வாசலை அண்மித்ததே கிடையாது.

சுந்தரேசக் குருக்களின் மகள் நந்தினி ஒரு நாள் அநியாயமாய் செத்துப் போனாள். அவள் சாவுக்கு சுந்தரேசக் குருக்களே காரணம் என்று ஊரில் சாடை மாடையாகப் பேச்சு அடிபட்டது. நான் அறிந்த வரையில் நந்தினி தன்னோடு கூடப்படித்த நளப் பொடியன் ஒருவனைக் காதலித்தாள். கர்ப்பிணியுமானாள். சுந்தரேசக் குருக்களுக்கு விடயம் தெரியவந்த போது இடிவிழுந்தவர் போலானார். இறுதியில் ஏதோவொரு சூரண மருந்தைக் கொடுத்து 'பொடி'வயிற்றோடு அவளைக் கொன்று விட்டார். யாரும் நியாயம் கேட்க முன் வரவில்லை. 'அந்தப்' பொடியன் கூட அமைதியாக இருந்து விட்டான். இந்தச் சங்கதிகள் எல்லாம் ஊரிலிருந்த போதே நடந்து முடிந்து விட்ட சங்கதிகள். நான் ஊரை விட்டுப் புறப்படும்வரை சுந்தரேசக் குருக்கள். மாறவேயில்லை. இப்போது...?!

எனது சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு அவனைக் கேட்டேன். "தம்பி! வீரமாகாளி அம்மனுக்கு பூசை செய்த சுந்தரேசக் குருக்கள் என்ன மாதிரி இருக்கிறார்?" என் கேள்வி அவனைப் பாதித்திருக்க வேண்டும். ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். "அதையேன் கேக்கிறியள். என்றவாறு தொடங்கினான். "சுந்தரேசக் குருக்களுக்கு இப்ப கண் தெரியாது. ஆள் நல்லாத் தளர்ந்து போனார். அவரின்ர மகன் கொழும்பில ஏஜென்சி வேலை பார்த்து அவரின்ர சொத்தெல்லாம் அழிச்சுப் போட்டார். கடைசியா இருந்த அவரின்ர வீட்டையும் விற்க வேண்டிய நிலை. எங்களுக்கும் ஒரு வீடு வாங்க வேண்டியிருந்தது. நாங்கள் குருக்களின்ர வீட்டை வாங்கிப் போட்டம்." அவன் சொல்லி முடிக்க முன்பே நான் ஆச்சரியம் தாங்காமல் வாய் பிளந்தேன்" என்ன குருக்கள் வீட்டை நீங்கள் வாங்கிப் போட்டியளோ?" அப்ப அவர்?"

"அவர் கோயில் மடத்தில இருக்கிறார். கோயில் நிர்வாகம் பாவம் பார்த்து அப்பப்ப ஏதும் குடுக்கும்"

ஓட்டோ ஓடிக்கொண்டிருந்தது. நான் அதிர்ச்சியிலிருந்து மீள முடியாதவனாக இருந்தேன். இன்னும் இப்படி என்னென்ன மாற்றங்களோ...??

— சுதாரஞ்சன்

## றோவின்...

*குறிப்பாக மூன்று நிகழ்ச்சிகள் விமர்சனமாக அறிவுஜீவிகள் மத்தியிலும் இங்குள்ள அரசியல் நோக்கர்கள் மத்தியிலும் பேசப்படுகின்றன. ஒன்று கவிஞர் செல்வியை கைது செய்தது. அவரை விடுவிக்கக் கோரி உலகளாவிய எழுத்தாளர்கள். கவிஞர்கள் அமைப்பு வேண்டுகோள் விடுத்தும் அவருக்கு மரண தண்டனை தந்துவிட்டதாகக் கூறப்படுவது. இரண்டாவது மனித உரிமையைப் போராளியான பேராசிரியர் ராஜனி யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டது. மூன்றாவது இயக்கத்தின் முக்கிய தளபதியாக இருந்த மாத்தையாவுக்கு மரண தண்டனை அளித்தது. உங்களுக்கு இவை பற்றி ஏதும் தெரியுமா?*

கவிஞர் செல்வி விஷயம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வேண்டுமானால் கேட்டுச் சொல்கிறேன். ராஜனி மரணம் சர்ச்சைக்குரியது. அது பற்றி விடுதலைப் புலிகள் மீது பழி போடப்பட்டது. அவ்வளவு தான். வேண்டுமென்றே அவதூறு செய்யப்படுகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மனித உரிமைக் குழு என்ற பெயரில் இப்படி அறிக்கைகள் வெளியிடப்பட்டுகின்றது. அப்படி ஒரு அமைப்பு பல்கலைக்கழகத்தில் இல்லை என்று துணைவேந்தரும், பேராசிரியர்களும் தெரிவித்த செய்தியை யாரும் வெளியிடுவதில்லை. அந்தக் குழு கொழும்பில் இருக்கிறது. சிங்கள உளவுத்துறை ஏற்பாடு செய்து தரும் செய்திகள் அந்தக் குழுவின் பெயரால் வெளியிடப்படுகின்றன. உண்மையில் அப்படி ஒரு குழுவே கிடையாது. யாழ்ப்பாணத்தில் போய் யார் வேண்டுமானாலும் விசாரிக்கட்டும்.

மாத்தையா பிரச்சினையைப் பொறுத்தவரை அது இராணுவக் கட்டுப்பாடு சம்பந்தப்பட்டது. அவர் இந்திய றோ உளவுப் பிரிவின் கையாளாக மாறிவிட்டார் என்று அவரே ஒப்புக் கொண்டார். இருந்தும் கூட ஏறத்தாழ ஓராண்டு காலம் அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. கைது செய்து வைத்திருந்தார்கள். மாத்தையாவே பிரபாகரனிடம் கெஞ்சிக் கதறிக் கேட்டுக் கொண்டார். "நான் துரோகம் செய்து விட்டேன். என்னை ஏன் தண்டிக்க மாட்டேன்கிறீங்க"ன்னு கேட்டார். அவர் மனைவியும் ஒரு போராளி. அவரும் சொன்னார். 'துரோகம் செஞ்சவங்க யாராயிருந்தால் என்ன, என் கணவராயிருந்தா என்ன, நடவடிக்கை எடுங்க'ன்னு சொன்னார்.

இதற்குப் பின்னணி முகாமில் றோ உளவுப் பிரிவு தானே. அதைப்பற்றி ஏன் ஒருத்தரும் பேசமாட்டேன்கிறீங்க? இன்று இந்தியாவுக்கு அண்டை நாடுகளுடன் சுமுகமான உறவு இல்லாமற் போனதற்கு றோ தான் பொறுப்பு. நேபாளம், வங்கதேசம் இவற்றுடன் உறவு கெட்டதற்கு அவர்கள் தான் காரணம்.

வேலூர் சிறப்பு முகாமில் இருந்த மாத்தையாவுக்கு வேண்டியவரான எஞ்சினியர் என்பவர் போரில் கால் இழந்தவர். அவர் திடீரென்று யாழ்ப்பாணத்தில் இருக்கிறார். புலிகள் அவரைச் சந்தேகித்து விசாரித்ததில், பிரபாகரனைத் தீர்த்துக்கட்ட மாத்தையாவை சரிபண்ண அவர் அனுப்பப்பட்டிருக்கிறார். எஞ்சினியர் எப்படி அங்கே போக முடிந்தது?

சூளைமேட்டில் டக்ளஸ் தேவானந்தா நம் ஊர் தமிழரைச் சுட்டார். அப்போது துக்ளக் 'சோ' உட்பட பலரும் அதைக் கண்டித்து இனிமேல் ஒரு அகதி கூட இங்கே இருக்கக் கூடாது என்று எழுதினார்கள். அவர் மீது 11 செக்ஷனில் வழக்கு பதிவாயிற்று. மாஜிஸ்ட்ரேட் 12வதாக ஒரு செக்ஷன் சேர்த்தார். சென்னை சிறையில் இருந்த டக்ளஸ் எப்படி யாழ்ப்பாணம் போனார்? எப்படி அங்கே எம்.பி. ஆனார்? மந்திரி ஆனார்? இங்கே வந்து சோழா ஓட்டலின் பிரஸ் மீட் வைக்கிறார்? அவர் மீது இங்கே இருந்த கொலைக் குற்றம் என்ன ஆயிற்று?

பிரபாகரனைப் பிடி என்று சுப்பிரமணிய சுவாமி ஓயாமல் சொல்கிறாரே, பிடித்து சிறையில் வைத்திருந்த ஆளை ஏன், எப்படி விட்டார்கள் என்று கேட்க வேண்டாமா? எனவே எல்லாவற்றிற்கும் காரணமும் அரசியலும் இருக்கிறது.

நன்றி: விண் நாயகன்

நன்றி - நூலகத்திட்டம்



# ஓணான்கள்

அம்ரிதா ஏயெம்

நெடிய நேரான கிறவல் வழி அது. விவசாய பொறியியல் இயந்திர வேலைத் தளத்திற்கு பக்கத்திலிருந்த புளிய மரத்தடியிலிருந்து தொடங்கி கம்பஸின் வடக்குப் புற எல்லையிலுள்ள மிருக விஞ்ஞானப் பிரிவின் பண்ணையையும் எல்லையிடும் மதில் வரை முடியும் வழி அது. கறடு முரடான சின்னச் சின்ன பள்ளமும் கொண்டு, இரு பக்கமும் இறுக்கியும், தொய்ந்த முள்ளுக்கம்பி வேலி கொண்ட வழி அது. இளம் இரத்தச் சிவப்பு தோய்ந்த வழி அது. இந்த வழி போல் தான் இதைச் சுற்றியுள்ள மக்களின் விதியினாலும், வன்மத்தாலும் வரையப்பட்ட வாழ்க்கையும்.

வழியின் தொடக்கத்தில் புளியமரத்தில் அந்த பதினேழு மந்திகளும் இருப்பதைக் கண்டேன். சிறாவும், தாறாவும். பல்லிழித்தன. சீபாவும், தீபாவும் பயங்காட்டின. இவர்களின் நாளின் தொடக்கம் இந்த மரத்தில் தான் தொடங்குகின்றன. தூங்கி எழுந்த பின், தூங்கிக் கொண்டிருக்கும். வானரங்களிலிருந்து தானாமே வாழ்க்கையும் தொடருகின்றது? என்னவோ, நான், புளியமரத்தைக் கடந்து, ஆட்டுக்காலை, மாட்டுக்காலை, கோழிக்காலைகளைக் கடந்து, பன்றிக் காலையை நெருங்கி வழியின் அந்த முடிவை அடைந்து விட்டேன். என் தலைக்கும் உடலுக்கும் எதிரே என் நடையையும், என் அசைவையும் எதிர்த்து தடையாய் ஆறரை அடி உயரத்திற்கு மதில் இருந்தது. போதாக்குறைக்கு முட்கம்பி வேலி வேறு. ஏன் வழியின் முடிவும், வாழ்வின் முடிவும் இவ்வளவு தடைகளைக் கொண்டிருக்க வேண்டும்? பாதுகாப்புக்காகவா?... அப்பியென்றால் யாருக்கு? எதற்கு? என யோசிக்கிறேன்.

மதிலுக்கருகிலிருந்த முட்கம்பி வேலியின் கொங்கிறீட் கட்டையில் காலை வைத்து, மதிலுக்கு அப்பால் எட்டிப் பார்க்கின்றேன். சின்னச் சின்ன புற்பற்றைகள். இடிபாடுகள், காடுகளாக்கப்பட்ட காணிகள். மதிலுக்கு மேலால் பாய எண்ணுகிறேன். பற்றைகளுக்குள் என்ன பதுங்கியிருக்-கின்றன என்று தெரியாத வரையில் பாய்வது புத்தி சாதுரியமல்ல என்று நினைக்கின்றேன். அங்குமிங்கும் பார்க்கிறேன். காடாக்கப்பட்ட வளவுக்குள் எவரையும் காணவில்லை. அப்போது மெல்லிய உருவம் தெரியத் தொடங்கியது. நான் கூப்பிட அருகே வரத் தொடங்கியது. ஐந்தாறு ஆடுகள் இருக்கும் ஆட்டு மந்தையையும் கூட்டிக்கொண்டு மதிலுக்கு அருகே வரத் தொடங்கியது. வந்துவிட்டது. இந்த உருவம் தான் இடை-யன். இந்த இடையன் தான் சின்னான். எனக்கும் சின்னானுக்கும் இப்போது உயரத்தில் ஆறு அடி வித்தியாசம் இருந்தது. உயரத்தில் இருப்பவர்கள் உயர்ந்தவர்களும், தாழத்தில் இருப்பவர்கள் தாழ்ந்தவர்களுமாமே.

சின்னான் உண்மையில் இடையன் தான். தந்தையையும், அண்ணனையும் இடையில் இழந்ததாலா?, அதன் காரணத்-தால் நிம்மதி இடையில் தொலைந்து போனதாலா?, அதனால் கல்வியை இடையில் விட்டதாலா?, அதனால் பிரேமதாச எப்போதோ கொடுத்த கிழிந்து போன நீலக் களிசானை இடையில் அணிந்து கயிறு கட்டி ஆடு மேய்க்கும் இடையனாய் ஆனதாலா? சின்னான் இடையனான் என்று சொல்லத் தெரியவில்லை.

கம்பஸ் ஆலமரத்தடிப் பிள்ளையார் கோவிலில் விசேட பூசைகள் நடைபெறும் போது நிறைய அக்கம் பக்கத்து பிள்ளைகள் தாறா போல், சிறா போல், சீபா போல், தீபா போல் மரத்தின் மேலால் ஏறி வருவார்கள். ஏறும் போதும், பாயும் போதும் அடிபட வீழ்வார்கள். ஆனால் அலட்டிக் கொள்ளாமல் தங்கள் முயற்சியில் சற்றும் மனந்தளராமல் முன்னேறுவார்கள். ஏனெனில் இந்த பன்னிரண்டு வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு வாழ்க்கை கற்றுத் தந்த பாடம் அது. இவர்களின் ஒவ்வொருவரின் வீட்டிலும் அடி விழுந்திருக்கிறது. எதையும் அலட்டிக் கொள்ளாமல் இருப்பது இவர்களின் இயல்புக்கு மீறிய அழுத்தத்தைக் காட்டுகின்றது. சிறு வயதில் இயல்புக்கு மீறிய அழுத்தம் வருவதற்கு இவர்களின் இறந்தகாலம் இழப்புக்களையும் இறப்புக்களையும் கொண்டதாகத்தான் இருக்க வேண்டும். அவர்களுடன் உரையாடும் போது "உங்கட சொந்தக்காரர்கள் யாரும், இந்தக் கம்பஸ் அகதிமுகாமிலிருந்து கூட்டிப் போய் கொல்லப்பட்டிருக்காங்களா? " என்று பேசப்பது வழக்கம். அதற்கு ஆறு பிள்ளைகளில் ஒருவராவது "ஓம்..."என்று சோகமாக செல்வதும், பதில் சொல்வதும் வழக்கம். கொல்லப்பட்டது தகப்பன் என்பார்கள். அண்ணன்கள் என்பார்கள், மாமாக்கள் என்பார்கள். சித்தப்பாக்கள் என்பார்கள். இப்படி என்னுடன் அறிமுகமானவன் தான் இந்தச் சின்னான். தனது தந்தையையும், அண்ணனையும் 'ஒலிவ் பச்சை' வழியில் மறித்து பிடித்தாம். 'ஒலிவ் பச்சை'யிடம் போய் அண்ணனையும் அப்பாவையும் கேட்க இளமஞ்சளிடம் என்று சொன்னதாம். இளமஞ்சளோ மண்ணிறத்திடம் என்றதாம். மண்ணிறமோ இரத்தச் சிவப்பிடம் என்றதாம். இன்னும் தொலைந்து போன அல்லது தொலைக்கப்-பட்டு போன அண்ணனையும், அப்பாவை-யும் மீள எடுக்காததால் தான் சின்னான், தகப்பனிழந்து, அண்ணனிழந்து, படிப்-பிழந்து, இடையனாகியிருக்கின்றான். அல்லது இடையனாக்கப்பட்டிருக்கிறான்.

பூசை ஆரம்பிப்பதற்கு முன்னால் இந்தப் பிள்ளைகள் ஓடிப் பிடித்து விளையாடுவார்கள். விளையாட்டுக்கள் அடிப்பதையும், இடிப்பதையும், துரத்து-வதையுமே அடிப்படையாகக் கொண்ட-வையாக இருக்கும். சூரியோதயத்துக்கு சற்று முன்னேயுள்ள இன்னும் விலகாத இருள் மாதிரித்தான் இவர்களின் வாழ்வும், வீடுகளும் இருக்கின்றன. கம்பஸைச் சுற்றி வட்டமாக, உயரமாக மதில் எழுப்பி, யார், யாரோ உள்ளேயிருக்க வெளியே இவர்கள் இருக்கிறார்கள். உள்ளே மீன்பிடி மிதந்து விவசாயம் செழித்து இருக்க, வெளியே மீன்பிடி தாண்டும், விவசாயம் புதைக்கப்-பட்டும் இருக்கிறது. உள்ளே பொருளிய-லும், முகாமைத்துவமும் கடைபரப்பி தெளிந்து நிற்க, வெளியே சிதைக்கப்பட்ட பொருளாதாரங்களுக்கிடையேயும், குழப்பப்பட்ட வாழ்க்கை முறைகளுக்கிடை-யேயும் தங்களின் சுயத்தையும், தங்களின் அன்றாட வாழ்க்கை ஓட்ட வண்டியின் சக்கரங்களையும் அவர்கள் தேட வேண்டியிருக்கிறது. உள்ளே மொழியும், நுண்கலைகளும் விளம்பரம் போட்டு மேடையேற , வெளியே இன்னும் இவை இருட்டறையின் ஓரங்க நாடகங்களாகவே இருக்கின்றன. உள்ளே தத்துவமும், மெய்யியலும் , சமயமும் வித்தகம் செய்ய, வெளியே மெய்களைத் தொலைத்துவிட்டு பொய்களுக்குள் எதையோ தேடிக் கொண்டிருக்கிறார்கள். உள்ளே சிரிக்க, வெளியே அழுகிறார்கள். உள்ளே ஓடித் திரிய, வெளியே நொண்டியடித்துக் கொண்டிருக்கிறார்கள். உள்ளே கணத்துக்கு கணம் காட்சிகளும் மாறி நிறங்களும் மாறுகின்றன. ஒலிவ் நிறப் பச்சையில் அந்த இருபது ஏக்கர் மைதானம், திட்டமிடாமல் அடுக்கி வைக்கப்பட்ட நெருப்புப் பெட்டி போன்ற கட்டிடங்களின் சுவர்களின் மஞ்சள் நிறங்கள், அவைகளின் ஓடுகளினதும், கொறிடோர்களின் தரையில் பதிக்கப்பட்ட சிமெந்துக்கல்லாலான மாபிள்களினதும் சிவப்பு நிறங்கள், வீதிகளின் மண்ணிறங்கள் என உள்ளே நிறங்கள் மாற, வெளியே கறுப்பு-வெள்ளை தான். ஒன்று துக்கத்திற்கு, மற்றது சோகத்திற்கு. விதவைகளுக்கும், பிணவீடுகளுக்கும். உள்ளேயுள்ள ஒரு உயர்நிலைக் கல்வி ஸ்தாபனம் என்பது வெளியேயுள்ள தான் சார்ந்த சுற்றயற் சமூக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தாததும், அந்த மக்களுக்கு நல்ல வாழ்க்கைத் தரத்தை பெற்றுக் கொடுக்காதும் விட்டால், இந்த உள்ளின் இருக்கை என்பது சுத்த வடிகட்டின சுயநலமும், தேவையில்லாததுமாகும். இந்த உள்ளைச் சுற்றி, வெளிகளிலிருந்து பிரித்துப் போட்ட அந்த ஆறரையடி மதில் என்பது, உள்ளுக்கு வெளிகளிலிருந்தான பாதுகாப்பல்ல. உள்ளிருந்து வெளியே எதுவும் போகக்-கூடாது என்று போட்ட தர்ம நூலோ என்னவோ. உயரத்தில் இருப்பவர்கள் உயர்ந்தவர்களும், தாழத்தில் இருப்பவர்கள் தாழ்ந்தவர்களுமாம். நான் உயர்ந்தவனும், சின்னான் தாழ்ந்தவனுமாம். இந்த கம்பஸ் கொங்கிறீட் தூண் தான் என்னை உயர்ந்தவனாகவும் சின்னானை தாழ்ந்தவனாகக் காட்டுகிறது. வெளியே ஒரு கொங்கிறீட் தூண் இருந்தால் எனக்கு சமனாகவாவது சின்னான் வரலாம் அல்லவா? உண்மையில் ஓணானியம் என்பது தன்னிருக்-கையை மட்டும் நிலைப்படுத்தலும், ஏமாற்றலும் ஆகும். இந்த மதிலின் ஒரு பகுதிக்கு பின்னாலிருந்த கொங்கிறீட் தூணில் கால் வைத்துக் கொண்டு தான், உயரத்திலிருந்த நான் சின்னானைக் கூப்பிட்டேன்.

'சின்னான்... எனக்கு ஒரு உதவி செய்ய வேணும்' என்றேன். 'ம்..' என்று தலையாட்டினான். 'எனக்கு கொஞ்சம் ஓணான் பிடிச்சி தர வேணும். ஒரு ஓணானுக்கு அஞ்சு ரூபா தருவன்' முடியுமா? என்று கேட்டேன். 'ஓம்..' என்று தன் றொபர்ட் தலையை மீண்டும் ஆட்டியவாறு சிரித்தான். 'அப்ப நான் ஒரு பன்னிரண்டு மணியப் போல வாறன். பிடிச்சிவை' என்றுவிட்டு , இறங்கி வருகிறேன். அப்பாடா என பெருமூச்சு வந்தது. ஆறு மாதமா இந்த ஓணான்கள் என்னைப் போட்டு என்னபாடு படுத்திவிட்டன. காலை, மதியம், பின்னேரம் என்றில்லாமல் எப்போதும் ஒரு தொண்டுடனும், ஒரு தடியுடனும் திரிய வேண்டியிருக்கிறது. கண்ணில் காணும் எல்லா ஓணான்களும் பிடிபடுவதுமில்லை. மெயின் றோட்டிலிருந்து ஹொஸ்டல் போகும் வழியிலுள்ள மூன்றாவது மாமரத்தின் பொந்தில் இருக்கும், அந்த ஓணான் (பெயர் வீரப்பன். சுருக்கமான செல்லப் பெயர் வீரா..) மட்டும் இன்னும் பிடிபடாமல் தப்பிக் கொண்டே இருக்கிறது. எத்தனை தரம் முயன்றிருக்கிறேன் முடியவில்லை. வருகிற, போகிற வேளைகளில் வீராவைக் கண்டால் தூரத்தே சைக்கிளைப் போட்டு விட்டு, பேக்கையும் வைத்து விட்டு, பாதணிகளைக் கழற்றி விட்டு, அருகிலிருந்த தென்னை மரத்திலிருந்த ஈக்கிலால் தொண்டு செய்து, பதுங்கிப் பதுங்கி, வீராவுக்குக் கிட்டப் போக, எனது கஸ்டகாலம், வீராவின் நல்ல காலம், மாமர இலைகள் காலில் பட்டுச் சரசரக்க, வீரா பறக்கும். சிலவேளைகளில், தன்முயற்சியில் சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தன் மாதிரி, தடியுடன் மாமர நுனிவரை, நான் மாமரத்தில் ஏறி துரத்த, நுனியிலிருந்து விரைவாகக் கீழே ஓடி பொந்துக்குள் புகுந்து விளையாட்டுக் காட்டும். பொந்துக்குள் தடியைவிட்டு கலக்க, வெளியே வராது. ஏனெனில் பொந்தில் வேறு கிளை வழிகளும் இருக்கலாம். கொஞ்ச நாளைக்குப் பிறகு வீராவிற்கு அவனின் வீரத்தை பாராட்டி, மன்னிப்பு வழங்கி விட்டேன். இப்போது நன்றாக வீரா கொழுத்து விட்டிருந்தான். எப்படியும் ஒரு நாளைக்கு இரு தடவையாவது காண்பது வழக்கம்.

ஓணான் பிடிப்பது ஒரு கலை. கையினால் பிடிப்பது, அது ஒரு தனிக்



ஓவியம்: ரஷ்மி

நன்றி - நூலகத்திட்டம்



கலை. ஓணானைக் கண்டால், சத்தம் போடாமல் மெல்ல மெல்ல கிட்டப் போய், வலது கைப் பெருவிரல் பிடரியிலும், அதே கையின் ஆட்காட்டி விரல் கழுத்திலும் இருக்கத்தக்கதாக கணப்பொழுதில் விரைவாக ஆளை அமுக்கிவிட வேண்டும். பிடி கொஞ்சம் தவறினாலோ, ஆட்காட்டி விரலை ஒரே கடி கடித்துவிடும். இப்படித்தான் இரு முறை கடித்து எனக்கு ஏ.ரி.ரி. போடவேண்டி வந்தது. பிடிபட்ட ஓணானை லேபிற்கு கொண்டு போய், முதுகுப் பக்கம், வயிற்றுப் பக்கம், ஓரப் பக்கம் மூன்றையும் போட்டோ எடுத்து, மெழுகுத் தட்டில் வைத்து, ஒவ்வொரு செதிலாக கிளப்பி, கவ்விப் பிடித்திருக்கும் ஒட்டுண்ணிகளை அகற்றி, போமலின் கீசாவிற்குள் போட வேண்டும். பின் ஓணானை வெட்டி, இதயம், நுரையீரல், சிறுநீரகம் போன்ற அங்கங்களிலுள்ள ஒட்டுண்ணிகளை எடுக்க வேண்டும். பின் நுணுக்குக் காட்டியிலுள்ள கமறாவினால் பொசிட்டிவ் சிலைட் படமாக்கி, புறொஜக்டரினால், வெள்ளித் திரையில் விம்பங்களை அள்ளி வீசி எறிந்தால், அப்பா.... எவ்வளவு வகையான ஒட்டுண்ணிகள். தெள்ளுகளாயும், உண்ணிகளாயும், பேன்களாயும், புழுக்களாயும் எவ்வளவு வடிவான ஒட்டுண்ணிகள். எவ்வளவு நிறமான ஒட்டுண்ணிகள். இளம் சிவப்பு, இள மஞ்சள், கறுப்பு, மண்ணிறம், பச்சை என எவ்வளவு வகையான நிறங்கள். முட்டை வடிவு கொண்டு ஒன்று, வட்டத் தலையில் கூரான ஆயுதம் கொண்டு ஒன்று, முக்கோண உடம்பு கொண்டு ஒன்று. முக்கோண உடம்பில் பத்துக் கால்கள் முளைத்து ஒன்று. கால்களில் மயிர்கள் முளைத்து ஒன்று. அதன் மேல் முட்கள் முளைத்து ஒன்றுமாய் நீண்டு, வளைந்து, சுருண்டும் பல வடிவுகள் காட்டும். ஓணான்களுடன் ஒட்டுண்ணிகள் ஒட்டிக்கொண்டிருப்பது உலக வழக்கம்.

நேரம் மதியம் பன்னிரண்டரை மணி. லன்ஜ் ரைம். அதே வழி. சீபாவையும். தீபாவையும் தாண்டிக் கொண்டு மதில் மேலால் எட்டிப் பார்க்கிறேன். சின்னான் தெரிந்தான். '..என்ன சின்னான், ஓணான் பிடிச்சாச்சா..?' என்று கேட்டேன். 'ஓம்..' என்று ஓணானைக் காட்டினான். ஒரு ஓணானை ஈர்க்கிற் தொண்டினால் இறுக்கி, ஓணான் ஓடாத மாதிரி, ஈர்க்கின் மேல் பெரிய கல் ஒன்று வைத்திருந்தான். உடனே ஐந்து ரூபா கொடுத்து ஓணானைத் தருமாறு கேட்டேன். அப்போது சரசர என்று சத்தம் கேட்டது. 'இந்தா ஒரு ஓணான்..' என்று சின்னான் கத்தினான். உடனே மதிலிலிருந்து வளவிற்குள் பாய்ந்தேன். அதற்கிடையில் ஓணான் தீபாவளிக்கு நிலத்தில் வம்புக்கு ஏவிவிட்ட வாணம் மாதிரி புசுபுசுவென்று நேராய் ஓடி அந்த வீட்டின் சுவர் மேல் வானம் பார்த்து செங்குத்தாய் நின்றது. அது வீடெனப்பட்டது ஒரு காலத்தில். இப்போது கூரை பறந்து, ஜன்னல், கதவு நிலைகள் ஒழித்து, பூச்சுக்கள் கழன்று, பாசி பிடித்து, சன்னங்கள் படிந்து, வரவேற்பறையில் ஆட்டுப் பிழுக்கையும், படுக்கையறைகளில் இடையர்களின் மலங்களும் கிடந்தன. பாம்புகளும் கூட குடியிருக்கலாம். உமா வரதராஜனின் கள்ளிச்சொட்டு நாயகனும் இதுமாதிரி வீட்டில் தான் அடைக்கலம்தேடி ஒழித்திருந்திருப்பானோ என்னவோ. யுத்தத்தினால் சிதைக்கப்பட்ட இந்த வீடே தானே பேசுவதாய் ஒரு வடிவான சிறுகதையும் இந்த வீட்டை வைத்து எழுதலாமே என யோசிக்கின்றேன்.

இப்போது சின்னான் ஈர்க்கில் முறித்து வர ஓடப் பார்த்தான். நான் சின்னானை பிடித்து நிறுத்தினேன். ஓணான் அந்த பூச்சு விழுந்த, போகனாற்றப் பாசி பிடித்த சுவரில் இன்னும் அசையாமல் நின்றது. சின்னானின் இரு தோள்களையும் இரு கையால் பிடித்து எனக்கு முன்னுக்காக்கி, அவனின், கறுத்த, சட்டை போடாத, மெலிந்த வலது தோளில் எனது நாடியை வைத்து ஆட்காட்டிவிரலை உயர்த்தி 'அங்க பார். .' என்றேன். மண்ணிறமான 'கலோட்டியஸ் வெர்சிகொலா' என்ற அந்த ஓணான் ஒலிவ் பச்சை நிறமாக மாறத் தொடங்கியது. கொஞ்ச நேரத்திற்கு பின் மஞ்சளாய் மாறத் தொடங்கியது. 'சின்னான்... அதுதான் ஒலிவ் பச்சை நிறம்' என்றேன். சின்னான் கண்கள் விரியப் பார்த்தான். ஓணான் ஒலிவ் பச்சையாய் மாறிய பின், கழுத்து பகுதியிலிருந்தும், தலையின் இரு ஓரங்களிலிருந்தும் மெல்ல மெல்ல ஒழுங்கற்ற வரிகள் கறுப்பாய் தோன்றத் தொடங்கியது. பின் வரிகள் வந்த வழியே கடைசியாக சிவப்பு படியத் தொடங்கி, கொஞ்ச நேரம் போன பிறகு பழைய நிறம் வந்தது. இப்போது சின்னானின் கண்களைப் பார்த்தேன். கண்களில் ஒளியா? தீட்சண்யமா? குரூரமா? என்று ஏதோவொன்று தெரியாமல் இருந்து தெரிந்ததைப் பார்த்தேன். நாளைக் காலை மீண்டும் ஓணானுக்கு வருவதாகக் கூறிவிட்டு, தொண்டில் இருந்த ஓணானையும் எடுத்துக் கொண்டு வந்து விட்டேன்.

காலையில் கெமிஸ்ட்ரி லேபிற்கு பக்கத்திலுள்ள அந்த கொறிடோரினூடாக மெல்ல மெல்ல கால் வைத்து நடக்கிறேன். சில மாணவ பெண்களும், ஆண்களும் எதையோ சுவாலை காட்டி எரித்துக் கொண்டிருந்தார்கள்.

அது யூரிக் அமிலமும், ஐதரசன் சல்பைட்டுமாக ஒரு வேளை இருக்கலாம். ஓணானின் மலத்தை மணந்து கொண்டு, கொறிடோரில் பதிக்கப்பட்ட அந்த சீமெந்தால் செய்யப்பட்ட மாபிள் பரப்பு எனக்கு ஓணானின் தோல் மாதிரி தென் படுகிறது. மெல்ல மெல்ல கால் வைத்து கவனமாக நடந்து மதிலுக்கு அருகே போகின்றேன். 'சின்னான்...' என்று கூப்பிட்டேன். சின்னான் அமைதியாக வந்தான். கேட்காமலேயே, ஒரு ஓணானை தொண்டு கட்டித் தந்தான். ஓணானின் வலது பக்க இடுப்பு கிழிந்து, குடல், இரைப்பை எல்லாம் வந்திருந்தது. 'சின்னான்... எனக்கு... இனி அடிச்ச ஓணான் தேவையில்ல. உயிரோட தான் வேணும்' என்றேன். சின்னானிடம் ஐந்து ரூபா கொடுத்தேன். அவன் அதனை வாங்கவில்லை. எவ்வளவோ வற்புறுத்தியும் வாங்கவில்லை. மீண்டும் மதியச் சாப்பாட்டு நேரத்திற்கு வருவதாகக் கூறிவிட்டு , சின்னான் தந்த வயிறு கிழிந்த ஓணானை லேபிற்கு கொண்டு போய், குடல், இரைப்பையெல்லாம் கையால் வயிற்றுக்குள் தள்ளி குண்டூசியால் ஒரு பக்கத்துத் தோலைத் தைத்து, குண்டூசிகள் தெரியாத வண்ணம் போட்டோ எடுத்தேன்.

மதியச் சாப்பாட்டுவேளை, மதிலுக்கு மேலால் எட்டிப் பார்க்கிறேன். கருங்கல்-லால், ஈர்க்கிற் தொண்டுகளில் பாரம் ஏற்றி, வயிறு கிழிந்து, ஈரல் உடைந்து, இதயம் சிதைந்து மூன்று ஓணான்கள் இறந்து கிடந்தன. சின்னானைத் தேடினேன். தூரத் திலே சின்னான் மாட்டுக்கு அடிக்கும் கேட்டிக்கம்பினால் ஓணான் ஒன்றுக்கு அடித்துக் கொண்டிருந்தான். நான் கொங்-கிறீட் கட்டையிலிலிருந்த காலை நிதானமாக கீழே எடுத்து, உயரத்திலிருந்து கீழே இறங்கி வந்த வழியினால் லேபிற்கு திரும்புகிறேன்.

**- அம்ரிதா ஏயெம்**

◈

---

மகா நதிகொரு ஒற்றையடிப்பாதை!

மரபுகளோடொரு மோட்சமென்றால்
அது -
எப்போதோ நிகழ்ந்திருக்கும்
""மரபு மீறல்"" நதிக்கல்ல
""மரபு விலங்குகள்"" உடைத்தல் தான்...

கங்கை கிரீடம் சுமந்திருந்த
காலங்கள் மறந்து பிரிந்து போகிறாள்

வெறுத்துப் போயிற்றா
இல்லை விட்டுப் போயிற்றா!

கேள்விகள் எப்போதும்
கேள்விகளாய்...
விடைகளற்று,
மௌனம் சாதிக்கையில்....

நதிகள் -
பிணக்குற்றுத் திசை மாறின
பக்குவமற்ற காலத்தில்
இயற்றப்பட்டவை பற்றி
இனி -
விண்டுரைக்க ஏதுமில்லை!

இந்த மழைமேகம்
இடம் பார்த்துப் பொழிவதில்லை!

காற்று -
இதம் தரத்தானேயன்றி
இத(ட)ம் தேடி அலைவதற்கல்ல!

புல்நுனி மடக்காமல்
புல்தலை வருடும் நதி
புறக்கணிப்பதில்லை
புறக்கணித்தலியல்வதில்லை.

இன்னமும்.....
பொறுமை நதியை மேன்மைப்படுத்தவில்லை.

– செல்வமனோகரி

---

## நரபலியன் ஒருவன்

சாம்பல் நிலம் உருவாக்கு
சடலங்கள் அடுக்கி விரும்பியதைப் பண்ணு
குருதியில் வர்ணம் தெளி
உன் படைப்பு உருவாககும்

மனிதன் செத்தழுகி நாறிப் புழுப்பதே
நல்லதுனக்கு
வறுமை -
தொற்று நோயாய்ப் பரவுகிற பரிதாபம்
பார்ப்பதுன் மகிழ்ச்சி
தேசத்தின் சதையிலிருந்து சீழ் வழியும் போது
கூட
சிம்மாசனம் துடைத்து
இதங் கொள்வாய்
என்ன கவலை இருக்கிறதுனக்கு!

ஆசன சுகபோகம் ஆறாண்டுக்குத் தேவை
ஆகையால் நீ
அணையுடைத்த வெள்ளத்தைப் போல
வெறியைப் பரப்பி
பூர்வீக வரலாற்றை மூழ்கடிப்பாய்
நீ மட்டும் ஏறி நிற்க
பாதுகாத்த பதவி

உறவழிந்து மக்கள் உருக்குலைந்தால் என்ன?
மரத்தடி பாதி நிழலில்
பாதி வெயிலில் வாழ்வு
வெந்து போனால் தான் என்ன?
அங்கங்கள் நொறுங்கி
முண்டமாகும் பரிதாபம் உண்டானால் தான்
என்ன?
உன் சுகங்கள் மட்டும் அரசோச்சும்

அநியாயக்கரனே! ஆளும் வெறிக்காய்
மனித மாமிசம் வேண்டி நிற்கும்
நரபலியனே!

இந்தக் கண்ணீரும் ஆணமையை
உண்டாக்கும்
ஆழ் கடல் தோற்குமாப் போல்
உன்னை -
அழித்துச் சென்று அழுக வைக்கும்

– அன்ஸார்

நன்றி - நூலகத்திட்டம்



# தெனாலி: ஆலங்கட்டி மழையும், குண்டு மழையும்!

– முரளி

பற்றி எரிகின்ற சர்ச்சைகள், விவாதங்களைக் கொண்ட அவசியமான நாடு தழுவிய பிரச்சினைகள் கொண்ட கதைக் கருவை நமது தமிழ்த் திரைப்படங்கள் தந்திருக்கின்றன. காவல்துறையினரின் பார்வையில் அரச தரப்பு தகவல்கள் தவறான புள்ளி விவரங்கள், தேசியவெறி நோக்கில் பல படங்கள் எடுக்கப்பட்டு திரையிடப்பட்டு வருவதைக் காண்கிறோம்.

மதக்கலவரம் பற்றிய 'பம்பாய்', காஷ்மீர் பிரச்சினை பற்றிய 'ரோஜா', வடகிழக்கிந்திய மாநிலங்களின் பிரச்சினை பற்றிய 'உயிரே', போராளிகள் பற்றிய ' குருதிப்புனல்' , மற்றும் ' தேசபக்தர்' அர்ஜுனின் தேசபக்திப் படங்கள் சிலவற்றை இவ்வகையில் குறிப்பிடலாம்.

இந்த வகை போக மேற்கண்ட மையக்கருவைக் கொண்ட அவலங்கள் நிரம்பிய கதைக்கருவைக் கூட நகைச்சுவையாக அவலத்திற்குரிய நபர்களை ஏமாளிகளாகவும், கோமாளிகளாகவும் சித்திரிக்கக் கூடிய படங்கள் இன்னொரு வகையில் குறிப்பிடப்பட வேண்டியவை. நகைச்சுவையை மட்டுமே கதைக் கருவாகக் கொண்டிருந்த படங்கள் போக அத்துயரங்களையே நகைச்சுவையாக்கி வரும் படங்கள் இவற்றை விடப் பெரும் ஆபத்துக் கூறுகளைக் கொண்டவை என்று நாம் கருத வேண்டியுள்ளது.

மூன்று மணி நேரம் சிரிப்புக்குள்ளாக்கி கவலைகளை மறக்கச் செய்யும் இப்படத்தை, நகைச்சுவையை மட்டுமே கருத்திற் கொண்ட இப்படத்தை ஏன் விமர்சனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கருதலாம். இக்கருவின் பின்னே ஒரு இனத்தின் சோகம், பேரழிவு, இடப்பெயர்வு ஆகியவை மறக்கடிக்கப்பட்டு, உணர்வுகளை மரத்துப்போக செய்து விடுகிறது என்பதாலேயே இதைப் பற்றி அவசியம் பேச வேண்டி இருக்கிறது.


தெனாலி சோமனைப் பற்றி சொல்வதற்கு முன் அவர் தப்பி வந்த அத்தேசம் இப்போது எப்படி இருக்கிறது? அங்கே ஏறக்குறைய ஒரு லட்சம் பேர் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். இருபதாயிரம் போராளிகள் உயிரைத் தியாகம் செய்தும், சொந்த நாட்டிலே 5 லட்சம் பேரும், இதர நாடுகளில் 5 லட்சம் பேருமாக அகதிகளாக்கப்பட்டும், பல ஆயிரம் குழந்தைகள் அநாதைகள் ஆக்கப்பட்டும், பல ஆயிரம் பேர் மனநோயாளிகளா ஆக்கப்பட்டும், பல கோடி தமிழர் சொத்துக்கள் அழிக்கப்பட்டும், பல நூறு பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டும், ஆயிரக்கணக்கில் பெண்களும் ஆண்களுமாக காணாமல் போயுமுள்ளனர். போரில் இருந்து தப்பி வருகையில் கூட கடலிலே மூழ்கிப் பலியாகியும் உள்ளார்கள். இத்தனை துயரங்கள் நிரம்பியது தான் அந்த சின்னஞ் சிறு தேசிய இனத்தின் அவல வாழ்வு. அங்கிருந்து தப்பி தமிழ்நாடு வரும் ஒருவரின் கதையை அதுவும் இராணுவக் கொடுமையினால் மனப்பிறழ்வுக்கு உள்ளாக்கப்பட்ட ஒருவர் கதையை கேலியாகச் சித்திரித்து திரைப்படமாக வெளியிட்டு வெற்றிப் படமாக ஆக்க முடிகிறது என்பதாலேயே அத்திரைப்படம் பற்றி நாம் அவசியம் பேச நேர்கிறது.

ஈழத்திலிருந்து மருத்துவ சிகிச்சைக்காக தமிழ் நாடு வருகிறார் தெனாலி, தனக்கு "எல்லாம் பய மயம்" என்று தனது 'பயங்கள்' பற்றி மனநல மருத்துவரிடம் பட்டியலிட்டு தன் தாய் இராணுவத்தால் (சிங்கள இராணுவம் என்று குறிப்பிடவில்லை) கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதால் அதன் பின் இப்படி ஆகியது என்று கூறி மருத்துவரிடம் சிகிச்சை அளிக்கக் கோருகிறார் தெனாலி. அவரின் சேட்டை தொந்தரவினால் மனநல மருத்துவர் தெனாலியை விரட்டி விடுகிறார். விரட்டிவிடும் செயல் ஒவ்வொன்றும் தனக்கான சிகிச்சை என நினைக்கிறார் அப்பாவி தெனாலி. தன் தங்கை தெனாலியை காதலிப்பதை அறிந்து கொலையும் செய்ய (வெடிகுண்டு மூலம்) முயற்சிக்கிறார் மருத்துவர். அதையும் சிகிச்சை என நினைத்து தப்புகிறார்.

பயம் தெளிகிறது. காதலியைக் கைப்பிடிக்கிறார். மருத்துவர் நோயாளி ஆகிறார். மிகவும் விவரமாகிப் போன தெனாலி நாடகமாடி மருத்துவரையே குணப்படுத்ததுகிறார். சுபம் சுபம் சுபம் முழுக்க முழுக்க நகைச்சுவை தொனியிலே படம் நகர்கிறது.

மருத்துவத்திற்காகவோ அல்லது வேறு நோக்கத்திற்காகவோ ஈழத்திலிருந்து அகதியாக தமிழகம் வந்து சுலபமாக யாரும் சுதந்திரமாக நடமாட முடியாது என்பது நம்மில் பலருக்குத் தெரிந்திருக்காது. தெனாலி அகதியாக வந்திருந்ததால் முகாமிலே தான் முடக்கி வைத்திருப்பார்கள்.

சாதாரணமாக மக்கள் முகாமை விட்டு



வெளியே செல்வதானால் காலையில் 6 மணிக்கு மேல் முகாம் பதிவுப் புத்தகத்தில் கையெழுத்திட்டு விட்டு மாலை 6 மணிக்குள் வந்து கையெழுத்திட வேண்டும். மறந்தால் கொடுக்கப்படும் உதவித் தொகையும் நிறுத்தப்படும். தொடர்ந்து எழுதாமல் சென்றால் காவல் துறையினராலும் 'க்யூ' பிரிவினராலும் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டும். நிலைமைகள் சிறைச்சாலை போன்று இவ்வாறு இருக்க, ஈழத்தமிழர் ஒருவர் தமிழகத்தில் எதிர்நோக்கும் சிக்கல்கள் பற்றி எதவும் குறிப்பிடாமல் ஏதோ அகதிகள் மகிழ்வாக சுதந்திரமாக தங்கள் தாயகம் போல வாழவும், வாய்ப்பு இருப்பின் காதலிக்கவும் முடிகிறது என்பது நகைச்சுவையின் பின்னே மறைக்கப்படும் மிகப் பெரிய பொய்கள்.

"ஒரு வீட்ல கூட மின்சாரம் இல்லை. கழிப்பறை வசதி சுத்தமா இல்ல. தண்ணீர் வசதியும் சரியா இல்ல... பொம்பளைங்க நாங்க வெட்ட வெளியில எங்கே போக முடியும்? ஊர்க்காரங்க யாரும் வேலை கொடுக்க மாட்டேங்குறாங்க. அதனால பிழைக்கிறது ரொம்பக் கஷ்டமா இருக்கு. எங்க பிழைப்புக்கு அரசு ஒரு வழி செஞ்ச கொடுத்தா புண்ணியமா இருக்கும்"

- மங்கா ராணி (ஈழ அகதி) ஜூனியர் விகடன் -29.11.2000

ஈழத்திலும் சரி, தமிழகத்திலும் சரி அவர்கள் வாழ்வு பெருத்த சோகமுடையவை . தெனாலி தன்னை அநாதை என்று குறிப்பிடுவதாலேயே அவர் படகு மூலம் அகதியாக வந்திருக்க முடியும் என்று ஊகத் திலேயே எழுதிகிறோம். அதனாலேயே அகதி முகாம் அவலங்களைச் சந்தித்திருக்க முடியும். தெனாலி போல, அழகு கொஞ்சும் குளு குளு பனிப்பிரதேசங்களில் ஆடிப்பாடி சுற்றித் திரியமுடியாது.

ஒரு வேளை கடவுச்சீட்டு (Passport) எடுத்து விமானத்தில் வந்திருக்கலாம் இல்லையா என்று கேட்கலாம். அதுவும் கூட லேசுப்பட்ட பயணம் அல்ல. ஈழத் தழிழர் ஒருவர் கொழும்பு செல்வது பிறகு சென்னை வருவதும் உயிரைக் காவு கேட்கும் பயணம் அது. எப்போதும் கைது செய்யப்படலாம், திருப்பியனுப்பப்படலாம், காணாமல் போகலாம். எனவே இவ்வாறு அகதிகளுக்கான சிரமம், சிக்கல் பற்றி தமிழக மக்களுக்கு பெரிதும் தெரியாமலே போய் விடுகிறது. தமிழகத்தில் அவர்களது பிரச்சினைகளைப் பத்திரிகைகள் தெரிவிப்பது இல்லை. அந்நிய பூமியில் ஆதரவற்றவர்களாகவே உள்ளார்கள்.

"......... இவ்வாறு பொய் வழக்கு போடப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதால் பயந்த அகதிப்பெண்கள் வேறு வழி யின்றி காம இச்சைக்கு உடன்படுகின்றனர்"

- சிறப்பு மலர்- பக்.17.

ஆகவே தான் ஈழத்திலிருந்து வரும் தனிநபர் ஒருவரைக் கூட இப்படிச் சித்திரிக்கக் கூடாது என்கிறோம். அதிலும் தெனாலி இராணுவத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவர். அப்படிப்பட்ட நபரை மையமாக வைத்து கேலி செய்து படம் எடுப்பது என்பது ஈழத்தமிழர் போராட்டம், வாழ்வுரிமை, துன்பதுயரம் எல்லாவற்றையும் பின்தள்ளி மறைத்து அப்பிரச்சினையோடு உணர்வு பூர்வமாக தொடர்புடைய தமிழக மக்களைத் திசை திருப்பும் முயற்சியாகவே தெனாலி படத்தைக் கருத முடியும்.

மருத்துவரிடம் தன் தாய்க்கு நேர்ந்த சோகத்தைச் சொல்லுகையில், தெனாலி கமலின் நடிப்பு திறனில் நாம் ஆழ்ந்து போகையில், அடுத்து வரும் நகைச்சுவை வசனம் அந்த சோகத்தைக் கரைத்து விடுகிறது. யாரும் சோகப்பட்டு விடக்கூடாதென்பதில் இயக்குனர் ரவிக்குமாரும், கமலஹாசனும் அவ்வளவு கவனமாக இருக்கிறார்கள். தெனாலியை காவல்நிலைய அதிகாரிகள் பரிவோடு அணுகுவதாய் காட்டுவது மிகப் பெரிய கேலிக் கூத்து. ஈழ அகதிகள் என்றாலே கொலை, கொள்ளை, அமைதிப்பூங்காவான தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை சீர்குலைப்பவர்கள் என்று நாம கரணம் சூட்டப்பட்டிருக்கும் ஈழ அகதிகளுக்கு காவல் நிலையத்தில் பரிவுபசாரம். அபத்தத்திற்கு எல்லையே இல்லையா?

மாதக் கடைசியில் வழக்கு ஏதும் கிடைக்கவில்லை எனின் உயர் அதிகாரிகளுக்கு கணக்கு காட்டுவதற்காக அருகில் இருக்கும் அப்பாவி அகதிகளைப் பிடித்துச் சென்று பொய்வழக்குப் போடுவதை தமிழகப் பொலிஸார் வழமையாகக் கொண்டுள்ளனர்.

-சிறப்பு மலர் பக்.16

'சீரியசான ' படம் ஒன்றை நாட்டு மக்களுக்கு வழக்கம் போல் அர்ப்பணித்துவிட்டு அடுத்து மசாலாப் படம் ஒன்றை வழங்கும் நடைமுறையைக் கொண்ட கமலஹாசன் அதைத் தெனாலி மூலம் மறுபடியும் நடைமுறைப்படுத்தியிருக்கின்



றார். படத்திற்கு படம் தனது உருவ அமைப்பில் மாற்றம் ஏற்படுத்தி 'பிரமிப்பு" உண்டாக்கும் அவர் இதிலே அப்படி எதையும் செய்யவில்லை. ஆகவே தான் இப்படத்தில் மொழிக்கு 'மேக்கப்' போட்டிருப்பதாக ஒரு பத்திரிகை அவரின் 'திறமையைப்' பறை சாற்றியது.

கமல் ஈழத்தமிழராக நடிப்பதை இலங்கைத் தமிழராக நடிப்பதாக பத்திரிகைகள் எழுதின. ஈழம், ஈழத்தமிழர், ஈழத்தமிழ் என்ற வார்த்தைகளைத் திட்டமிட்டே எழுத மறந்தன. கமலின் ரசிகர்களோ இன்னொருபடி மேலே போய் கமல் 'சிங்களத் தமிழில்' அசத்துகிறார் என்று கூறி விளம்பரம் செய்தனர்.

போராளிகளை காவல்துறை அதிகாரியின் பார்வையில் (குருதிப்புனல்) படம் எடுத்த கமல், தெனாலியை கிரேசி மோகன் பார்வையில் பார்த்திருக்கலாம். கமல் மீது பரிவு கொண்டவர்கள் கமல் ஈழத்தமிழருக்காக வாயைத் திறக்கவில்லை என அங்கலாய்க்க வேண்டாம். ஏனெனில் ஈழத்தமிழிலேயே திறந்திருக்கிறாரே இதுவே எவ்வளவு பெரிய விசயம்!

இப்படி கமலஹாசன் ஒருபுறம்.

அதேநேரத்தில் இப்படத்தில் பணியாற்றிய இன்னொருவரை அவசியம் குறிப்பிட்டாக வேண்டும். ஈழத்தமிழருக்காக ஓயாது குரல் கொடுப்பவரும், போராடுபவரும், எழுதுபவரும் 'டெரரிஸ்ட்' திரைப்படம் ஈழப்போராளிகளை இழிவுபடுத்துவதாகக் கூறி கூட்டம் நடத்தி துண்டுப்பிரசுரம் வெளியிட்டு திரைப்பட விழாவன்றே ஆர்ப்பாட்டம் செய்தவரும், அறியப்பட்ட கவிஞரும் நட்புக் குறித்தான தனது விலையுயர்ந்த நூலைக் கூட அங்கயற்கன்னி போன்ற கரும்புலிகளுக்கு அர்ப்பணித்தவருமான திரைப்படப் பாடலாசிரியர் அறிவுமதியைக் குறிப்பிட வேண்டும். ஈழத்தமிழர் பற்றிய இச்சித்திரிப்பு சரியா தவறா என்று நாம் விட்டு விட முடியாது. அப்படியானால் ஈழத்தமிழர் குறித்த அவரது கரிசனத்தையும் அவ்வாறே விட்டு விடலாமா?

திரைப்பட நடிகர் விஜய் ஈழத் தமிழர் ஒருவரைத் திருமணம் செய்து விட்டதாலேயே அவரைத் ஈழத்தமிழர்களுக்கு அனுதாபி போல சித்திரித்து அகமகிழ்ந்தது 'நந்தன்' பத்திரிகை. அதைப் போல ஈழத் தமிழ் பேசி விட்டதாலேயே கமலையும் படத்தையும் ஈழத்திற்கு அணுக்கமாகக் காண்கிறாரோ அறிவுமதி? இல்லை என்றால் ரகுமான் இசை அவரை மயக்கி விட்டதோ?

ஈழத்தமிழர் பிரச்சினையை இவ்வளவு நகைச்சுவையாகக் கூட எடுக்க முடியுமோ என்று 'இந்தியா டுடே' யே வியக்கிறது. இப்பிரச்சினைப் பற்றிய நகைச்சுவையான முதல் படம் என்று சொரணை அற்றவர்களுக்கு சுட்டிக் காட்டுகிறது.

இடைவிடாத கடும்போர், அழிவு, இந்திய அமைதிப்படை நுழைவு, இஸ்ரேல் ஆயுத உதவி, அமெரிக்க ஆயுத உதவி, பாகிஸ்தான் உதவி இப்படிப் பல நாடுகளின் உதவியோடு சிங்கள அரசு ஈழத் தமிழ் இனத்தை சின்னாபின்னமாக்கி வருகிறது. சொந்த மண்ணை இழந்து தவிக்கிறது ஈழத் தமிழினம். நாமும் நம் பங்கிற்கு அங்கிருந்து தப்பி வரும் ஒருவரின் கதையை நகைச்சுவைத் திரைப்படம் என்ற பெயரில் சிரித்து ரசித்து இந்த மரண ஓலத்தை மழையின் னவள இரைச்சலில் கரைத்துக் கொண்டிருக்கிறோம். ஒடுக்கு முறையை சிரித்து ரசித்து மறப்பது சாராம்சத்தில் அவ்வினத்திற்கு துரோகம் செய்வதும், அந்த ஒடுக்கு முறைக்கும் துணைபோவதாகத் தான் அமையும்.

நன்றி: 'அ'

நன்றி - நூலகத்திட்டம்



# சிறைக்காவலாளியே கதவைத் திறந்து விட தயாராகவிருந்தார்!


## நினைவுக் குறிப்புகள் – 19

1942 சிறையுடைப்புப் பற்றி நிறைய விடயங்கள் எழுதப்பட்டுவிட்டன. இது கட்சிக்குள் உற்சாகத்தை ஊட்டியதுடன், பின்னர் நடந்த 1953 ஹர்த்தாலுக்கும் அடிப்படையாயமைந்தது. ல.ச.ச.கட்சியின் வரலாற்றில் ஒரு முக்கியமான, கதை கதையாகப் பேசப்படும் சம்பவமாகியது. அத்துடன் இது ஒரு பொய்மையான நம்பிக்கைகளை உருவாக்கவும் பின்னாளில், உருவான கட்சி அரசியல் வேறுபாடுகளுக்கு காரணமாகவும் அமைந்தது. பேராசிரியர் றஞ்சித் அமரசிங்க அவர்கள் ல.ச.ச.கட்சி பற்றிய தனது ஆய்வில் றொபேர்ட் குணவர்த்தனாவே இந்தச் 'சிறையுடைப்புக்கான கருவியாகத்' திகழ்ந்தார் என்று குறிப்பிடுகின்றார். தனது அரசியல் வாழ்வு பற்றி 30 வருடங்களுக்குப் பிறகு ஒரு செய்திப் பத்திரிகைக்கு றொபேர்ட் கொடுத்த தகவலடிப்படையிலேயே பேராசிரியர் இதைக் குறிப்பிடுகிறார்.

ஆனால், அதை அப்படிச் சொல்ல முடியாது. ஏனென்றால், இந்த நடவடிக்கை ஒரு கட்சி நடவடிக்கையாகும். கட்சியின் ஆட்சிக் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட இந்தத் தீர்மானத்தைத் தயாரிப்பதிலும் முடித்து வைப்பதிலும் பல கட்சித் தோழர்கள் பங்கேற்றனர். ஆகவே இந்தச் சிறையுடைப்பின் வெற்றிக்கு காரணமான திட்டமிடலுக்கு யார் காரணம் என்று குறிப்பிட முடியாது என்றே நான் கருதுகிறேன். சிறைக் கதவுகளைத் திறப்பதில் பெரிய சிரமம் இருக்கவில்லை. ஏற்கெனவே சிறையிருந்தவர்கள், ஆதரவாளரான சிறைக் காவலாளி சொலமனை பேசி வென்றெடுத்திருந்தனர். அவர் சிறைக் கதவைத் திறப்பதற்கு ஒப்புக் கொண்ட பின் இந்த விடயம் அவ்வளவு சிக்கலுக்குரியதாக இருந்திருக்க முடியாது. விடுவிக்கப்பட்டவர்களை கொழும்புக்குக் கொண்டு வந்து சேர்ப்பது கூட, இரவிரவாகச் செய்யப்படவிருந்ததால் அதில் சில கஷ்டங்கள் இருந்த போதும், பிரதம சிறை அதிகாரி நெவில் டி லா மோற்றெ வெளியே சென்றிருக்கிறார் என்பதும், அவர் அன்றிரவு அங்கு இருக்கமாட்டார் என்பதுவும் இதன் காரணமாக அவரால் கைதிகள் தப்பியோடி விட்டார்கள் என்பதை காலை வரை அடையாளம் காண முடியாது என்பதுவும் கஷ்டத்தை வெகுவாகக் குறைத்துவிட்டதென்றே சொல்ல வேண்டும். ஆனால், தப்பியோடியவர்களைத் தொடர்ந்ததும் பாதுகாப்பில் வைத்திருப்பதற்காக நிறைய வேலை செய்ய வேண்டியிருந்தது.

றொபேர்ட்டின் கதை ஒரு தனிப்பட்டவரது கதை என்பதால், நடந்து பற்றி எனக்குத் தெரிந்த ஓரளவு விடயங்களைக் கூறலாம் என நினைக்கிறேன். சிறையுடைப்புக்கு முன், கொல்வின் சொலமன், ஆகியோர் மறைந்திருப்பதற்கு வசதியானதென ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு வீட்டுக்குப் போய் தங்குமாறு எனக்குக் கூறப்பட்டது நான் தான் அந்த வீட்டின் வெளியில் தெரிந்த குடியிருப்பாளனாக இருந்தேன். டொறிக் தான் இந்த வீட்டை கண்டு பிடித்து ஒழுங்கு செய்திருந்தார். டொறிக்கின் இத்தகைய உதவிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனென்றால், அவர் ஒரு கட்சியின் செயற்பாட்டாளர் என்று அறியப்படாதவராக இருந்தார். அந்த வீடு மிகவும் வசதியானதுடன், சரியான விதத்தில் அமைந்தும் இருந்தது. ஒரு பெரிய தோட்டத்தின் பின்னால் அந்த வீடு அமைந்திருந்தது. இதனால் வீதியால் போகிறவர்களால் அங்கே என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடியாது. மலையகத்தைச் சேர்ந்த ஒரு சிங்களத் தொழிலாளி, வீட்டு வேலை மற்றும் சந்தைக்குப் போதல் போன்றவற்றிற்காக அமர்த்தப்பட்டிருந்தார். நான் இவரை 'ஆர்' என்று அழைக்கிறேன். இந்த வீடு, நான் பல்கலைக்கழகம் போய்வந்து தங்குவதற்கு வசதியாக இருக்குமென்பதால், எனது மாமாவால் வாடைகக்கு அமர்த்தப்பட்டதாகவே வீட்டுச் சொந்தக்காரனுக்கு சொல்லியிருந்தோம். 'ஆர்'க்கும் இதே கதை சொல்லப்பட்டிருந்தது. இதையே விடுப்புக் கேட்கும் அயலவர்களுக்கும் சொல்லுமாறு அவரிடம் கூறியிருந்தோம்.

எட்டாம் திகதி இரவு கொல்வினும் சொலமனும் வந்து சேர்ந்தனர். கொல்வின் தடுப்புக் காவலில் இருந்த காலத்தில் நீண்ட தாடியொன்றை வைத்திருந்தார். கிட்டத்தட்ட ஆறு வாரங்கள் வரை நான் அவருடன் அங்கு வசித்து வந்தேன். அவர் மிகவும் இலகுவான, பழகும் இயல்புள்ள ஒருவராக இருந்தார். அவர் இரவுச் சாப்பாட்டின் போது மார்க்சிய சிந்தாத்தம் பற்றியும், கட்சியின் ஆரம்ப காலங்கள் பற்றியும் என்னுடன் பேசுவார். இந்த ஆரம்பகால விடயங்கள் பற்றி எனக்கு எந்த நேரடி அனுபவமும் இருந்திருக்கவில்லை. அவர் ஒரு முறை தான் மூலயா கொமிசன் முன் சார்ஜன்ட் சுரவீரவை குறுக்கு விசாரணை செய்ததை எனக்காகச் செய்து காட்டினார். (இது அவரது மிகப் பிரசித்தி பெற்ற, சட்டரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அவரை உயர்த்திய சம்பவங்களில் ஒன்றாகும்) இதை விளக்க அவர் ஒரு கடதாசியில் சில வரை படங்களை வரைந்தும், காட்டினார். இந்த சார்ஜன் சுரவீர தான் தோட்டத் தொழிலாளி கோவிந்தனைக் கொன்ற துப்பாக்கிச் சூட்டை நடாத்தியவர். பொலிஸ் தரப்பு நிலைப்பாடு என்னவென்றால், தாம் தொழிலாளர்களின் மிரட்டலால் உயிராபத்துக்குள்ளாகி இருந்தோம் என்பதாகும். அதனால் அந்தச்சூடு தற்பாதுகாப்புக்காக நிகழ்த்தப்பட்டது என்று அவர்கள் வாதாடினர். கொல்வினின் நோக்கம் என்னவென்றால், இது ஒரு சுத்தமான இட்டுக்கட்டு என நிரூபிப்பதாகும். அந்தத் தொழிலாளர் கூட்டம் பொலிஸ் நின்ற இடத்திலிருந்து தூரத்திலேயே நின்றிருந்தது. ஆயுத பாணிகளல்லாத அவர்களால் அவ்வளவு தூரத்திலிருந்து கொண்டு பொலிசாருக்கு உயிராபத்து விளைவித்திருக்க முடியாது என்று அவர் கருதினார். அவர் 'நீ எங்கே நின்றாய்?' என்றும், 'தொழிலாளர்கள் எங்கு நின்றார்கள்' என்றும் சார்ஜனிடம் கேட்டிருந்தால் நிச்சயமாக ஒரு பொய்க்கதை சோடிக்கப்பட்டிருக்கும் இதனால், கொல்வின் ஒரு நீண்ட குறுக்கு விசாரணையை மேற்கொண்டார். அவர் சம்பந்தா சம்பந்தமில்லாதது போன்ற கேள்விகளை, நில அமைப்பு, தூரம் என்பவற்றைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தார். சுரவீர, எந்தவிதமான முன்னெச்சரிக்கையும் இன்றி அப்பாவித் தனமாகப் பதிலளித்துக் கொண்டிருந்தார்.




தலைமறைவு வாழ்க்கை
றெஜி சிறிவர்த்தன

கொல்வின் கடைசிக் கேள்வியைக் கேட்கும் வரை அவர் கேள்விகள் தன்னை பொறிக்குள் அகப்படுத்துவதை புரிந்து கொள்ளவே இல்லை. கொல்வின் இதைத் திருப்பிச் செய்து காட்டியது கூட ஒரு நல்ல நாடக அளிக்கை போல இருந்தது.

கொல்வினை ஒரு வீரக் கதாநாயகனாக சொலமன் மதித்து வந்தார். சொலமன் மிகவும் இளமையாகவும், சாதாரணமானவராகவும், நல்லியதம் கொண்ட ஒருவராகவும் இருந்தார். இதை வைத்தே அவர் எப்படி 'பாதுகாப்பையும் உத்தியோகத்தையும் உதறிவிடுமளவுக்கு தடுப்புக் காவலில் இருந்தவர்களால் வெற்றி கொள்ளப்பட்டிருப்பார் என்று புரிந்து கொள்ளலாம். கொல்வின் தன்னிடம் ஆக்கிரமிப்புக் காரணமாக தமது உயிருக்கு ஆபத்து வரலாம் என்று கூறியதாக சொலமன் என்னிடம் தனிப்பட்ட முறையில் கூறினார். கொல்வின் சொன்னாராம் "யுத்தமிட்டு மரணிப்பதானால் நாங்கள் கவலைப்பட மாட்டோம். ஆனால், அநியாயமாக பொறியில் அகப்பட்ட எலியைப் போல் சாக நாம் விரும்பவில்லை" என்று. சிறையுடைப்பு நடந்த நாளுக்குப் பிந்திய சில வாரங்கள் நானும் 'ஆர்' உம் ஒன்றாக ஓரளவு சமத்துவமான நிலையில்" வசித்து வந்தோம். எமக்கிடையே நிலவிய வர்க்க கலாசார வேறுபாடுகளை எமது 'தோழர்' உறவுக்கு கீழ்ப்படுத்த முயன்றோம். அத்துடன் நாம் நல்ல நண்பர்களாகவும் இருந்தோம். ஒரு வீட்டுவேலை செய்ப வனாக இருந்த போதும், நான் சிறுவனாக இருந்ததால், அவருக்கு என்னுடன் ஒரே அளவு உயரமான ஆசனத்தில் அமர்வதும் ஒரே மேசையில் சாப்பிடுவதும், அவ்வளவு 'கஷ்டமாக இருக்கவில்லை.

வரும்

# இலங்கையின் முதற்பெண் சட்டவரைஞர்

இலங்கையின் உயர் அரச பதவிகளில் பெண்கள் அமர்த்தப்படுவது குறித்து எப்போதும் ஒருவகை முணுமுணுப்பு இருப்பதுண்டு. ஆயினும், மற்றைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் அதிகளவில் உயர்பதவிகளுக்கு பெண்கள் நியமிக்கப்படுவது நடந்து வந்திருப்பது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயம்.

நிதியமைச்சின் கீழ் வரும் உயர் பதவிகளில் ஒன்றான உயர் நீதிமன்ற நீதிபதி பதவி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு ஜனாதிபதி சந்திரிகா அவர்களால் வழங்கப்பட்ட போது பலத்த சலசலப்புக்கள் ஏற்பட்டன. சில நீதிபதிகள் அவருடன் சேர்ந்து தாம் விசாரணைக்காக உட்காரப் போவதில்லை என்று கூடப் பேசினார்கள்'.

சட்டரீதியாக அவரது நியமனம் செல்லுபடியானதென்ற போதும், சம்பிரதாய முறைப்படி அவர் நீதிமன்ற வழக்குரைத்தல் அனுபவங்கள் அற்றவர் என்பதால் இப்பதவிக்கு அவரை நியமிக்கலாமா என்று கேள்வி எழுப்பப்பட்டது. ஆயினும், அந்த எதிர்ப்புக்கள் பின்னர் புஷ்வாணமாகிவிட்டன.



இப்போது அதே நீதியமைச்சின் உயர்பதவி ஒன்றிற்கு ஒரு பெண்மணி நியமிக்கப்பட்டிருக்கின்றார். நீதியமைச்சின் கீழ் வரும் சட்ட வரைஞர் பதவி என்ற முக்கியமான பதவிக்கு புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் இவரது பெயர் ரெரன்ஸ் பெரேரா. சட்ட வரைஞர் அலுவலகத்தில் நீண்ட காலமாகப் பணியாற்றி வந்து இப்போது உயர்நிலையை அடைந்திருக்கும் இவர் இலங்கயின் முதலாவது பெண் சட்டவரைஞர் என்ற பெருமையைத் தட்டிக் கொண்டிருக்கிறார்.

பாராளுமன்றத்தில் நிறைவேறும் சட்டங்களை சட்டமாக எழுத்து வடிவில் கொண்டு வரும் 'சட்டவரைதல்' செயற்பாடு மிகவும் முக்கியமானதும், நீண்ட ஆழமான கலந்துரையாடல், பொறுப்புணர்வு, சிந்தனை என்பவற்றின் அடிப்படையில் செய்ய வேண்டிய ஒன்றுமாகும். சிறிய சொற்கள் கூட பெரிய ஆபத்தான பின்விளைவுகளை ஏற்படுத்திவிடக் கூடியவை என்பதால், இந்த வரைதல்கள் மிகவும் அவதானமாகச் செய்யப்பட வேண்டியவையும் கூட.

பொதுவாக சட்டங்களில் செய்யப்படும் மாற்றங்கள் திருத்தங்கள் என்பன பெரும்பாலும் சட்டவரைஞர் அலுவலகத்தில் தயாரிக்கப்படுவதால், ஆழமான விவாதங்கள் இல்லாமலே அவை சட்டமாகி விடுகின்ற சந்தர்ப்பங்களும் ஏற்படுவதுண்டு. குறிப்பாக ஜனாதிபதியின் அவசர கால நிலைப் பிரகடனம் போன்றவை - பாராளுமன்றத்திற்கு போகாமலே - சட்ட அந்தஸ்துடன் அறிவிக்கப்பட்டு விடுவதுண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் சட்டவரைஞர் அலுவலகத்தின் கவனக்குறைவு பல ஆபத்தான பின் விளைவுகளை ஏற்படுத்திவிடும் வாய்ப்பும் உண்டு. உதாரணமாக கடந்த ஆண்டு கொண்டு வரப்பட்ட அவசரகாலச் சட்டத்தின் பல சரத்துக்கள் மிகவும் ஆபத்தான அம்சங்களைக் கொண்டிருந்தன. குறிப்பாக தனிநபர்களை கைது செய்தல், கொல்லப்பட்டவர்களை அடக்கம் செய்தல், சொத்துப் பறிமுதல் போன்ற விடயங்கள் பின்னர் உடனடியாக மாற்றப்பட்டன. இதற்கு பெரும்பாலும் சட்டவரைஞர் அலுவலகம், பழைய பிரகடனங்களை அப்படியே 'வெட்டி ஒட்டி விளையாடும்' வேலையை செய்வதே காரணமாக அமைகின்றது. இது பின்னர் திருத்தப்பட்டாலும், திருத்தப்படுவதற்குக்கிடையிலான சம்பவங்களின் விளைவுகட்கு யாரும் பொறுப்புச் சொல்ல முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது. ஜனாதிபதி கனவிலும் நினைக்காத ஒரு விடயம் கூட சிலவேளை இந்தச் சிறிய இடைவெளியில் நடந்துவிடும் வாய்ப்புண்டு.


நல்ல பொறுப்புணர்வுள்ள ஒரு சட்டவரைஞர் தலைமையில் சட்டத்தின் சரத்துக்கள் வரையப்படுமானால், இத்தகைய தவறுகள் நடக்க வாய்ப்பிருக்காது.


புதிய சட்டவரைஞர் ரெரன்ஸ் பெரேரா அக்கறையும் பொறுப்பும் உள்ள ஒருவராக இருந்து அந்த விடயத்திலும் முதல் நபராக தன்னை வெளிக்காட்டுவார் என்று எதிர்பார்க்கலாமா!

# இராணுவத்தினரின் நாட்காட்டி

2001 ஆண்டுக்கான இராணுவத்தினால் வெளியிடப்பட்ட சிறிய கலண்டர் இது.

ஒரு பக்கத்தில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் படத்துடன் " நாம் அனைவரும் சாதி மன குல பேதங்களை மறந்து எமது பன்மையில் ஒருமை கண்டு ஒரு புதிய நாட்டைக் கட்டியெழுப்ப இடையறாது உழைப்போம் வாரீர் திரண்டு.




அதி உத்தம ராம் இலங்கை ஜனாதிபதி என்று அச்சடிக்கட்டுள்ளது.

அதேவேளை பின் பக்கத்தில் புலிச் சின்னத்ததின் கீழ்,

"புலிகளின் தாகம், தமிழர்களின் உயிர்கள்" என்றும் அச்சிடப்பட்டுள்ளது.

இந்த விசித்திரமான சிறிய நாட்காட்டியை வெளியிட்டுள்ள இராணுவத்தின் தாகம் என்ன என்பது தமிழ் மக்களுக்கு தெரியாததல்லவே!

நன்றி - நூலகத்திட்டம்



## நூல் மதிப்பீடு

– அறபாத்

# கடைசிச் சொட்டு உசிரில்.......!

90க்குப்பின் கவிதை, ஓவியம் இரண்டிலும் காலூன்றி சோபித்து வருபவர் எஸ்.நளீம். மட்டக்களப்பு, மாவட்டத்தில் மீராவோடை, என்ற கிராமத்தில் பிறந்து வளர்ந்த நளீமுக்கு ஓவியமும், கவிதையும் இயல்பாகவே ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டு வளர்ந்து வந்திருக்கின்றன. அல்அஸுமத்தின் முன்னுரையுடன், கருத்தாழமிக்க அட்டைப் படத்துடனும், அழகிய அச்சமைப்பில் இந்நூல் வெளிவந்திருக்கிறது.

கவிதைகள் குறித்து ஒவ்வொருவருக்கும், ஒவ்வோர் பார்வை உண்டு. அந்த உணர்வு சார்ந்தே தமது கருத்துக்களையும் கவிதைகளையும் எழுதுவர், அகநிலை, புறநிலை சார்ந்து கவிதைகளை பிரித்து எழுதுவது தொடக்கம் இவ்விவாதம் தொடர்கிறது.

அண்மைக் காலமாக கவிதைத் தொகுதிகள் நிறைய வருகின்றன. இதில் ஆரோக்கியமான கவிதைத் தொகுதிகள் என ஒன்றிரண்டு தேர்கிறது. சில தொகுதிகள் பிரயபல்யத்திற்காக - பிரதி பெற்றுவருகிறது. சில தொகுதிகள் விமர்சகர் என்போரால் உயர்த்தப்பட்டு, பிரமிப்பை ஏற்படுத்தி விட்டிருகின்றன.

நளீமின் கவிதைகள் பல உணர்வு நிலைத்தளத்திலிருந்து எழுதப்பட்டுள்ளன. மனித வாழ்வில் புறந்தள்ள முடியாத காதலுணர்வு, தொடக்கம், மனித வதையான - ஆட்கொல்லி, ஈழத்துப்போர் வரை - சகல தளங்களையும் அனுபவத்துடன் தொட்டுப் பேசுகின்றன இக்கவிதைகள்.

ஒருயுத்த பூமியில் வாழ்ந்து வரும் இளங் கவிஞனின் மனக் குமுறல்கள், தமிழ் கவிதை உலகிற்கு சில ஆழமான கவிதைகளைத் தந்திருப்பதை புறந்தள்ள முடியாது. போர், அடக்குமுறை, அரச, தமிழ் பயங்கரவாதம், சிறுபான்மைக்கெதிரான பேரினவாதத்தின் இனச் சுத்திகரிப்பு, என அகலித்த பார்வையுடன் கவிதைகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

நூலின் பெயர்:
கடைசிச் சொட்டு உசிரில் (கவிதை)
ஆசிரியர்: எஸ்.நளீம்
விலை: 95.00
வெளியீடு: யாத்ரா

ஈழத்து மக்களின் அதுவும், தமிழ், முஸ்லிம் மக்களின் பொதுப் பிரச்சினைகளை மிகத்துல்லியமாக இனங்கண்டு, அரசுக்கெதிரான போர்க்குரலை கவிதை மூலம் தொடுக்கின்றார் நளீம்.

"04.02.1999 என்ற கவிதையில்,

*இன்று தேசிய தினம்*
*எங்கேயும் போகாதே குண்டு வெடிக்கும்"*
*இந்த வீதியில், அதிகமானோர்*
*பேசிச்சென்றனர்*
*இன்று பாதுகாப்பற்ற நாளென்று தான் "*

(பக்04.)

வாழ்வின் இருப்பை கேலியுடனும், விரக்தியுடனும், எள்ளி நகையாடும் கவிதை இது. சுதந்திரதினம் மட்டுமல்ல, முக்கியத்துவம் வாய்ந்த எந்த நாளாயினும், அது ஒரு நூறு கொலைகளுக்கான அவசியத்தை இங்கு வலியுறுத்தி நிற்கின்றன.

இந்த வலியை இப்படிப் பகிர்ந்து கொள்கிறார் நளீம்.

*"மூட்டிய அடுப்புக்குள்*
*ஜீவிப்பதற்கான வலி,*
*வக்கிரத்தின் உக்கிரத்தில்"*

பக். 13

"மூட்டிய அடுப்பு என்பது மிக அற்புதமான ஒரு படிமப்பிரயோகமாகத் தெரிகிறது. இந்த நாட்டுக்கும், இதன் சட்டங்களுக்கும் மிகப்பொருத்தமான படிமம், இந்தத் தேசத்தில் சிறுபான்மையினர் ஒருவர் எப்படி வாழமுடியும், என்பதைத் தத்ரூபமாக, இரண்டு வரிகளில் சொல்லி வாய்ப்பைத் தருகிறது.

அத்துடன் எல்லாம் தருவேன், முக்கியமாக சுதந்திரத்தைத் தருவேன் என



மார்தட்டி ஆட்சிக்கு வந்தவர்கள் மதத் தலைவர்களின் காலடியில் சரணாகி, 'நீங்கள் சொல்வதே எமது ஆட்சி, என்று இளித்து போகும் அளவிற்கு காவி ஆக்கிரமிப்பு' இந்த நாட்டை ஆட்டிப் படைக்கிறது. தொட்டதெற்கெல்லாம் வீதியில் இறங்கி ஆர்ப்பரிப்பதும், கொடும்பாவி எரிப்பதும், மக்களை கொல்லென கூப்பாடு போடுவதும் தான் புத்த பகவானின் போதனையோ என எண்ணும் அளவிற்கு சில தேரோக்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. அவர்களின் இந்த வன்முறை அரசின் தலைகுனிவு அனைத்திற்கும் ஒட்டுமொத்தமான சாட்டையடியாக ஒருகவிதை இப்படிச் சுடுகிறது,

*"அனைத்தும் துறந்தோரின்*
*காவிப் போர்வையின் முடிச்சுக்குள் தான்*
*இலங்கைத் தீவு திறக்கப்படாமல்"*

(சுதந்திரம் பக். 16)

பொதுவாக சமாதானத்தின் எதிரிகள் மதவாதிகள் தாம் என்பதை - மிகத்துணிச்சலாகச் சொல்கிறது கவிதை. சில கவிதைகள், பலஸ்தீனத்துக் கவிதைகளை நினைவூட்டுகின்றன. எல்லைப்புறத்து அவலங்களையும், அதன் இறுக்கமான சூழலையும் பலஸ்தீன விடுதலைக் கவிதைகளில் அதிகம் தரிசிக்கலாம். அத்தகைய சுதந்திரக் கவிதை ஒன்றை - நளீம் எழுதி இருப்பதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. நளீம் வாழும் கிராமம், மண் மூடைகளாலும், பங்கர்களாலும், கோடிடப்பட்டு அப்பால், தமிழ் மக்களும், இப்பால் முஸ்லிம் மக்களுமாக எல்லைப்படுத்தப்பட்டுள்ளது.

*பேரினவாதத்தின் எல்லைகள்,*
*எத்துனை மன உழைச்சலைத் தருகின்றது.*
*கூப்பிடு தூரத்தில் அவர்கள்*
*இடையில் காவலரணை மட்டும் நம்பி*
*எப்படிக் கவிதை எழுதுவது"*

(இன்னும் எழுதாத அந்தக் கவிதை - பக்.19)

முஸ்லிம்களும், தமிழர்களும் வாழ்ந்த ஒற்றுமையின் ஒரு காலத்தை நினைவூட்டி இரு இனங்களையும் பிரித்து வைத்துள்ளவர்களைச் சாடி - இரவும் பிரிந்திருப்பதில் உள்ள பாதகங்களை மட்டுமல்ல, அடக்குமுறைக்கு எதிராக போராடும் தமிழ் போராளிகள் முஸ்லிம்களை அடக்க நினைப்பதையும் கேள்விக்குள்ளாக்குகின்றது ஒரு கவிதை.

*நண்பர்களே,*
*நீங்கள் நாடு கேட்கிறீர்கள்*
*அதனால், நீங்கள் நாடு காக்கிறீர்கள்*
*ஆனால்,*
*நான் என்ன கேட்டேன்*
*இறக்கவும்... இழக்கவும்*

பக் - 22

சில கவிதைகளில் சோலைக்கிளியின் மெல்லிய தாக்கம் இருப்பதை அவதானிக்க முடிகிறது. அவை அவரின் ஆரம்பக் கவிதைகள் போலும். 'கஷ்டமான கவிதை 1', 'போர் முனையில் 04.02.99' போன்ற கவிதைகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

'விரிசலின் விசாலம்' (பக். 27) என்ற கவிதை 91 ம் ஆண்டு "ஒரே நேரத்தில் வாழைச்சேனை மியான்குளச் சந்தியில் விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட புத்திஜீவிகளைப் பற்றிய கவிதை - அந்தக் கவிதைக்கான அடிக்குறிப்பு எதுவும் சேர்க்கப்படாமல் இருப்பது மயக்கத்தைத் தருகிறது. பொதுவாக அந்தக் கவிதை - சம்பந்தப்பட்ட காலத்தில் வாழ்ந்த அந்தக் கிராம மக்களைத் தவிர - வேறு யாருக்கும் பதியப் போவதில்லை. இந்தக் கவிதைக்கு அடிக்குறிப்பு இட்டிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

நளீமின் கவிதைகள் சிலவற்றை படிக்கும் போது நம்பிக்கை தருகின்ற - கவிதை வளர்ச்சியைத் தரிசிக்க முடிகின்றது. ஆரம்பகாலக் கவிதைகளில் உள்ள சொற்பஞ்சம், அண்மைக்கால கவிதைகளில் துடைத்தெறியப்பட்டு செழுமையடைந்து வருவதை அவதானிக்க முடிகிறது. சில கவிதைகள் அழகிய குறும்பா வடிவில் எழுதப்பட்டுள்ளன. தாவணிக்கு , நளீம் இப்படியொரு சிறப்பைத் தருகிறார்.

*"பருவம் வந்ததும் முளைத்த*
*பறக்க முடியாத இறக்கை"*

சொற்தேர்விலும் கவிதையின் மொழி சிலாவகத்திலும், நூலின் தலைப்புக் கவிதையை படிக்கும்போதும் நளீமின் வளர்ச்சியை நம்பிக்கையுடன் பார்க்க வைக்கின்றது. நவீன ஓவியங்களுடன் பரிச்சயமான நளீம் தன் கைப்படவே எல்லாக் கவிதைகளுக்கும் மிகப் பொருத்தமான ஓவியங்களையும் வரைந்திருக்கின்றார். இதுவே கவிதைக்குள் ஒரு கவிதையை சொல்வது.


போர்க்கால உக்கிரத்தில், போரின் அவலங்களையும் மனித வாழ்வின் இருப்பு, சுதந்திரம், விடுதலை குறித்த பலமான கேள்வியுடன் ஆக்கிமிப்புக்கெதிரான போர் முழக்கத்துடன் இக்கவிதைகள் வெளிவந்திருப்பது ஆசுவாசமாகவுள்ளது. மேத்தா, வைரமுத்து, பாணியிலிருந்து இளைஞர்கள் விலகி விசாலித்த வாசிப்புடன், சுயமான பாதை அமைத்து எழுதக் காலூன்றியுள்ளனர் என்பதை நளீமின் "கடைசிச் சொட்டு உசிரில்" படித்த போது தெளிவாகின்றது. ஒரு பலமான குறை - நூலில் அதுவும் கவிதை நூலில் ஆங்காங்கு கவிதைகளில் அச்சுப்பிழை விட்டிருப்பதை மன்னிக்கவே முடியாது!

---

## ஒரு குறிப்பு

### தடத்தின் தடம்?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தின், கலை கலாசார மன்றத்தினால் 'தடம்' என்ற கலை இலக்கிய சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகின்றது. 'இம்மன்றத்தினால் வெளியிடப்படும்




இரண்டாவது இதழ் (சுவடு- 2) அண்மையில் வெளியிடப்பட்டது. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்களின் ஆதரவுடன் கோமதி புலேந்திரனை இதழாசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ளது. வரவேற்கப்பட வேண்டிய முயற்சி.

இவ்விதழில் 'படைப்பும் பார்வையும்' (ஜி. நாகராஜனின் படைப்புக்கள் பற்றிய விமர்சனம்) என்ற பேராசிரியர் சி.சிவசேகரம் எழுதிய கட்டுரையும், 'ஈழத்தில் நவீன தமிழ்க் கவிதையின் தோற்றம் - செ.யோகராசா எழுதிய கட்டுரையும்,'மரபு வழித்தமிழ் சமய, கலாசாரத்திற்கு ஒருவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை' என்ற க.சொக்கலிங்கம் எழுதிய கட்டுரையும், 'ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சி' என்ற கந்தையா ஸ்ரீகணேசன் எழுதிய கட்டுரையும் வெளிவந்த கட்டுரைகளில் குறிப்பிடத்தக்க கட்டுரைகளாகும்.

ஆபிரிக்க கவிதைகள் மூன்று என்ற சோ.பத்மநாதன் எழுதிய கட்டுரையும் குறிப்பிடத்தக்கது.

இதைத் தவிர இன்னும் பலரின் கட்டுரைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

இத்துடன் பல நல்ல கவிதைகளும், சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன.

அந்தோனிப்பிள்ளை நிஸாந்தன், செல்வராஜா சதீஸ்குமார், போன்றரது கவிதைகள் குறிப்பிடத்தக்க நல்ல கவிதைகளாகும்.

'நிதர்சனத்தின் புத்திரர்கள்' என்ற கந்தையா ஸ்ரீகணேசன் எழுதிய நாடகம் ஒரு நல்ல முயற்சியாகும்.

இந்த முயற்சியைப் பாராட்டும் அதேவேளை வளர்ந்து வரும் மாணவர்களின் சூழலில் வெளிவருகின்ற சஞ்சிகை என்ற அளவில் அதன் மீதான சில அவதானங்களையும் குறித்து வைப்பது சரியாகும் என்று நினைக்கிறேன்.

யுத்தமும், அது சார்ந்த தாக்கங்களுடனும், அச்சூழலில் வாழும் இம்மாணவர்களுடைய முயற்சி ஆரோக்கியமானது தான்.

எனினும் இதில் வெளிவந்திருக்கும் சில கட்டுரைகள் பெண்ணிலைவாதம் பேசுபவர்களை கொச்சைப்படுத்தி வேலை இல்லாதவர்களினதும், திமிர் செருக்குப் பிடித்தவர்களினதும் பிதற்றல் தான் பெண்ணிலைவாதம் என்று சொல்ல வருகின்றது. அகளவன் உம் தடம் சஞ்சிகைக்கான தனது பேட்டியில் இதனையே உளறுகிறார்.

தஸ்லிமா நஸ்ரீன் என்ன எழுதினார். அவரது கருத்து என்ன என்பதை அவரது படைப்புகள் மீதான விமர்சனமாக வைக்கலாமே தவிர அதை வைத்துக் கொண்டு

⇨ 19

நன்றி - நூலகத்திட்டம்




# 'கை கொடுக்கும் கை' கை கொடுக்குமா?

நான் சரிநிகர் பத்திரிகையின் நீண்ட நாள் வாசகன். இதில் இடம் பெறும் அரசியல், சமூகம், சார்ந்த அனைத்து விடயங்களும் நன்றாக அமைந்து வருகிறது. இனியும் அமையும் என எதிர்பார்க்கிறேன். இன்றுள்ள பத்திரிகைகளில் சில அரச சார்பானவையாக-வும், சில வியாபாரத்திற்காகவும், இன்னும் சில கட்சிச் சார்பானவையாகவும் மாறி மக்களை ஏமாற்றி திசை திருப்புகின்றன. இந்த வகையான பத்திரிகைகளுடன் ஒப்பிடும்போது சரிநிகர் எப்போதும் சரிநிகர் தான். உங்கள் சேவை பாராட்டிற்கு உரியது. சில உண்மை-களை எழுதும் பொழுது சிலருக்கு அது பக்கச் சார்பானது போல தோன்றலாம். ஆனால், உங்கள் பணி எம்மக்களின் பணி. இது தொடர்ந்தும் எம்மக்கள் சார்பாக ஒலிக்க வேண்டும் என்பதே எனது அவா!

தனியார் வானொலி சேவை ஒன்றில் இப்படி ஓர் விளம்பரம் "சக்தியின் கை கொடுக்கும் கை" நீங்கள் கொள்வனவு செய்த குறித்த ஓர் தொகைக்கு உட்பட்ட (1000/- - 2000/-) பொருட்களிற்கான பற்றுச் சீட்டை அனுப்பி வெற்றியாளர் ஆகுங்கள். ஒவ்வொரு நாளும் 10 பேர் வீதம் தெரிவுசெய்யப்பட்டு அவர்களின் பற்றுச் சீட்டிற்கான பணம் வழங்கப்படும்" இவ்வாறு சொல்கிறது.

இன்று எம்மக்கள் எமது தேசத்தில் பல்வேறு வகையான கைதுகள், சித்திர-வதைகள், பசி, பட்டினி போன்ற பல்வேறு அடக்கு முறைகளை சந்தித்துக் கொண்டும், அதற்கு எதிராகப் போராடிக் கொண்டும் வருகிறார்கள். இவர்கள் இதன் காரணமாக அகதி முகாம்களிலும், சிறையாக்கப்பட்ட சொந்த வாழிடங்களிலும் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் இன்று உள்ளது. இவ்வாறு வாழ்பவர்கள் ஒருவேளை உணவிற்குக் கூட வசதி-யற்றவர்களாக உழை-த்து உண்ணக் கூட அனுமதி மறுக்கப்-பட்டவர்களாக-வும், அரசின்



அற்பமான நிவாரணத்தைப் பெற்று வாழ்க்கை நடத்த வேண்டியவர்களாகவும், மருத்துவ வசதிகள் இன்றி சுயதேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாதவர்களாயும் வாழும் எம்மக்கள் எந்தப் பற்றுச்சீட்டை அனுப்பிப் பரிசைப் பெறுவது?

இவ்வாறு வழங்கப்படும் பரிசானது மூன்று வேளை உணவைத் திருப்தியாக உண்டு, நேரத்தை எவ்வாறு செலவழிப்பது என்று தெரியாது, நாட்டு நடப்பை மறந்து சினிமா, கேளிக்கைகள், கிரிக்கெட், இசை நிகழ்ச்சி என்பவற்றிற்காக தொலைக்காட்சி, வானொலி முன்பாக 24 மணிநேரமும் தவம் கிடப்பவர்களுக்குப் பொருந்தும். ஆனால், அல்லலுறும் எம்மக்களின் சிந்தனை எல்லாம் நாம் சுதந்திரமாக எமது சொந்த தேசத்தில் வாழ்வது எப்போது என்பது தான். அவர்-களுக்கு ஏது நேரம் இவ்வாறான விளம்பரங்-களைக் கேட்டு பரிசைப் பெற, அல்லது ஏது பணம் பற்றுச் சீட்டுப்பெற?

இன்று 24 மணிநேரமும் வானொலி தொலைக்காட்சி சேவைகளுடன் ஊறி திளைத்-திருப்பவர்கள் இதுவரை இவற்றிடம் இருந்து பெறமுடிந்தது ஆக பணமுடிப்புக்களும், பரிசுப் பொருட்களும் மட்டுமே. ஆனால், இழந்தது, இழந்து கொண்டு இருப்பது போராட்டம் பற்றிய சிந்தனையை அல்லவா? இந்த தொலைக்காட்சி, வானொலி நிறுவனங்-கள் சாதிக்க நினைப்பது எல்லாம்' எம்மக்-களை சிந்திக்க நாதியற்றவர்களாக மாற்றுவது தானா?

இன்று போட்டி போட்டுக் கொண்டு தோன்றியுள்ள பல இலத்திரனியல் ஊடகங்-களின் நோக்கம் பணம்திரட்டுவதும், மக்களின் சிந்தனையை மாற்றம் செய்வதும் தான். இதற்காக வெளிநாட்டவர்களின் இசை நிகழ்ச்சி நாடக, நாட்டிய கேளிக்கைகள், சினிமா போன்ற பல நிகழ்ச்சிகள் மூலமும் விளம்ப-ரங்கள் மூலமும் தமது நோக்கத்தை நிறை-வேற்றி வருகின்றன.

இவ்வாறு பெறும் பணத்தின் ஒரு பகுதி-யையாவது அல்லலுறும் எம் தமிழ் மக்களுக்-காக ஒதுக்குவார்களா இவர்கள்?

அதை விடுத்து மக்களை 24 மணி நேரமும் தம்மோடு சேர்த்து வைத்திருக்கப் பரிசு மழை பொழிவானேன்? அடுத்து இவ்-வாறான பரிசுப் பொருட்கள் எந்தத் தரத்தில் எந்நிலையில் உள்ள மக்களைச் சென்று அடைகின்றன என்பது நோக்கப்பட வேண்டிய ஒன்று.

அண்மையில் எமது பிரதேசமெங்கும் சூறாவளி தாக்கத்தால் பல்லாயிரம் மக்களை மீண்டும் அகதிகளாயினர். பலர் சொத்துக்-களை, வீடுகளை இழந்தனர். இவர்களுக்கு உதவ ஒரு "கை கொடுக்கும் கை"இல்லையே.

இவ்வாறான தொலைக்காட்சி வானொலி சேவைகளினால் மக்களை ஒரு சொற்ப-நேரத்திற்கு இன்ப மூட்டலாம். ஆனால், இச்-செயற்பாடு இதுவரை எம்மக்கள் எவற்றை எல்லாம் இழந்து எந்த தேசத்திற்காக போராடி வருகிறார்களோ அவற்றை எல்லாம் எம்-மக்களின் சிந்தனையில் இருந்து மழுங்கச் செய்வதுடன் படிக்கும் மாணவர் தொடக்கம் சகல தரத்திலும் உள்ள மக்களிடையே ஒரு வித சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தி அவர்களின் கல்வி கலாசார சீர்கேட்டிற்கும், நடக்கும் போராட்டம் தொடர்பான சிந்தனையை திசைதிருப்பவும் அவற்றினூடாக இப்-போராட்டம் தேவையை தேவையற்ற ஒன்று எனவும் எண்ணத் தோன்றச் செய்யவும் மேற்கொள்ளப்படும் முயற்சி என்று கூறப்-படுவதில் எதுவித ஐயமும் கொள்ளத் தேவை இல்லையோ?

த.கோ.கோணேஸ்வரன்,
திருமலை

# அறிவுஜீவிகளுக்குத் துணிச்சல் இல்லை!

சமீபத்தில் நடந்த இரண்டு நிகழ்வுகள் என் மனதில் உருவாக்கிய உணர்வுகளை சரிநிகருடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். ராதிகா குமாரசாமி தனக்குக் கிடைத்த ஐ.நா. விருதை ஒட்டி ஆற்றிய உரையில் அந்த விருதை நீலன் திருச்செல்வத்திற்கு சமர்ப்பித்து இருந்தார். பல இனம், பல கலாசாரத்தைச் சேர்ந்த மக்கள் அமைதியாக, ஒற்றுமையாக வாழும் இலட்சியக் கனவு தொனிக்க வாழ்ந்த-வராக தலைவணங்கி அவருக்கு விருதை சமர்ப்பணம் செய்திருந்தார்.

ஏறக்குறைய இந்தச் செய்தி வெளிவந்த அதே நேரத்தில் மலையகத்தில் பிந்துனுவெவ-வில் தடுத்து வைக்கப்பட்ட தமிழர்களைச் சிங்களவர்கள், கல்லால் தாக்கி சித்திரவதை செய்து கொடூரமான முறையில் கொன்று போட்ட செய்தியையும் படிக்க நேர்ந்தது.

ராதிகா குமாரசாமி போன்றவர்கள் உண்மையில் தமிழர்களோ சிங்களவர்களோ இலங்கையர்களோ இல்லை. நிலைமைக்குத் தக்கவாறு தங்கள் குணத்தை மாற்றி ஆதாயம் தேடும் பச்சோந்திகள். இலங்கைத் தோல் போர்த்திய, அதிகார மமதை தலைக்கு ஏறிய மேல்தட்டு வர்க்கத்தின் சரியான பிரதிநிதிகள்.

இவர்களுக்கு இலங்கையைப் பற்றியோ, இலங்கை மக்களது வாழ்க்கை பற்றியோ ஒன்றுமே தெரியாது. இவர்களுக்குத் தெரிந்த-தெல்லாம் வறட்டு வேதாந்தம் பேசும் 'அறிவு-ஜீவி' சிந்தனை மட்டும் தான். இந்த வறட்டுக் கும்பலின் தலைவராகும் பேராசையில் இவர்கள் எதையும் தியாகம் செய்யத் தயார்.

ராதிகாவும் அவரைப் போன்ற 'அறிவு-ஜீவி'களும் சந்திரிகா முதல் முறை தேர்தலில் நின்ற போது அவருக்கு வாக்களிக்கச் சொல்லி பிரசாரம் செய்ததை நிறையப் பேர் வசதியாக மறந்து போயிருப்பார்கள். 'அமைதிக்காக போர்' என்ற பம்மாத்து காரணம் சொன்ன போது இவர்களில் ஒருவர் கூட சந்திரிகாவை விமர்சனம் செய்யவோ, தந்த ஆதரவை திரும்பப் பெறவோ, இந்த விஷயத்தில் தாங்கள் செய்த தவறுக்காக மக்களிடம் மன்னிப்பு கேட்பது பற்றியோ யோசித்துக் கூடப் பார்த்ததில்லை. இதுதான் இவர்களுக்கு மக்கள் மீதுள்ள அக்கறை.

ராதிகாவின் உரையைப் படித்த போது இவர் மாதிரியான ஆட்கள் மேற்கத்திய உலகுக்கு தங்கள் நாட்டைப் பற்றிய ஒரு தரப்பு தகவல்களைத் தருவதன் மூலம் தங்கள் அற்ப சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதையே தொழிலாகக் கொண்டவர்கள் என்று தோன்றியது. இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்ட போது அவரது மரணத்துக்காக கண்ணீர் சிந்தவோ, வருத்தப்படவோ முடியவில்லை. ஏனென்றால் இவரைப் போன்றவர்கள் மக்கள் மீது மரியாதையும், அக்கறையும் அற்றவர்கள்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இருக்க வேண்டிய பாராளுமன்றத்தில், மக்களால் தேர்ந்தெடுக்கப்படாமல், அதிகார பீடத்தில் உள்ளவர்களைத் திருப்தி செய்ததால் பின்வழியாக இடம் பிடித்த சுயநலவாதிகள். பொது வாழ்வில் நேர்மையற்ற, தங்கள் அதிகார ஆசையைத் தீர்த்துக் கொண்ட ஒருவரை ஒழித்துக் கட்ட, ஒரு குழந்தையைப் பாய வைத்து பலியாக்க நேர்ந்ததற்காக, ஆறாத ரணத்தில் மனம் வலிக்கிறது.

இப்படிப்பட்ட சுயநலவாதிக்கு தனக்குக் கிடைத்த சர்வதேச விருதை சமர்ப்பணம் செய்ததன் மூலம் ராதிகா குமாசாமி மிகவும் தரம் தாழ்ந்து விட்டார். இவரது இந்த கீழ்த்தரமான செய்கையை விமர்சனம் செய்ய எந்த அறிவுஜீவிக்கும் துணிச்சலும் இல்லை. விமர்சனம் செய்வதற்கான விவரமும் போதாது என்பது வெட்கக் கேடான விஷயம்.

ராதிகா குமாரசாமி பெண்ணியவாதியாக இருப்பதற்கு முன் மனிதநேயவாதியாக இருப்பதைப் பற்றி யோசிக்கட்டும். (நான் மனிதர்கள் என்று குறிப்பிடுவது மேல்தட்டு மக்களை அல்ல. சராசரி வாழ்க்கை வாழும் அப்பாவிப் பொது மக்களைத் தான்.)

துணிச்சலுடன்
சோழன் ருத்திரமூர்த்தி
சிகாகோ, அமெரிக்கா

# நம்ப முடியாதது ஆனால் நம்ப வேண்டியது!

சரிநிகர் வெளிவரத் தொடங்கியதிலி-ருந்து படித்து வருகின்ற அதன் வாசகருள் நானுமொருவர். சில இதழ்கள் கிடைக்க வில்லை. நாட்டுச் சூழ்நிலையே அதன் கார-ணம். நூல் நிலையங்களிலும் சில இதழ்கள் கண்களிற்குப் படுவதில்லை.

நினைவுக் குறிப்பு, சிறுகதை, விசித்திர-மான பையன், கவிதைப் பகுதி, மற்றும் ஒரு போராளியின் கதை என்பன நான் விரும்பிப் படிக்கும் அம்சங்கள். நாட்டில் அவ்வப் போது நடக்கின்ற பல திருகு தாளங்களையும் கூட வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறீர்கள். அவ்வகையில் 'திருட்டுக்களும் புரட்டுகளும் செய்வதில் மன்னன்' கட்டுரை விடயம் முற்றிலும் நம்பமுடியாத ஆனால், நம்ப வேண்டிய ஒன்று. சமூகத்தில் பெரிய நமிதன-ராக முத்திரை பெறும் சிலரின் புரட்டுக்களால் யாவர்க்குமே கெட்ட பெயரேற்படும் நிலை-யுருவாகிறது. குஷ்வந்த் சிங்கின் கருத்து முற்-றிலும் சரியே - அவரது அக்கருத்துகளை வெளிப்படுத்தும் ஆங்கிலக் கட்டுரையை நான் படித்தேன். இலங்கையிலிருக்கிற சில விருது வழங்கும் அமைப்புகளையும் கூட கலைத்து விடவேண்டும். குஷ்வந் சிங் சொல்வது போல் தரமான எழுத்தாளருக்கு விருது தேவை-யில்லை தான். ஆனால், தரமானவர்களெல்-லோரும் அவர்கள் எழுத்தாளரோ கலைஞரோ கௌரவம் பெறுவதில்லை. இலை மறை-காயாகவே அவர்களின் இருப்பு உள்ளது.

ச. வினோதினி,
யாழ்ப்பாணம்

## தடத்தின்.........

இன்னும் அவர் படைப்புகள் பற்றிய முழுமையான புரிதல் எதுவுமின்றி கொச்-சைப்படுத்துவதும், இதை வைத்துக் கொண்டே பெண்விடுதலை கதைப்பவர்-களை கொச்சைப்படுத்த நினைப்பதும் ஆரோக்கியமான மாணவ சமுதாயத்தினை வளர்த்தெடுக்க உதவாது.

அதுவும் யுத்த சூழலில் வாழ்ந்து கொண்டு பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகளை உணராது ஆண்நிலைப்-பட்ட கருத்தியலை மாணவிகளே எழுதுவது ஆண்நிலைச் சிந்தனையின் வலிமையைப் புரிய வைக்கிறது. இந்த ஆண்நிலைச் சிந்தனையைக் கேள்வியெழுப்ப வேண்டிய முன்னேறிய மாணவர் குழாமே அதற்குப் பலியாகி விடலாமா?

கடந்த இரண்டு தசாப்தத்தில் ஈழத்தில் பெண்களின் நிலையில் ஏற்பட்ட மாற்றம், பெண்களின் மீதான வன்முறைகளுக்கு எதி ராகப் போராடும் அமைப்புக்கள், மக்களு டைய விடுதலையை நோக்காகக் கொண்டு, ஆண்களுக்கு நிகராக களத்திலும் தளத்தி லும் சாதனை படைக்கும் பெண்கள் இவை யெவையுமே கணக்கெடுக்கப்படவில்லையே ஏன்?

பெண்விடுதலை என்பது தமிழ் சமூகத் தின் உள்ளேயே கொச்சைப்படுத்தப்படுமா-யின், நாளை போராடும் பெண்களை எந்த வகைக்குள் நோக்கப் போகின்றது இச்சமூகம் என்பது ஒட்டு மொத்த தமிழ் சமூகத்தின் மீதான கேள்வியல்லவா?

'தடம்' தடம் புரளலாமா?

## அமெரிக்க விமானக்...

பாசட் அலி அல் மெக்ராகி ஒரே நேரத்தில் மூன்று இடங்களில் எவ்வாறு சமூகமளித்-திருந்திருக்க முடியும்?' என்று கேள்வி எழுப்பியுள்ளார். இச் சம்பவம் தொடர்பாக ஈரான் புரட்சிப் படையினர், பலஸ்தீனக் கெரில்லாக்கள் ஆகியோர் குறித்து ஆரம்-பத்தில் நிலவிய சந்தேகங்களில் அமெரிக்க சி.ஐ.ஏ. பின்னர் ஆர்வம் காட்டவில்லை. ஈரானின் புதிய சீர்திருத்தத் தலைமை மேற்கு உலகுடன் உறவுகளைப் பேணுவதும், மத்தியகிழக்குச் சமாதான முயற்சியில் அமெரிக்காவிற்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் இடையே உறவுகள் வலுப்பெற்றிருப்பதுமே இதற்குக் காரணங்கள் எனக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் லிபியா மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால் ஈரான் 'ஹஜ்' யாத்திரிகர்களின் விமானத்தை சுட்டு வீழ்த்தியதுடன், லிபியத் தலைநகர் திரிப்-போலியில் விமானத் தாக்குதல் நடாத்தி கடாபியின் வளர்ப்பு மகளையும் கொலை செய்த அமெரிக்காவை யார், எந்த, நீதிமன் றத்தில் நிறுத்துவது? என்ன தண்டனையை வழங்குவது? என்ற குரல்கள் சர்வதேசத்தின் ஒரு பகுதியிலிருந்து ஒலிக்கத் தொடங்கி யுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

வாரஇதழ்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே" - பாரதி

இல.: 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.

தொலைபேசி, தொலைமடல்: 074-400045

மின்னஞ்சல்: sarini@sltnet.lk

இணையம் : sarinihar.com

## எல்லாவற்றையும் விழுங்கி விடும் போர்!

இலங்கை அரசாங்கம் போரை நிறுத்துவது தொடர்பாக சாதகமான எந்த முடிவையும் நாளதுவரை எடுத்ததாகத் தெரியவில்லை. நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இங்கு வந்து நின்று எவ்வளவோ முயன்ற போதும், போர் முனைப்பைவிட விட்டுக் கொடுக்கும் ஆர்வமோ விருப்பமோ அரச தரப்பிலிருந்து இன்னமும் வெளிப்படவில்லை.

புலிகளைப் பிரித்தானிய தடை செய்து விட்டால், எப்படியாவது அவர்களை வழிக்குக் கொண்டு வந்துவிட முடியும் என்ற நம்பிக்கை. அதற்கு முதலில் இந்தியாவும் பிறகு பாகிஸ்தானும் புலிகளை ஒடுக்கும் 'பயங்கரவாதத்திற்கெதிரான' யுத்தத்திற்கு ஆதரவாக உதவி வழங்கியிருக்கின்றன. இந்தியா நிவாரண உதவிகட்கென உதவி வழங்கியது என்றால், பாகிஸ்தானோ ஆயுதக் கொள்வனவுக்காக என்று கூறியே 20 பில்லியன்களை அள்ளி வீசியிருக்கிறது. ஆனால், போர் நாளுக்கு நாள் ஒரு இரத்தக் கட்டேறி போல மக்களின் உதிரத்தையும், வாழ்வையும் குடித்துக் கொண்டே இருக்கிறது.

கடந்த இரண்டு தசாப்தகால யுத்தத்தின் மனித அழிவுகள் அல்லது சிதைவுகள் பற்றிய கணக்கெடுப்பு ஒன்று கிட்டத்தட்ட 60,000 உயிர்களைப் பலிவாங்கியுள்ளதாக தெரிவிக்கிறது. இவற்றில் கிட்டத்தட்ட 35,000 பேர் போக ஏனையவர்கள் சிவிலியன்களாகவே இருக்க வேண்டும் என்று அந்தக் கணக்கெடுப்புக் கூறுகிறது.

புலிகளதும், அரச படையினதும் இறப்புக்கள் தொடர்பான உத்தியோகபூர்வ கணக்கெடுப்பு 1998 வரை 30,000 என்று தெரிவிக்கப்படுகிறது. ஆயுதப் படையிலிருந்து காணாமல் போனோர் தொகை 1999வரை 3800 பேர் என்கிறது. புலிகள் தரப்பு இழப்பு என்று அரசு கூறும் தொகை 18,000 ஆக இருக்கும் அதேவேளை 2000 வரையான தமது இழப்பு 16,333 என்று புலிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் போரின் கொடூரம் என்னவென்றால் இன்றுவரை போரில் ஈடுபடுபவர்களில் ஒரு சிலர் மட்டுமே உயிருடன் போர்க் கைதிகளாக கைப்பற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதே. இந்தப் போரில் வெளிப்படும் வன்முறையானது எந்தவிதமான பாராபட்சமுற்ற கொலைகளை, ஆயுதமேந்தாதவர்கள் மீது இரு தரப்பும் செய்கிற நிலைக்கு வளர்ந்து விட்டிருக்கிறது. ஒருவரது சராசரி வாழ்வுக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிட்டால் இதுவரை காலப் போரானது 1.8 மில்லியன் வருட வாழ்க்கைக் காலத்தை விழுங்கி விட்டுள்ளது. இந்த யுத்தத்தினால் கிட்டதட்ட 55,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அந்தக் கணக்கெடுப்பு மேலும் தெரிவிக்கிறது.

இந்தப் போரினால் ஊனமுற்றோர் தொகை 15,000 அளவுக்கு வளர்ந்து விட்டிருக்கிறது. இந்தத் தொகையை விடவும் அதிகமாகவும் இருக்கக் கூடும். சரியான கணக்கெடுப்புச் செய்யப்படாதவரை கிடைத்த தகவல்களை வைத்து மதிப்பிடப்பட்ட தொகையான இதையே ஓரளவுக்கு உண்மைக்கு கிட்டவானது எனக் கொள்ள முடிகிறது.

இதைத்தவிர யுத்தப் பிரதேசங்களில் கணவனை இழந்த பெண்கள் குடும்பத் தலைவர்களாகும் தொகையின் அளவு பாரிய அளவில் அதிகரித்துள்ளது: இவர்கள் இராணுவத்திலும் புலிகளிலும் இருந்து இறந்தவர்களதும், யுத்தத்தின் போது அநியாயமாக கொல்லப்பட்டவர்களினதும் மனைவிமார்களாவர். தவிரவும், 1998வரை 180,000 குடும்பங்கள் தமது வீடு வாசல்களை இழந்துள்ளன. இவர்களில் 140,000 பேர்வரை அகதி முகாம்களில் வாழ்கின்றனர். தவிரவும், போரின் இன்னொரு முக்கியமான பரிமாணம் தான் கிட்டத்தட்ட 200,000 குழந்தைகள் / சிறுவர்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருப்பது.

இத்தனை கொடுமையும், நாட்டின் எதிர்காலச் சந்ததியையே நோய்க் கூறாக்கிக் கொண்டிருப்பதுமான இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வருவது வெறும் அரசியல் விடயமோ, பொருளாதார விடயமோ மட்டுமல்ல, இது சமூக வாழ்வின் மனித உயிர்களின் வாழ்க்கை விழுமிங்கள் பற்றிய ஒரு விடயமும் கூட.

இலங்கை அரசு போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை என்பவற்றை வெறும் அதன் அரசியற் பரிமாணத்தில் மட்டும் வைத்து நோக்குகிறது. அது சமூக அழிவுகள் குறித்து அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. சர்வதேச சமூகமும், இலங்கை வாழ் அனைத்து இனமக்களும் இந்த சமூகப் பேரழிவுக்கு எதிரான வன்முறையை நிராகரிக்கிற ஒரு முடிவுக்கு அதை உந்தித் தள்ளும் முயற்சியில் இறங்க வேண்டும். அப்போது தான் நாட்டில் உண்மையான சமாதானத்திற்கும் நிம்மதிக்குமான கதவுகள் திறந்து கொள்ள முடியும்.

சொல்ஹெய்ம் வெற்றி பெறலாம், தோற்றுப் போகலாம். அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகள் தமது குறிக்கோள்களில் வெல்லவோ தோற்கவோ செய்யலாம்.

ஆனால், அவர்களது வெற்றியும் தோல்வியும் ஒரு பரிமாணத்தை மட்டும் கொண்டவை. அவர்கள் தோற்றால் தோற்பது அவர்களது பொருளாதார நலன்கள் மட்டுமே.

ஆனால், நாம்..?

நாம் எல்லாவற்றையும் இழப்போம். போர் எம் எல்லாவற்றையும் விழுங்கிவிடும்.

இதை முடிவுக்கு கொண்டுவர நாம் ஒவ்வொருவரும் செய்யப் போவது என்ன?

வவுனியா –

## வாருங்கள் என அழைத்தனர் வந்தவர்களுக்கு நடந்ததென்ன?

– கே.ஆர்.

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் உள்ள நலன்புரி நிலையத்தில் எட்டாம் யுனிட்டில் வசித்து வந்த ஒருவர் மன்னார் நாசகாரத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து இடம் பெயர்ந்து 98ஆம் ஆண்டு வவுனியாவிற்கு வந்து அங்கு வசித்து வருபவர் மாரிமுத்து சுஜீவன் (23). இவருக்கு மனைவியும் இரண்டு பிள்ளைகளும் உள்ளனர். குடும்பத்தின் செலவுகளை சமாளிப்பதற்காக சிறு வியாபாரத்தில் ஈடுபட்டு வருபவர்.

கடந்த ஜன. 17 ஆம் திகதி வவுனியாவிலிருந்து மன்னார் சென்று, மன்னாரில் தங்கியிருப்பதற்கான வதிவிட அனுமதியைப் பெறுவதற்குச் சென்ற வேளையில் மன்னார் நாசகாரத் தடுப்புப் பொலிசார் இவரை கைது செய்துள்ளனர். கைது செய்த அன்றே இவர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். நிர்வாணமாக்கி கண்களைக் கட்டி வைத்து கடுமையாகத் தாக்கியுள்ளனர் பொலிஸார். வவுனியா பூந்தோட்டம் பகுதியில் பொலிசார் வந்து கொண்டிருந்த பேரூந்து மீதான கண்ணிவெடித் தாக்குதலில் தொடர்பு கொண்டிருந்தவர் என்ற சந்தேகமே இவர் கைதாகக் காரணம்.

மன்னாரில் வைத்து பொலிஸார் தாக்கும் போது இவருடைய வலது கை மூட்டு கழன்று விட தாக்கிய பொலிஸாரே கையைப் பொருத்த முற்பட்டுள்ளனர்.

18 ஆம் திகதி இரவு வரை மன்னாரில் வைத்து தாக்கிய பின்னர் மறுநாள் 19 ஆம் திகதி இரவு கண்களைக் கட்டியபடி வவுனியாவிற்கு கொண்டு வந்த பொலிஸார் சிங்களக் கிராமம் ஒன்றிற்குக் கொண்டு சென்று கழன்ற கையைப் பொருத்தியுள்ளனர்.

பின்பு 20 ஆம் திகதி ஏற்கனவே கேட்கப்பட்ட கேள்விகளையே கேட்டு வவுனியாவில் வைத்தும் நாசகாரத் தடுப்புப் பிரிவினர் தாக்கியுள்ளனர். எப்படித் தாக்கிய போதும் தான் ஒரு அப்பாவி என்று சொல்வதைத்தவிர அவரால் வெறெதையும் சொல்ல முடியவில்லை. பொலிஸாரின் தாக்குதலினால் இவரின் உடல் நிலை மோசமாகியதை அடுத்து தனியார் வைத்தியசாலைக்குக் கூட்டிச் சென்று மருந்து எடுத்துக் கொடுத்துள்ளனர்.

அதன் பின்னரும் இவரின் உடல் நிலை மோசமாக இருந்ததால் ஜன.24 ஆம் திகதி வவுனியா அரச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சிகிச்சையளித்தனர். சிகிச்கையின் போதும் இவருடய கால்கள் கட்டிலுடன் பிணைக்கப்பட்டே இருந்தன.

வவுனியா வைத்தியசாலையில நான்காம் இலக்க வார்ட்டில் தங்கவைக்கப்பட்டு சிகிச்சை வழங்கிய போதும் உடல்நிலை மோசமாகவே இருந்துள்ளது. சற்று உடல் வலி-குறைந்த நிலையில் ஜன.31 ஆம் திகதி வைத்தியசாலையிலிருந்து இவரைப் பொலிஸார் மீளவும் அழைத்துச் சென்றுள்ளனர். ஆனால் வைத்திய அறிக்கை எதுவும் பெறப்படவில்லை. அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக இவர் அழைத்துச் செல்லப்பட வேண்டும் என வவுனியா வைத்தியசாலை வைத்தியர்கள் அறிவுறுத்தியும் இவர் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு பொலிஸாரால் அழைத்துச் செல்லப்படவில்லை வைத்தியசாலையிலிருந்து இவரை அழைத்துச் சென்ற பொலிஸார் பெப். 08 ஆம் திகதி வவுனியா மாவட்ட நீதிமன்றில் வைத்து எதுவித குற்றச்சாட்டுக்களுமின்றி இவரை விடுதலை செய்துள்ளனர். தற்பொழுது இவர் உடல்நிலை மோசமான நிலையில் இருக்கின்றார்.

இப்போது சுஜீவனுக்கு ஒரு கை இயலாத நிலையிலுள்ளது. தொழில் எதுவும் செய்யமுடியாதபடி கை, கால்கள் நடுங்குகின்றன. தீராத தலையிடி, வலது கை கழன்றதால் அதன் வலி தீர்ந்தபாடில்லை இதற்கு யார் பொறுப்பு? அவரது இரண்டு பிள்ளைகளையும், மனைவியையும் எப்படி உழைத்துக் காப்பாற்ற முடியும்?

96ஆம் ஆண்டு விமானப்படையினரின் உலங்கு வானூர்தி மூலம் துண்டுப்பிரசுரங்கள் போடப்பட்டு வவுனியாவிற்கு வாருங்கள்! வந்து பாருங்கள்!! மக்களை பாதுகாப்பாக வைத்திருக்கப் போகின்றோம் எனப் பிரசாரம் செய்ததை நம்பி வந்த சுஜீவனுக்கோ அல்லது சுஜீவன் போன்றோருக்கோ இந்த அரசு என்ன பதில் கூறப்போகின்றது?

### மனோகரி சரவணமுத்துவின் மரணம்



படுகொலை செய்யப்பட்ட பிரபல பத்திரிகையாளர் ரிச்சர்ட் டி சொய்சாவின் தாயாரான டொகடர் மனோராணி சரவணமுத்து பெப. 13ம் திகதி மரணமடைந்தார்.

பெண்கள் உரிமைகளுக்காகவும் 1990களின் முற்பகுதியில் தமது கணவன்மார், பிள்ளைகள், பெற்றோர் காணாமல் போன, கடத்திச் செல்லப்பட்ட பெண்களுக்காகவும் இவர் குரல் கொடுத்து வந்தார். அத்தோடு அன்னையர் முன்னணியின் தலைவியாகவும் இன நல்லிணக்க அமைச்சின் ஆலோசகராகவும் செயற்பட்டு வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மகனின் கொலைச் சந்தேக நபர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பையும் மனோராணி ஆற்றியுள்ளார்.

மனித உரிமைகளுக்காகவும், பெண்கள் உரிமைகளுக்காகவும், குரல் கொடுத்து வந்த ஒரு சிறந்த பெண்மணியின் இழப்பு வருந்தத் தக்கது.

### வாசக அன்பர்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

நாம் புதிய முகவரிக்கு மாற இருப்பதால் அடுத்த இரு வாரங்களும் சரிநிகர் வெளிவரமாட்டாது. அடுத்த 223வது இதழ் மார்ச் 11ம் திகதி உங்கள் கைகளிற் கிடைக்கும். எமது புதிய முகவரியை அந்த இதழில் அறிவிக்கிறோம். அதுவரை இதே முகவரியில் எங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

ஆ-ர்

இன்றைய காலத்தின் நிகழ்ச்சி

இது!

பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு ரி.என்.எல். தொலைக்காட்சியில் விழிப்பு நிகழ்ச்சியைப் பாருங்கள்




செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு

ரி.என்.எல் தொலைக்காட்சியில்

எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!

இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு

இளையவர்களின் பணி !!!

சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது

ஆசிரியர் : பா.வசந்தன், வெளியீட்டாசிரியர் : எஸ்.கே.விக்னேஸ்வரன், 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட. அச்சுப்பதிவு : நவமக, 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 15.02.2001